தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

# ஆண்டறிக்கை



# 2023

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

# உள்ளடக்கம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## ஆண்டின் சிறப்பம்சங்கள்


செயலாற்றல் சிறப்பம்சங்கள் 1

நிதிசாரா சிறப்பம்சங்கள் 2

2023 வருட நிகழ்வுகள் 3


## நிறுவனம்சார் கட்டமைப்பு


எமது தத்துவம் 5

கூட்டிணைந்த ஆளுகை 6

தே.நீ.வ. சபையின் இடர் முகாமைத்துவ குழு 8

பணிப்பாளர்களின் பிரகடனம் 8

அமைச்சின் செயலாளரின் செய்தி 9

தலைவரின் செய்தி 10

பணிப்பாளர் சபை 11

சிரேஷ்ட முகாமையாளர்கள் 14


## செயற்பாடு மற்றும் செயற்திறன் தொடர்பான கண்ணோட்டம்


கூட்டிணைந்த திட்ட அமுலாக்கம் 21

முதலீடுகளின் தொகுப்பு 21

செயற்பாடுகளின் தொகுப்பு 23

நிறுவன இடர் முகாமைத்துவம் 25

வருடாந்திர செயற்திறன் மதிப்பாய்வு கூட்டம் 25

நிதிச் செயற்திறன் பகுப்பாய்வு 26

செயற்பாட்டுச் செயற்திறன் பகுப்பாய்வு 27

## செயற்பாட்டுத் துறைகள் மற்றும் பிரிவுகள்


| | |
|---|---|
| நீர் வழங்கல் திட்டங்கள் | 29 |
| கூட்டிணைந்த திட்டமிடல் | 29 |
| அபிவிருத்தி | 30 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 31 |
| வணிகம் | 31 |
| விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம் | 32 |
| சக்தி முகாமைத்துவம் | 32 |
| தகவல் தொழில்நுட்பம் | 33 |
| ஆய்வுகூட சேவைகள் | 33 |
| நீர் மறுசீராக்கம் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) | 34 |
| சிறுநகர, கிராம நீர் மற்றும் சுகாதாரம் | 35 |
| நிலக்கீழ் நீர் | 35 |
| சொத்து முகாமைத்துவ பிரிவு | 36 |
| வருமானமற்ற நீர் | 36 |
| வாடிக்கையாளர் சேவை - அழைப்பு மையம் | 36 |
| மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி | 37 |
| நீரிற்கான காணி | 38 |
| நிறுவனத் தொடர்பாடல் | 38 |
| நீர் மற்றும் சுகாதாரவேற்பாட்டுக்கான விசேட நிலையம் | 39 |


## நாட்டிற்கான நீர் வழங்கல் உத்திகள்


| | |
|---|---|
| நிறைவுசெய்யப்பட்ட திட்டங்கள் | 42 |
| நடைமுறையில் உள்ள திட்டங்கள் | 48 |
| தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் | 48 |
| பிராந்திய சேவை நிலையங்கள் | 50 |
| நிலைபேறான மற்றும் அவசரகால பொறுப்பு | 57 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 59 |
| நிதியியல் கூற்று | 61 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 93 |
| சுருக்க வடிவங்கள் | 121 |

அட்டவணை 01 : நிதிச் செயற்திறன்
அட்டவணை 02 : நிதி நிலை
அட்டவணை 03 : தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்
அட்டவணை 04 : இலாப விகிதாசாரங்கள்
அட்டவணை 05 : சேவை நிலை மேம்பாடுகள்
அட்டவணை 06 : கையிருப்புச் செயற்திறன்
அட்டவணை 07 : விநியோகத்தர்கள்
அட்டவணை 08 : பணியாளர்களின் நன்மைகள்
அட்டவணை 09 : பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் வரவு
அட்டவணை 10 : இடர் முகாமைக் குழு கூட்ட வரவு
அட்டவணை 11 : அபிவிருத்தித் திட்டங்களின் மீதான முதலீட்டின் தொகுப்பு
அட்டவணை 12 : திறைசேரி நிதி முதலீட்டு விபரங்கள்ள
அட்டவணை 13 : அபிவிருத்தித் திட்டங்களின் மீதான முதலீட்டின் தொகுப்பு
அட்டவணை 14 : முக்கிய புள்ளி விவரம் - நீர், நீர் மறுசீராக்கம் அத்துடன் மற்றவை
அட்டவணை 15 : இணைப்புகளின் எண்ணிக்கை
அட்டவணை 16 : திறைசேரி முதலீட்டுத் திட்டங்கள்
அட்டவணை 17 : சபையின் முதலீட்டுத் திட்டங்கள்
அட்டவணை 18 : உள்ளூர் வங்கி முதலீட்டுத் திட்டங்கள்
அட்டவணை 19 : அபிவிருத்திப் பிரிவால் மேற்கொள்ளப்படும் முக்கிய செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள்
அட்டவணை 20 : மின்சார நுகர்வு 2023 விவரங்கள்
அட்டவணை 21 : 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் (நீர் மறுசீராக்கம்)
அட்டவணை 22 : நிலத்தடி நீர் பிரிவால் மேற்கொள்ளப்படும் முக்கிய செயல்பாடுகள்
அட்டவணை 23 : NRW செயற்பாடுகளுக்கு பொறுப்பான நபர்
அட்டவணை 24 : உள்ளகப் பயிற்சிகள்
அட்டவணை 25 : நாட்டிலுள்ள பிற பயிற்சி நிறுவனங்களினூடாக பயிற்சிகள்
அட்டவணை 26 : வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பயணங்கள்
அட்டவணை 27 : குறுகிய காலப்பயிற்சி விவரங்கள்
அட்டவணை 28 : தொழிற்துறை பயிற்சிகள்
அட்டவணை 29 : நடைமுறையில் உள்ள திட்டங்கள்
அட்டவணை 30 : பிராந்திய சேவை நிலையங்களின் விபரம்
அட்டவணை 31 : கணக்காய்வுக் குழுவின் வரவு அறிக்கை

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்பத்தில் பொது வேலைகள் திணைக்களத்தின் (PWD) கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் சட்டத்தால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

# அறிக்கையின் அறிவிப்பு

கௌரவ ஜீவன் தொண்டமான், பா.உ
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்
நீர் வழங்கல் அமைச்சு,
லக்திய மெதுர,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

**ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்று விபரங்கள் - 2023**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் பிரகாரம், 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையும் நிதிக் கூற்று விபரங்களும் சபை உறுப்பினர்களால் இத்தால் கௌரவத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்படி இலங்கையில் உள்ள பொது நிறுவனங்களின் வருடாந்த அறிக்கையானது, கணக்காய்வாளர் நாயகத்தால் பணிப்பாணை வழங்கப்பட்ட கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்குவதன் மூலம் நிதி முகாமைத்துவம் மற்றும் செயற்திறனில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு முக்கியமான பொறுப்புக்கூறல் பொறிமுறையாக காணப்படுகின்றது.

இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள,



நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை



"ஆயிரக்கணக்கானோர் காதல் இல்லாமல்
வாழ்ந்திருக்கிறார்கள், ஆனால் நீர்
இல்லாமல் ஒருவர் கூட வாழமுடியாது."

டபிள்யூ. எச். ஓடன்

# ஆண்டின் சிறப்பம்சங்கள்

# செயலாற்றல் சிறப்பம்சங்கள்

## நிதி

அட்டவணை இல 01

| நிதிச் செயலாற்றல் | | 2023 | 2022 | வ.வ மாற்றம் |
|---|---|---|---|---|
| வருமானம் | ரூபா. '000 | **61,852,288** | 35,464,466 | 26,387,822.00 |
| மொத்த இலாபம் | ரூபா. '000 | **29,008,505** | 12,319,911 | 16,688,597.00 |
| செயற்பாட்டு இலாபம் | ரூபா. '000 | **17,113,821** | (789,334) | 17,903,155.00 |
| வரிக்கு முன்னரான இலாபம் | ரூபா. '000 | **5,286,525** | (2,699,807) | 7,986,332.00 |
| வரிக்கு பின்னரான இலாபம் | ரூபா. '000 | **5,286,525** | (2,699,807) | 7,986,332.00 |

அட்டவணை இல 02

| நிதி நிலைமை | | 2023 | 2022 | வ.வ மாற்றம் |
|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா. '000 | **92,992,551** | 92,040,468 | 952.083.00 |
| மொத்த சொத்துக்கள் | ரூபா. '000 | **987,027,797** | 956,570,879 | 30,456,919.00 |
| மொத்தக் கடன் | ரூபா. '000 | **321,825,078** | 334,844,033 | (13,018,955.00) |
| உரிமை மூலதனம் | ரூபா. '000 | **565,914,456** | 531,865,490 | 34,048,966.00 |
| கடன் / உரிமை மூலதனம் | % | **57%** | 63% | (6.00 %) |
| கடன் / மொத்த சொத்துக்கள் | % | **33%** | 35% | (2.39 %) |

அட்டவணை இல 03

| தொழிற்படு மூலதன முகாமைத்துவம | | 2023 | 2022 | வ . வ மாற்றம் |
|---|---|---|---|---|
| பொருளிருப்பு | நாட்கள் | **212** | 191 | (5.00) |
| பெறவேண்டியவை | நாட்கள் | **93** | 93 | - |
| நடைமுறைச் சொத்து விகிதம் | நேரம் | **0.55** | 0.67 | 1.00 |
| விரைவுச் சொத்து விகிதம் | நேரம் | **0.44** | 0.56 | (0.12) |

அட்டவணை இல 04

| இலாபத்தன்மை வீதங்கள் | | 2023 | 2022 | வ.வ மாற்றம் |
|---|---|---|---|---|
| மொத்த இலாப எல்லை | % | **47%** | 35% | 0.34 % |

## செயற்பாடு

அட்டவணை இல 05

| சேவை மட்ட முன்னேற்றங்கள் | | 2023 | 2022 | வ.வ மாற்றம் % |
|---|---|---|---|---|
| மொத்த குழாய்வழி நீர் வழங்கல் பிரதேசம் | % | **61.60%** | 60.2% | 2.30 % |
| i. தேசிய நீர் வழங்கல் சபை | % | **48.10%** | 46.8% | 2.708% |
| ii. சமுகமட்ட அமைப்புகள் மற்றும் ஏனையவை | % | **13.50%** | 13.4% | 0.74 % |
| பாதுகாப்பான நீர் விநியோக எல்லைப் பிரதேசம் | % | **97.30%** | 95.9% | 1.45 % |
| வருமானமற்ற நீர் குறைப்பு விகிதம் | % | **25.32%** | 25.24% | 0.32 % |
| மொத்த உத்தியோகத்தர்/1,000 இணைப்புகள் | | **2.80** | 3.12 | (10.26 %) |
| கட்டண சேகரிப்பு வினைத்திறன் | % | **94%** | 93% | 1.06 % |

# நிதிசாரா சிறப்பம்சங்கள்

## சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

*அட்டவணை இல 06*

| | 2022 | 2023 |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் காரியாலய எண்ணிக்கை | 28 | 29 |
| காசாளர் நிலைய எண்ணிக்கை | 42 | 42 |
| பிராந்திய சேவைகள் நிலைய எண்ணிக்கை | 11 | 11 |

*அட்டவணை இல 07*

| வழங்குனர்கள் எண்ணிக்கை | 2022 | 2023 |
|---|---|---|
| உள்நாடு | 128 | 392 |
| வெளிநாடு | 11 | 20 |







## மனித மூலதனம்

### ஊழியர்கள்

2022: 9,059    2023: 8,471




### ஊழியர் பயிற்சி




### சபை தரத்தினடிப்படையில் நடாத்தப்பட்ட உள்ளக பயிற்சி




## ஊழியர் நலன்

*அட்டவணை இல 08*

| விபரங்கள் | 2022 ரூபா மில்லியன் | 2023 ரூபா மில்லியன் |
|---|---|---|
| சம்பளங்கள் | 15,269 | 11,750 |
| ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு | 1,174 | 1,176 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு | 293 | 294 |
| மொத்தம் | 16,736 | 13,220 |

- ஆண்டின் பொது வருடாந்த உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 37,073.55 செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்காக பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.
- சலுகை வீதங்களில் உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டன.
- சேவையில் உள்ள போதே இறந்த நிரந்தர ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட இறப்பு நன்கொடைகள்.
- ஊழியர்களிற்கு உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது.
- ஊழியர்களிற்காக ரூபா 650 மாதாந்த படிகள் வழங்கப்பட்டது.
- ஊழியர்களிற்காக வெளிவாரி நோயாளர் பிரிவினூடாக சிகிச்சை அளிப்பதற்கான கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 833.33 வழங்கப்பட்டது.
- அரசாங்கம் மூலம் கடன் வசதிகள் வழங்கப்பட்டது.
- வங்கிகள் (மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊடான வீடமைப்பு மற்றும் வாகனக் கடன்கள்).
- பத்துமாதக் கடனிற்கு மேலதிகமாக தே.நீ.வ.வ.சபையால் ஒரு வருட கடன் வசதி வழங்கப்பட்டது. (வட்டி வீதம் 4.2%).
- ஊழியர் ஒருவருக்கு ரூபா 10000 வீதம் பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில் சலுகை வீதத்தில் 317 ஊழியர்களிற்காக 12 மாதக் கடனாக ரூபா 146.39 மில்லியனும் 2718 ஊழியர்களிற்காக 10 மாதக் கடனாக ரூபா 1,083.92 மில்லியனும் வழங்கப்பட்டது.
- தே.நீ.வ.வ.சபை ஊழியர்களுக்காக ரூபா 188 மில்லியன் பெறுமதியான மருத்துவக் காப்புறுதிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றும் அது 1,646 ஊழியர்களுக்கு அவர்களின் மருத்துவச் செலவிற்காக ரூபா 173 மில்லியனாகக் வழங்கப்பட்டது. அத்துடன் 22 ஊழியர்களுக்கு ரூபா 22 மில்லியன் வருடத்தில் மரண இழப்பீடாகக் கோரப்பட்டது.

# 2023 வருட நிகழ்வுகள்

சர்வதேச நீர் மாநாடு 2023, இலங்கை 2023 டிசம்பர் 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் நீர் மற்றும் துப்பரவேற்பாட்டுக்கான விசேட நிலையத்தில் (CEWAS) நடைபெற்றது.













2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர செயற்திறன் மதிப்பாய்வு கூட்டம் (APRM) ஒக்டோபர் 26, 2023 வியாழன் அன்று காலி வீதி இரத்மலானையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (NWSDB) தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.







"கிணறுகள் வற்றும்போதுதான்,
தண்ணீரின் மதிப்பு எங்களுக்குத்
தெரியவரும்."

பெஞ்சமின் பிராங்க்ளின்

# நிறுவனக் கட்டமைப்பு

# எமது தத்துவம்

## நோக்கு



தொழில்நுட்ப மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையின் அதி உன்னத பொது வசதிகள் நிறுவனமாக விளங்குதல்.



## குறிக்கோள்

பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக்கொண்டு குடிநீர் மற்றும் துப்பரவேற்பாட்டுற்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்.

## இலக்குகள்

- தற்போதுள்ள திட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள செயற்திட்டங்கள். (சேவை மட்டத்திலான முன்னேற்றம் மற்றும் சேவை உள்ளடக்க மேம்பாட்டு மூலோபாயங்கள்)
- புதிய செயற்திட்டங்கள். (நீர் வழங்கல் சேவை பிரதேச விரிவாக்கல்.)
- கடன் சேவை மற்றும் மேலதிக வருமான உருவாக்கங்கள்.
- கட்டணக் கொள்கை மற்றும் வருமான தரமுயர்த்தல்.
- தற்போதுள்ள நிறுவன கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டிற்கான உற்பத்தி மற்றும் வினைத்திறன் முன்னேற்றம்.
- வியாபார வினைத்திறனிற்கான நிறுவன மீளமைப்பு.

## தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினுடைய செயற்பரப்பு எல்லை

குழாய் வழிமூலமான நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டமைப்பினை நாடு முழுவதும் விரிவுபடுத்தி அதனூடாக அனைத்து சமூகத்திற்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற இலக்குடன் சபையானது அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற அடிப்படையில் நாங்கள் நீரின்தரம் மற்றும் சிறப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு போன்ற செயற்பாடுகளுக்கு அதி முக்கிய கவனம் செலுத்துகின்றோம் நாங்கள் வினைத்திறனான இயங்குமுறையினை உறுதிப்படுத்தல் குறிப்பாக வருமானமற்ற நீர் குறைப்பு வழங்களை சரியான முறையில் உச்சமாக பயன்படுத்துதல் போன்றவற்றில் தொடர்ச்சியான கவனத்தினை செலுத்தி எமது சேவைகளை சிறப்பாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் வழங்குகின்றோம்.

# கூட்டிணைந்த ஆளுகை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினுடைய பலமான மற்றும் விரிவான கூட்டிணைந்த ஆளுகைக் கட்டமைப்பு எளிமையான சமூக பொருளாதார மற்றும் சுற்றாடலாகவும் அதே நேரம் தேசிய குறிக்கோள்களை வெளிப்படுத்துபவையாகவும் நிலைபேறாகச் செல்வதற்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் பொருத்தமான வழியில் வளர்ச்சிக்காக இயலக்கூடிய சுற்றாடலை உருவாக்குவதற்கு முயற்சி செய்கின்றது. சபையினுடைய கூட்டு ஆளுகை தத்துவம் அதன் சகல பிரிவுகளையும் இணைத்து நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதுடன் அதன் சகல பங்குதாரர்கள், வெளிவாரி சூழல் மற்றும் நுண்ணிய நிபந்தனைகள் என்பவற்றிற்காகவும் தொடர்ச்சியாக பெறுமதியை உருவாக்குவதாக காணப்படுகின்றது.

சபையினுடைய ஆளுகை கட்டமைப்பு அதனது தனிப்பட்ட உள்ளக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நிச்சயமான பிரமாணங்களுடன் இணங்குதலை உறுதிப்படுத்துவதற்கு தூண்டுவதற்கு மேலதிகமாக அதன் சொந்தமாக சரி செய்யப்பட்டது. இந்தக் கட்டமைப்பு தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு, பரிணாம வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் புதுப்பிக்கப்படுகிறது. மேலும் சிறந்த ஒழுங்குமுறைகள், நடைமுறைகள் மற்றும் வினைத்திறன்மிக்க பங்குதாரர்களின் தேவைகள், பொறுப்புக்கூறலின் அடிப்படைக் கொள்கைகளைப் பேணுதல், பங்கேற்பு, ஒருமைப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை பேணுவதாக அமைந்து காணப்படுகின்றது.

### ஆளுகை கட்டமைப்பு

#### வெளிவாரிப் பிரமாண இணக்கங்கள்

- 1974 இன் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம் மற்றும் 1992 இல் 13 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (திருத்திய) சட்டம்.
- நிதிச்சட்டம்
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம்
- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- திறைசேரி சுற்றறிக்கைகள்
- பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட SOE இற்கான கூட்டு ஆளுகை வழிகாட்டல்.

உள்ளக செயற்கருவி / முயற்சிகள்

- கூட்டிணைந்த திட்டம்
- ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வுக் கொள்கை
- கற்றல் மற்றும் அபிவிருத்தி கொள்கைகள்
- மனக்குறை கையாளல் கொள்கை
- குறைகேள் கொள்கை
- ஒழுக்காற்று நடாத்துதலின் சட்டத்தொகுப்பு
- வாகனக் கொள்கை
- தொழில்முயற்சி தொடர்பான இடர் முகாமைத்துவ கொள்கைகள்
- உள்ளகச் சுற்றறிக்கைகள்
- வாடிக்கையாளர் சாசனம்
- விரிவான தகவல் தொழிநுட்பமுறைமை (வர்த்தக, மனித வள, செயற்திட்ட முகாமைத்துவம்)

#### சபை பணிப்பாளர்கள்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினுடைய பணிப்பாளர் சபையானது நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கச் சட்டத்தின் சட்ட விழுமியங்களுக்கமைவாக நியமிக்கப்படுகிறார்கள்.

அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவன (SOE) 16 நவம்பர் 2021 வழிகாட்டுதல்களுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு, இடர் முகாமைத்துவக்குழு மற்றும் சபைக் குழுக்கள் என்பன பணிப்பாளர் சபையினால் பிரதிநிதித்துப்படுத்தப்படுகின்றது.




### சபையின் பணிகள் மற்றும் பொறுப்புகள்

சகல பணிப்பாளர்களும் அவர்களுக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை ஆற்றும் போது நேர்மையாகவும், அறிவு பூர்வமாகவும் தமது தொழில்திறன், தந்திரோபாய விடயங்களின் சுதந்திரமான தீர்ப்பு, வியாபாரம் நடாத்துவதின் செயலாற்றல் மற்றும் நியமம் என்பனவாக இருக்கின்றன. சுயாதீனமான நிறைவேற்றுத் தரத்திற்கு உட்படாத பணிப்பாளர்களின் பொறுப்பாவது தலைவரினால் மற்றும் ஏனைய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்படும் கீழ் காணப்படும் முன்மொழிவுகள் சம்பந்தமாக தமது சுதந்திரமான தீர்ப்பை வழங்குவதற்குப் பொறுப்பாக உள்ளனர்.

- சபைக் கூட்டத்திற்கு முன்னர் வாசிக்கப்பட்ட சபை ஆவணங்களுடன் சபை செயற்பாடுகளில் தீவிரமாக பங்குபற்றல்.
- நிறுவனத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக நடுத்தர மூலோபாயங்கள் மற்றும் நீண்டகால மூலோபாயங்களை வடிவமைக்கும் போது நிறுவனத்திற்கு உரிய வழிகாட்டல்களை வழங்குதல்.
- நிதி, மனித வளம் மற்றும் கூட்டிணைந்த திட்டங்களை மீளாய்வு செய்து அனுமதித்தல்.
- அதிகார சட்ட மூலமான அமைப்பின் நோக்கு மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.
- ஆளுகை மற்றும் இணக்கப்பாடுகளின் கண்காணிப்பு முறைமை.
- அனுமதிக்கப்பட்ட நோக்கெல்லை திட்டத்திற்குள் சகல கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை எடுத்தல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் மேற்பார்வை.
- தந்திரோபாய நெறிப்படுத்தலின் வினைத்திறனான அமுல்படுத்தலை வசதிப்படுத்துகின்ற செயற்பாட்டுத் தீர்மானங்களை செய்வதில் குறிப்பாக முகாமைத்துவத்திற்கு போதிய அதிகாரம் கையளித்தலை உறுதிப்படுத்தல்.
- அரசியலமைப்பு ஆவணங்களிற்கு திருத்தங்களை பிரேரித்தல்.
- சகல சம்பந்தப்பட்ட கொடுக்கல், வாங்கல்களும் நியதிச்சட்டங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல்.
- சிறந்த நடைமுறையைப் பின்பற்றல்

சபையின் சகல பணிப்பாளர்களும் ஏதாவது அக்கறை / முரண்பாடு என்பவற்றை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டியதுடன் மேலும் வருடாந்தம் புதிய வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். தீர்மானத்தின் கீழான விடயத்தில் அக்கறையுடைய பணிப்பாளர்கள் அவற்றினை நிறைவேற்றுகின்றனர்.

## தலைவரின் பணிகள்

சபை மற்றும் அதன் குழுக்களின் வினைத்திறனான செயற்பாடுகளைத் தலைமை தாங்கி முகாமை செய்வதே தலைவரின் பிரதான பொறுப்பாக உள்ளது. மேலும் சபையினை வெளியக விடயங்களில் பிரதிநிதித்துவப்படுத்திடுபவராகவும் சபையின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் அனைத்து அம்சங்களிலும் தொடர்புபடுகின்ற பிரதான நபராகவும் சபையின் மையமாகவும் காணப்படுகின்றார்.

## நிதிசார் பகுத்தறித்தன்மை

பொதுத் திறைசேரி பிரதிநிதி உறுப்பினர் நிதித் துறையின் சிறப்பு அறிவின் மூலம் சிறந்த நிதி வழிகாட்டுதலை வழங்க முடியும்.

## சுயாதீன தொழில்முறை ஆலோசனைக்கான அணுகல்

சபையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கும், முடிவெடுத்தலை வலுப்படுத்துவதற்கும் சபை அவசியமானதாகக் கருதப்படும்போது சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையைப் வழங்குதல். அதன்படி, சபையானது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சட்ட, வளம், பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சுயாதீனமான தொழில்முறை ஆலோசனைகளைப் வழங்குதல்.

## சபைச் செயலாளரின் பணிகள்

- சபை மற்றும் தனிப்பட்ட பணிப்பாளர்கள் தங்கள் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதுடன் நெறிமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான விடயங்களில் வழிகாட்டுதலின் மைய ஆதாரமாக செயற்படுதல்.
- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்
- நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த தொழில் நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கி சகல நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தல்.
- வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள் ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் பங்குதாரர் நலன்களைக் கருத்தில் கொண்டு முழு நிர்வாகக் கட்டமைப்பின் தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்தல்.
- பணிப்பாளர் சபையின் கூட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதுடன் செயற்பாடுகளின் தாக்கத்தை பொறுப்புடைய விதிகள் மற்றும் பிரமாணங்கள் மீது சபை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலை உறுதிப்படுத்தல்.
- விவாதிக்கப்பட வேண்டிய குழு ஆவணங்கள், கூட்டத்திற்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன்னதாக பணிப்பாளர்கள் குழு மத்தியில் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- மிக முக்கியமானதான விடயங்களிலன்றி ஏனைய சந்தர்ப்பங்களில் சபையின் தீர்மானங்கள் சுற்றறிக்கையின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதனை உறுதி செய்தல்.
- தலைவருடனான சந்திப்பு நிகழ்ச்சி நிரல்களை உருவாக்குதல் மற்றும் பொது முகாமையாளர் மற்றும் நிர்வாகத்துடன் குழு ஆவணங்கள் தொடர்பான குறிப்புகள் மற்றும் கூட்டத்திற்கான விளக்கவுரைகளை ஒழுங்கமைத்தல்.
- சபைக் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் சபை நடவடிக்கைகளின் துல்லியமான அறிக்கைகளை சரியான முறையில் பராமரித்தல்.
- சபையின் துணைக் குழுவின் செயலாளராகச் செயற்படுதல்.
- வருடாந்த திறனாய்வுக் கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
- நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை, கணக்குகளின் வெளியீடு மற்றும் விநியோகத்தை ஒருங்கிணைத்தல்.

## சபைக் கூட்டங்கள்

சபையின் செயற்பாடு மற்றும் நிர்வாகத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பற்றி விவாதிக்க, சபை மாத இடைவெளிக்குக் குறையாமல் தொடர்ந்து கூடுகிறது சபைக் கூட்டங்களின் அனைத்து அறிக்கைகளும் ஆவணங்களும் சபைச் செயலாளரால் ஆவணப்படுத்தப்படுகின்றன. சபையின் சில செயற்பாடுகள் சபையின் துணைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு, இறுதி முடிவெடுக்கும் உரிமையை சபை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இது மிக முக்கியமான விடயங்களின் விரிவான பகுப்பாய்வு மற்றும் விவாதிக்கப்பட்ட விடயங்களைத் தீர்ப்பதற்கான உபாயமான அணுகுமுறையை செயற்படுத்துகிறது. சபை உறுப்பினர்கள் அவர்களது நிபுணத்துவத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதலாக, விரிவான பகுப்பாய்வு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் துணைக் குழுக்களும் அவ்வப்போது நியமிக்கப்படுகின்றன. சபையானது 3 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீன பணிப்பாளர்கள் மற்றும் பார்வையாளராக ஒரு இயக்குனர் சபை உறுப்பினரையும் கொண்டுள்ள அதன் சொந்த கணக்காய்வுக் குழுவைக் கொண்டுள்ளது.

2023 நிதியாண்டிற்கான மாதிரி சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

- கூட்ட அறிக்கைகளை ஏற்றுக்கொள்வது
- குறிப்புகளின் அடிப்படையில் எழுகின்ற விடயங்கள்
- முன்னேற்ற மீளாய்வு
- நெறிமுறை விடயங்கள்
- பாராளுமன்றத்தில் வினவப்பட்ட வினாக்கள்
- கொள்கை விடயங்கள் மற்றும் அமைச்சு, திறைசேரி மற்றும் அமைச்சரவை அனுமதி பெறவேண்டிய ஏனைய விடயங்கள்
- கணக்காய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் அறிக்கை
- ஆளணி விடயம்
- ஏனையவை

## சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டமை

**2023 ஆம் ஆண்டின் சபையின் கூட்டம் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்களின் விபரங்கள்**

*அட்டவணை இல 09*

| சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவி | சபை கூட்டம் | | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் | |
|---|---|---|---|---|---|
| | | தகுதியுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டத்திற்கு வருகை தந்தோர் | தகுதியுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டத்திற்கு வருகை தந்தோர் |
| திரு. நிசாந்த ரணதுங்க | தலைவர் | 13 | 13 | - | - |
| திரு W.M.S.B விஜயகோன் | உப தலைவர் | 13 | 13 | 7 | 4 |
| திரு. முகமது காதர் | சபை உறுப்பினர் | 4 | 4 | 1 | 1 |
| கலாநிதி. பொறி. I.M.W.K இலங்காசிங்க | சபை உறுப்பினர் | 4 | 4 | 1 | 1 |
| கலாநிதி. V.T.S.K. சிறிவர்த்தன | சபை உறுப்பினர் | 13 | 12 | - | - |
| திருமதி. W.E. கொடகம | சபை உறுப்பினர் | 13 | 12 | 7 | 7 |
| திருமதி. K.A.S.மகேசிகா | சபை உறுப்பினர் | 13 | 11 | 7 | 7 |
| திரு.R.A.G.கேமித்த ராஜபக்ஷ | சபை உறுப்பினர் | 8 | 8 | - | - |
| பொறி. லக்ஷ்மன் ரணசிங்க | சபை உறுப்பினர் | 8 | 8 | 5 | 5 |
| கண்காணிப்பாளர்கள் | | | | | |
| ஆள. N.M.M. மரிக்கார் | மேலதிக செயலாளர் (Tech) M of WS & EID | 13 | 12 | - | - |

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இடர் முகாமைத்துவக் குழு

அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளிற்கான கூட்டிணைந்த ஆளுகை மீதான வழிகாட்டலின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் இடர்களை வினைத்திறனான வகையில் முகாமை செய்வதனை உறுதிப்படுத்துவதற்கு 2022 இல் இடர் முகாமைத்துவ குழுவொன்றை உருவாக்கியுள்ளது.

சபையானது கூட்டிணைந்த நிறுவன அறிக்கையின் 2023-2025 வழிகாட்டுதலின் பிரகாரம், 12 முக்கிய அபாயங்களைக் கண்டறிந்துள்ளது. அவையானவன நீர்ப் பற்றாக்குறை, மாசாக்கம், சமூக தாக்கங்கள், வருவாய் அல்லாத நீர், தகவல் பாதுகாப்பு, திட்ட செயலாக்கம், சுயநிதி, கட்டண தீர்வு, நிதி மற்றும் முதலீட்டு அபாயங்கள், எரிசக்தி செலவுகள், பணவீக்கம் மற்றும் அரசாங்க கொள்கை மாற்றங்கள் என்பனவாகும். இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் விரிவாக்கத்திற்காக மேலதிக பொது முகாமையாளர் (கூட்டிணைந்த சேவைகள்) இடர் முகாமைக்குழு ஒருங்கிணைப்பாளராகவும், பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி) செயல்முறையை மேற்பார்வையிடுகின்ற தலைமை இடர் முகாமைத்துவ அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**2023 ஆம் ஆண்டிற்கான இடர் முகாமைத்துவக்குழுக் கூட்ட வருகைப் பதிவு**

*அட்டவணை இல 10*

| சபை பணிப்பாளரின் பெயர் | பதவி | 11 / ஜனவரி | 27 / ஜூலை | 10 / ஒக்டோபர் | 28 / டிசம்பர் | தகுதியுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டத்திற்கு வருகை தந்தமை |
|---|---|---|---|---|---|---|---|
| Dr. வி.ரி.எஸ்.கே. சிறிவர்தன | சபை உறுப்பினர் தலைவர் - இடர் குழு | ✓ | ✓ | ✓ | ✓ | 4 | 4 / 4 |
| திருமதி. டபிள்யூ.ஈ.கெ-ாடகம | சபை உறுப்பினர் | ✓ | ✓ | ✓ | ✓ | 4 | 4 / 4 |
| எந்திரி ஜி. லக்ஷ்மன் ரணசிங்க | சபை உறுப்பினர் | ✓ | ✓ | - | - | 2 | 2 / 2 |
| திரு. முகமது காதர் (2023 ஒக்டோபர் முதல்) | சபை உறுப்பினர் | - | - | - | ✓ | 1 | 1 / 1 |
| கலாநிதி. எந்திரி .(திருமதி) ஐ.எம்.டபிள்யூ. கே.இளங்கா சிங்க | சபை உறுப்பினர் | - | - | - | ✓ | 1 | 1 / 1 |
| கண்காணிப்பாளர்கள் | | | | | | | |
| Ms. என்.எம்.எம். மரிக்கார் (2023 ஒக்டோபர் முதல்) | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) நீர் வழங்கல் அமைச்சு | ✓ | ✓ | ✓ | ✓ | 4 | 4 / 4 |

## பணிப்பாளர்களின் பிரகடனம்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பணிப்பாளர்களின் தீர்மானத்திற்கமைய பணிப்பாளர்களினால் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் வேலைக்கமர்த் தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட 2 ஆண்டு காலப்பகுதியில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்கள் சபையுடன் வர்த்தக உறவுமுறையை மேற்கொள்ளவில்லை.

(இ) கடந்த 5 ஆண்டுகளில் பாராளுமன்றம் / மாகாண சபை / உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அவர்களது துறை அமைச்சர் / இராஜாங்க அமைச்சர் / பிரதி அமைச்சர் ஆகியோரின் நெருங்கிய குடும்ப உறவுகள் இல்லை.

சபையின் பணிப்பாளர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

முழுப் பெயர் : நிஷாந்த ரணதுங்க

பதவி : தலைவர்

கையொப்பம் : 

திகதி : 2024 / 03 / 20

## செயலாளரின் செய்தி
## நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு



2023 ஆம் ஆண்டிற்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் வருடாந்த அறிக்கைக்கு எனது செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டு முழுவதும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் அதன் ஆணையை நிறைவேற்றுவதற்கான அதன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது. இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதை இலக்காகக் கொண்ட தேசிய அளவிலான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது தேசிய குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்தல், இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரத்திற்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கான முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அக்கறையுடன் செயற்பட்டது.

நிலவும் பொருளாதார நெருக்கடியினால் பாதிப்புக்களை எதிர்நோக்கியபோதும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது அதற்கேற்றாற்போல் தன்னை தகவமைத்துத் தனது சேவையினை வழங்கியது. குறிப்பாக திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கம் திட்டங்களை உள்ளடக்கிய ஒரு மூலோபாய திட்டத்துடன் "அனைவருக்கும் நீர்" திட்டம் மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. மேலும் நாட்டிற்கு அத்தியாவசிய நீர் வழங்கல் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மற்ற தொடர்ச்சியான முயற்சிகளுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை அவற்றை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு முழுமையான அர்ப்பணிப்புடன் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் செயல்பாடுகளை நிலைநிறுத்துவதற்கும், சபையின் தடையில்லா சேவைகளை உறுதி செய்வதற்கும், சபையின் நீர்க் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கடினமான முடிவை எடுத்தோம் மற்றும் அதற்குரிய அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டோம்.

மேலும், சபையின் வணிக செயற்திறனை மேம்படுத்துதல், நிறுவன மறுசீரமைப்பு, திறமையான வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செலவுக் குறைப்பு, வருவாய் அல்லாத தண்ணீரைக் குறைத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு மற்றும் ஆற்றல் சேமிப்பு, உகந்த பங்கு முகாமைத்துவம் மற்றும் நவீன வேலைத் திட்டங்களை ஏற்றுக்கொள்வதில் நாங்கள் தீவிரமாக பணியாற்றி வருகிறோம்.

முன்னோக்கிப் பார்க்கும்போது, உயர்தர மற்றும் திறமையான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்கான எங்கள் திறனில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். 2024 மற்றும் அதற்குப் பின்னரும் திட்டமிடப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் எங்களின் அர்ப்பணிப்பு உறுதியானது, எங்களது நீர் வழங்கல் மற்றும் சுகாதார இலக்குகளை அடைய நாங்கள் பாடுபடுகின்றோம்.

இறுதியாக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் எங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பணிக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் சமமான நீர் மற்றும் அதனூடாக சுகாதாரத்திற்கான ஏற்பாடுகளை உறுதிசெய்வதில் நாம் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் மேற்கொள்வோம் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

வருண சமரவிக்கிரம
செயலாளர்
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

# தலைவரின் செய்தி
# நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை



சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் ஆகியவை நாட்டின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதவை, அவை வாழ்க்கை மற்றும் அர்த்தமுள்ள வளர்ச்சிக்கான அடிப்படை தூண்களாக செயல்படுகின்றன. இலங்கை மக்களுக்கு சுத்தமான நீர் மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நான் தலைவராக இருக்கின்ற காலத்தில் 2020-2025 ஆம் ஆண்டுகளில் அதன் ஒருங்கிணைந்த திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளைப் அடைவதில் உறுதியாக உள்ளது.

எவ்வாறாயினும், கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம், 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தோன்றிய பொருளாதார நெருக்கடி மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவற்றுடன் இணைந்து, வளர்ச்சி முயற்சிகளின் திட்டமிடலை சீர்குலைத்தது. இத்தகைய வலிமையான சவால்கள் இருந்தபோதிலும், சபையானது நெகிழ்வுத்தன்மையை வெளிப்படுத்தியது, சிக்கலான நேரங்களில் மாறாத உறுதியுடன் மற்றும் தடைகளை கடக்க ஒரு மூலோபாய அணுகுமுறையுடனும் பயணித்தது.

2020-2025 க்கான கூட்டிணைந்த திட்டம், முதலில் "அனைவருக்கும் நீர்" திட்டத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. எனினும் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக நடைமுறைப்படுத்துவதில் தடைகளை எதிர்கொண்டது. இதன் விளைவாக, இந்நிலைமைக்கு பதிலளிக்கும் விதமாக "அனைவருக்கும் நீர்" திட்டம் மறுசீரமைக்கப்பட்டது. திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்க திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, பின்னர் அதற்கான அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்க திட்டம் மற்றும் 2023 இல் நடந்துகொண்டிருக்கும் பிற முயற்சிகள் மொத்த சேவை இணைப்புகளின் எண்ணிக்கையை 3 மில்லியனாக கூட்டி, 48.1% மக்கள் தொகையை உள்ளடக்கியது, மொத்த ஆண்டு நீர் உற்பத்தி 803.2 மில்லியன் கன மீட்டர், 97.4% பாக்டீரியாவியல் தரத்திற்கு திருப்திகரமாக உள்ளது, 86.9 % WHO வழிகாட்டுதல்களின்படி, உடல் மற்றும் இரசாயனத் தரத்திற்கு திருப்திகரமாகவும், குடிநீர் தரத்தின் நச்சுயியல் அளவுருக்களில் 100% திருப்திகரமாகவும் உள்ளது. சபையானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 28,158 குழாய் கழிவுநீர் இணைப்புகளை எட்டியது மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு திறனை நாளொன்றுக்கு 113,480 கன மீட்டராக அதிகரித்தது. மேலும் 271 நீர் பாதுகாப்பு திட்டங்கள் முடிக்கப்பட்டு 80 செயல்பாட்டில் உள்ளன.

தேசிய நீர் வழங்கல் சபையானது 2022 இல் அதன் கட்டண முன்னைய சீர்செய்தல்களைத் தொடர்ந்து 2023 இல் இரண்டாவது சுற்று கட்டண உயர்வை நடைமுறைப்படுத்தியது. முந்தைய ஆண்டின் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட இரசாயனங்கள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் அதிகரித்த செலவுகள், மற்றும் தொடர்ச்சியான நீர் வழங்கல் செயற்பாடுகளைத் தக்கவைக்கவும், தடையில்லா சேவைகளை உறுதிப்படுத்தவும் இந்த அதிகரிப்புகள் அவசியமாகக் கருதப்பட்டன. கட்டண மாற்றம் இன்றியமையாததாக இருந்தாலும், செயற்திறனை மேம்படுத்துவதிலும் செலவு சேமிப்பு நடவடிக்கைகளை ஆராய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். வருவாய் அல்லாத தண்ணீரை (NRW) குறைப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப முயற்சிகளை வலியுறுத்துவதற்கும் மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நீண்டகால திட்டமிடல் மற்றும் முதலீடு ஆகியவை நிலையான சேவை வழங்கலுக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

சபையானது "சர்வதேச நீர் மாநாடு, இலங்கை 2023" ஐ நீர் மற்றும் சுகாதாரவேற்பாட்டுக்கான விசேட நிலையத்தில் குடிநீர் நீர் துறையில் அறிவுப் பகிர்வு மற்றும் சர்வதேச வலைப்பின்னலை ஒன்றை விரிவுபடுத்தும் நோக்கில் நடாத்தியது. எங்கள் மூலோபாயத் திட்டத்தைப் பின்பற்றி, CEWAS ஆனது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் மேலதிக வருமானம் பெற்றுக்கொள்ளும் பெற்றுக்கொள்ளும் ஒரு இன்றியமையாத ஆதாரமாக வெற்றிகரமாக மாற்றப்பட்டு, தனியார் மற்றும் அரசுத் துறைகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கி, அதன் மூலம் அதனுடைய நிதி நிலைத்தன்மை மற்றும் சுயாதீனத்தை மேம்படுத்துகிறது.

2024 முதல் 2027 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது பிராந்தியம் முழுவதும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை கோடிட்டுக் காட்டியது. வீட்டுக் குழாய் நீர் வழங்கல் பிரதேசத்தை அதிகரிப்பது, வணிக குழாய் நீர் இணைப்புகளை விரிவுபடுத்துவது மற்றும் குழாய் கழிவுநீர் பிரதேசத்தை விரிவுபடுத்துவது ஆகியவை இந்த கடமைகளில் அடங்கும். சபையினது CEDE திட்டம் மற்றும் தற்போதைய நீர் வழங்கல் திட்ட செயற்திட்டம் போன்ற முயற்சிகள் மூலம் இந்த இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சபையானது ADB நிதியுதவியுடன் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் திறன் வளர்ச்சி திட்டத்தின் மூலம் செயற்திறனை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரிவை நிறுவுதல் மற்றும் அதனூடாக பாலின மூலோபாயம், காலநிலை, வரைபடம், நிதி நிலைத்தன்மை மற்றும் வணிகத் திறன் திட்டத்தை செயல்படுத்துதல், கூட்டிணைந்த நோக்கத்தின் அறிக்கையைத் தயாரித்தல், KPI கள் மற்றும் கட்டணக் கொள்கைகள் உள்ளிட்ட செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உள்ளக நிபுணர்களின் ஒத்துழைப்பின் மூலம் கட்டணச் சூத்திரம் மற்றும் கட்டண அமைப்பு தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது .

2024 க்கு, சபையானது ஒவ்வொரு உறுதிப்பாட்டிற்கும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது, காலாண்டு முன்னேற்றத்தைக் கண்காணிக்க முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளுடன் (KPIs) அமைக்கப்பட்டுள்ளது.

சவாலான நேரங்களிலும், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரவேற்பாட்டுத் துறையை முன்னேற்றுவதற்கு உதவியாக இருந்த எங்கள் மதிப்பிற்குரிய நிதி பங்காளிகளுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பு எங்கள் வெற்றிக்கு விலைமதிப்பற்றவை. ஹேளுனூடீ இன் இந்த ஆதரவுகள் மற்றும் அனைத்து முயற்சிகளும் ஒட்டுமொத்த பயனர் திருப்தியை உறுதி செய்யும் நிலையான நீர் மற்றும் சுகாதார தீர்வுகளை வழங்குவதன் மூலம் தேசத்திற்கு சேவை செய்வதற்கான எங்கள் பணிக்கு இணைந்து பங்களிக்கின்றன.



நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

# பணிப்பாளர் சபை



2020 ஜனவரியில் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவராக செயற்படுகின்றார். 2003 இல் சிட்னி வெஸ்ரேன் பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் (MBA) முதுகலைமானி பூர்த்தி செய்திருந்ததுடன் தனியார் துறை, ஊடகம் மற்றும் தொடர்பாடல், பொது நிர்வாகம் மற்றும் பணிப்பாளர் நாயகம் / CEO- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், தலைவர் / CEO மிகின் எயார் (தனியார்) லிமிட்டெட், துணைத் தலைவர் ஏசியன் புறோகுடா யூனியன் நிறுவனம், தலைவர் / பணிப்பாளர் - தேசிய சுகததார விளையாட்டு கட்டிடத் தொகுதி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் - மொபிட்டல் (தனியார்) லிமிட்டெட் என்பவற்றில் வியாபார முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலான நிர்வாக அனுபவம் கொண்டவராக காணப்படுகின்றார்.

திரு. நிஷாந்த ரணதுங்க / தலைவர்
(2020 ஜனவரி மாதத்திலிருந்து இன்றுவரை)



2022 ஜுன் மாதம் சபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். மொனாஸ் பல்கலைக்கழகம் (அவுஸ்திரேலியா) இல் உள்ளுராட்சி நிர்வாக பயிற்சி டிப்ளோமா பூர்த்தி செய்தார் மற்றும் மாண்புமிகு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட அமைச்சர் டி.இ.டபிள்யு. குணசேகர ஊவா மற்றும் வடமத்திய ஆளுநராகிய ராஜா கொலுரே ஆகியவர்களில் ஒருங்கிணைப்பு செயலாளராக பணியாற்றியுள்ளார். அத்துடன் விவசாய இராஜாங்க அமைச்சின் சசீந்திர அவர்களின் தனிப்பட்ட செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். “விஸ்வ கலா பவுன்டேஷன்” இன் தலைவர். முன்னாள் உள்ளுராட்சி அதிகார சபை உறுப்பினர். இதற்கு மேலதிகமாக ஒரே நேரத்தில் தே.நீ.வ.வ.ச. இன் உப தலைவராகவும், கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார். மேலதிகமாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் தனிப்பட்ட செயலாளராகவும் பதவி வகித்தார்.

திரு. டபிள்யூ.எம்.எஸ்.பீ.விஜயகோன் / உப தலைவர்
(2022 ஜுன் மாதத்திலிருந்து)



04 ஒக்டோபர் 2023 அன்று பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் அத்துடன் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார். உயிரியல் இரசாயனவியல் இளங்கலை விஞ்ஞானம், வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டதாரி நிர்வாக டிப்ளோமா - கொழும்பு பல்கலைக்கழகம், CIMA இன் பகுதி 1 மற்றும் 2 முடித்தல் மற்றும் டயமண்ட் கிரேடிங்கில் சான்றிதழ் படிப்பை முடித்தார். அவர் சபா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் மூத்த மேலாளராகவும், பணிப்பாளராகவும், லங்கா கம்பெனி லிமிடெட் பால் இண்டஸ்ட்ரீஸ் ில் வாரிய உறுப்பினராகவும், ரெனெல்லே (பிரைவேட்) லிமிடெட்டில் பொது மேலாளராகவும், கால்நடை மற்றும் கிராமப்புற சமூக மேம்பாட்டு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும், தனிச் செயலாளராகவும் இருந்தார். லங்கா லிபியா விவசாய அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர், கோழி வளர்ப்பு நிறுவன (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர், சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர், தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஷா அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் நிர்வாகத் தலைவர் ஆகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. முகமது கார்டர் / பணிப்பாளர்
(ஒக்டோபர் 2023 முதல் இன்று வரை)



4 ஒக்டோபர் 2023 அன்று குழுவில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் அத்துடன் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார். 1984 இல் பேராதனை பொறியியல் பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். ஜப்பான் யோகோஹாமா தேசிய பல்கலைக்கழகத்தில் 1999 இல் உட்கட்டமைப்பு முகாமைத்துவத்தில் முதுகலை அறிவியல் பட்டம், குடிமைப் பொறியியலில் கலாநிதி (நீர் சுத்திகரிப்பு சிறப்பு), 2019 இல் மொரட்டுவ பல்கலைக்கழகம். அவர் IESL இலங்கையில் சக உறுப்பினராக உள்ளார். மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் பொறியியலாளர், வதிவிடப் பொறியாளராக 35 வருட அனுபவம் சிரேஷ்ட பொறியாளர்,பிரதம பொறியாளர் திட்ட மேலாளர், திட்ட இயக்குனர் பிரதிப் பொது முகாமையாளர் மேலதிக பொது முகாமையாளர் (இணைந்த சேவைகள் / கொள்கை மற்றும் திட்டமிடல்) மற்றும் பொது முகாமையாளர் (NWSDB).

கலாநிதி எந்திரி . (திருமதி) டபிள்யூ.கே. இளங்கசிங்க / பணிப்பாளர்
(ஒக்டோபர் 2023 முதல் இன்றுவரை)

2021 மார்ச் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். MBBS (றுகுணு) இல் பட்டப்பட்டிப்பு, MSc (மருத்துவ நிர்வாகம் - கொழும்பு) 16 ஆண்டுகளாக மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர். அவர் பிரதி பணிப்பாளர் நாயகம், பிராந்திய பணிப்பாளர், சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் சுகாதார துறையில் மருத்துவ உத்தியோகத்தர் போன்ற பதவிகளை வகித்தார். தற்போது உணவு ஆலோசனை குழுவின் செயலாளர், சுகாதார கோரிக்கைகள், விதிமுறைகள் சம்பந்தமான உப தலைவராவதுடன், தொழில்நுட்ப உணவு ஆலோசனைக் குழுவின், பொது சுகாதார உணவு ஆய்வு கூடங்களின் தலைவருமாவார். அத்துடன் மருத்துவ கல்லூரியின் நிர்வாகிகள் பேரவையின் அங்கத்தவரும் ஆவார்.

கலாநிதி. வீ.ரீ.எஸ்.கே.சிறிவர்த்தன / பணிப்பாளர்
(2021 மார்ச் மாதத்திலிருந்து இன்றுவரை)





2022 மார்ச் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச.இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தலைவர். முகாமைத்துவ கற்கைகளில் பட்டப்படிப்பு, திறந்த பல்கலைக்கழகம், நிதிப் பொருளாதாரத்தில் முதுமானி, கொழும்பு பல்கலைக்கழகம், பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணைந்த உறுப்பினர் - UK, ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய பட்டய முகாமைத்துவக் கணக்காளராவார். மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர், கொழும்பு பல்கலைக்கழக கணக்காய்வு குழு உறுப்பினர், தற்போது பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உறுப்பினர் - JRDC மீதான இடைக்கால முகாமைத்துவ குழுவின் பட்டகசாலை உறுப்பினராகவும் செயலாற்றுகின்றார்.

திருமதி.வத்சலா எரந்தி கொடகம / பணிப்பாளர்
(2022 மார்ச் மாதத்திலிருந்து 2023 டிசம்பர் வரை)

2022 ஒக்டோபர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். விஞ்ஞான பட்டதாரி, கலை முதுமானி பட்டதாரி, முகாமைத்துவம் சம்பந்தமாக பட்டபின் பட்ட டிப்ளோமா, அபிவிருத்தி கற்கைகளில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பொது முகாமைத்துவத்தில் டிப்ளோமா, அவர் ஆணையாளர், செயற்திட்ட பணிப்பாளர், சிரேஷ்ட உதவி செயலாளர், பணிப்பாளர், உதவி செயலாளர், உதவி ஆணையாளர் போன்ற பதவிகளில் பணியாற்றியுள்ளார். தற்போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபையின் மேலதிக செயலாளர், இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையின் சபை உறுப்பினர், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ சபை உறுப்பினராகவும் உள்ளார்.

திருமதி. மகேஷிகா கொடிப்பிலி ஆராச்சி / பணிப்பாளர்
(2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)



# 2023 ஆம் ஆண்டின் முன்னாள் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள்



2022 ஒக்டோபர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். B.Sc. (Mgt) SP, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது முயற்சிகளில் முதுகலைமானிப் படிப்பு, தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா, ஆங்கில மொழியில் டிப்ளோமா (City & Guilds UK) ஆகியவற்றை பூர்த்தி செய்துள்ளார். கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக 10 ஆண்டுகளிற்கு மேல் பணியாற்றிய அனுபவம். விசேட எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பாடல் திறனில் வியாபாரக் கற்கை ஆசிரியராக 18 ஆண்டு அனுபவமும் உள்ளது. அவர் கௌரவ சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளராக செயலாற்றியிருந்தார். தற்போது கௌரவ நீர் வழங்கல் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளராக சேவையாற்றுகின்றார்.

திரு. ஆர்.ஏ.கயான் கேமித்த ராஜபக்ஷ / பணிப்பாளர்
(2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரை )



2020 பெப்ரவரியில் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். பட்டய பொறியியலாளர் (IESL(HMIE6172) உறுப்புரிமை இல IESL (HMIE 6172) மற்றும் EC 103678 ஆம் பதிவிலக்கம், எந்திரவியல் பொறியியல் ஆலோசகர், பதிவு செய்யப்பட்ட சமதான நீதவான், அரசாங்க அதிகாரமளிக்கப்பட்ட பாதுகாப்பு பரிசோதகர், பொறியியலாளர், ISO 9000/2000 ஆலோசகர், அழிவடையா பொருட்களின் பரிசோதகர் (SM) NVQ மட்டம் 5 மற்றும் 6 மதிப்பீட்டாளர் மற்றும் நாடு முழுவதுமான சமாதான நீதவான். இவர் பல வர்த்தக மற்றும் அரசாங்க நிறுவனங்களில் உதவி பொது முகாமையாளர், சிரேஷ்ட பொறியியலாளர், மற்றும் பொறியியலாளராக இருந்தார். தற்போது ஆலோசனை பொறியியலாளராக செயலாற்றுகின்றார்.

பொறி.ஆர்.ஏ.சரத் லக்ஷ்மன் ரணசிங்க / பணிப்பாளர்
(2020 பெப்ரவரி மாதத்திலிருந்து செப்டம்பர் 2023 வரை)

# சிரேஷ்ட முகாமைத்துவம்



ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரை பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் 1984 இல் பேராதனை பொறியியல் பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். ஜப்பான் யோகோஹாமா தேசிய பல்கலைக்கழகத்தில் 1999 இல் உட்கட்டமைப்பு முகாமைத்துவத்தில் முதுகலை அறிவியல் பட்டம், குடிமைப் பொறியியலில் கலாநிதி (நீர் சுத்திகரிப்பு சிறப்பு), 2019 இல் மொரட்டுவ பல்கலைக்கழகம். அவர் IESL இலங்கையில் சக உறுப்பினராக உள்ளார். மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் பொறியியலாளர், வதிவிடப் பொறியாளராக 35 வருட அனுபவம் சிரேஷ்ட பொறியாளர்,பிரதம பொறியாளர் திட்ட மேலாளர், திட்ட இயக்குனர் பிரதிப் பொது முகாமையாளர் மேலதிக பொது முகாமையாளர் (இணைந்த சேவைகள் / கொள்கை மற்றும் திட்டமிடல்) மற்றும் பொது முகாமையாளர் (NWSDB).

கலாநிதி பொறியியலாளர். (திருமதி) டபிள்யூ.கே. இளங்காசிங்க / பணிப்பாளர்



நவம்பர் 2023 இல் பொது முகாமையாளாராக நியமிக்கப்பட்டார். பொறியியல் இளங்கலை அறிவியல் பட்டம், MSc பொறியியல். (நீர் மற்றும் சுற்றுச்சூழல் வள மேலாண்மை) MSc (நீர் வள மேலாண்மை, நெதர்லாந்து - UNESCO-IHE) வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம், முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா, அவர் IESL இல் சக உறுப்பினராகவும், இலங்கையின் முகாமைத்துவ நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார். மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் திட்டப் பொறியாளர், மாவட்ட மேலாளர் (உலக வங்கி, ADB, UNICEF நிதியுதவி திட்டங்கள்) 31 வருட அனுபவம் திட்டப் பணிப்பாளர் / தலைமைப் பொறியாளர் (KFW, காலி மாவட்டம், கட்டம் 2), உதவிப் பொது முகாமையாளர் திட்டப் பணிப்பாளர் (பதுளை, ஹாலிஎல, எல்ல WSP மற்றும் மஹியங்கன WSP) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் மேலதிக பொது முகாமையாளர் (தெற்கு / ஊவா / கிழக்கு) ரூ (நீர் வழங்கல் திட்டங்கள்).

பொறியியலாளர். ருவன் லியனகே / பொது முகாமையாளர்
(நவம்பர் 2023 முதல் இன்றுவரை)



ஜனவரி, 2019 இல் மேலதிக பொது முகாமையாளர் (நிதி) பகுதிக்கு நியமிக்கப்பட்டார். 1992 இல் ஜயவர்தனபுர வர்த்தகப் பல்கலைக்கழகத்தில் வணிக பிரிவில் இளங்கலை பட்டம் பெற்றார், 2009 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமா 2014 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் முதுகலை. அவர் இலங்கையின் பட்டயக் கணக்குகள் நிறுவகத்தில் சக உறுப்பினராக உள்ளார் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் பிரதி பொது மேலாளராக (உள்ளக கணக்காய்வு) 8 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர், மேலும் அவர் பட்டப்படிப்புக்குப் பிறகு பல நிறுவனங்களில் நிதி மற்றும் கணக்காய்வு துறையில் பணிபுரிந்து பல அனுபவங்களை பெற்றுள்ளார்.

திரு. ஆர்.எம்.ஏ.எஸ்.வீரசேன / மேலதிக பொது முகாமையாளர் (நிதி)
(ஜனவரி 2019 முதல் இன்று வரை)



2019 ஜுன் மாதத்தில் மேலதிக பொது முகாமையாளராக (மேல் மாகாணம்) நியமிக்கப்பட்டார். 1987 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பொறியியல் (சிவில்) பட்டதாரி, விஞ்ஞான பொது முகாமைத்துவத்தில் முதுகலைமானி - SLIDA, பட்டபின்படிப்பு டிப்ளோமா OSLO. அவர் IESL இன் உறுப்பினறுமாவார். பொறியியலாளர், சிரேஷ்ட பொறியியலாளர், பிரதம பொறியியலாளர், பிராந்திய முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் 32 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறியியலாளர். சீ.சீ.எச்.எஸ். பெர்னாந்து / மேலதிக பொது முகாமையாளர்
(2019 ஜுன் மாதத்திலிருந்து ஜனவரி 2023 வரை)

ஜனவரி 2023 இல் மேலதிக பொது முகாமையாளராக (கிழக்கு/தெற்கு/ஊவா பிராந்தியம்) நியமிக்கப்பட்டார். 1991 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் (சிவில்) இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். ஒக்டோபர் 2005 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டுமான முகாமைத்த்துவத்தில் முதுகலைப் பட்டம், முதுகலை பெப்ரவரி 2012 இல் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்புகளில் முதுகலை பொறியியல், பெப்ரவரி 2010 இல் IESL உறுப்பினர் மற்றும் நவம்பர் மாதம் 2012 இல் சர்வதேச நிபுணத்துவ பொறியியலாளர், மற்றும் பொறியியலாளராக (கட்டுமானம்) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபையில் பொறியியலாளர், தலைமைப் பொறியியலாளர் (திட்டமிடல்), தலைமைப் பொறியியலாளர் (கட்டுமானம்), முகாமையாளர் (O&M) உதவிப் பொது முகாமையாளர் திட்ட பணிப்பாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் போன்ற பல்வேறு துறைகளில் 32 வருட அனுபவம் பெற்றவர்.

பொறியியலாளர். என்.சுதேசன் / மேலதிக பொது முகாமையாளர் (கிழக்கு/தெற்கு/ஊவா பிராந்தியம்)





ஜனவரி 2023 இல் மேலதிக பொது முகாமையாளராக (கூட்டிணைந்த சேவைகள்) நியமிக்கப்பட்டார். 1991 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் (சிவில்) இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். MBA (பேராதெனியப் பல்கலைக்கழகம்), பட்டபின் டிப்ளோமா (Cons. Project Mgt.) மற்றும் IESL இலங்கையின் உறுப்பினர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் கட்டுமானப் பொறியலாளர், வடிவமைப்புப் பொறியியலாளர், பிரதான பொறியியலாளர், முகாமையாளர் (O&M) உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (P&D மற்றும் RSCs) போன்ற பல்வேறு துறைகளில் 31 வருட அனுபவம் பெற்றவர்.

பொறியியலாளர். W. G. C. L. வீரசேகர / மேலதிக பொது முகாமையாளர் (கூட்டிணைந்த சேவைகள்)
(ஜனவரி 2023 முதல் இன்று வரை)

பெப்ரவரி, 2023 இல் மேலதிக பொது முகாமையாளராக (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம் ) நியமிக்கப்பட்டார். 1988 சீனாவின் டோங்ஜி பல்கலைக்கழகத்தில் கட்டமைப்புப் பொறியியலில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். Msc. (கட்டுமான திட்ட மேலாண்மை) 2007 இல் மற்றும் பட்டப் பின் டிப்புளோமா (சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் முகாமைத்துவம்) 2018 இல் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பெற்றார். அவர் 2011 ஆம் ஆண்டு முதல் IESL இன் உறுப்பினராகவும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் கட்டுமான பொறியியலாளர், வடிவமைப்பு பொறியியலாளர், முகாமையாளர் (கட்டுமானம்), உதவிப் பொது முகாமையாளர் (கழிவுநீர்), பிரதி பொது முகாமையாளர், திட்ட பணிப்பாளர் (GAMIWSS) மற்றும் மேலதிக பொது முகாமையாளர் (நீர் சீராக்கம்) என 27 வருட அனுபவமுள்ளவர்.

பொறியியலாளர். N. H. D. P. தர்மபால / மேலதிக பொது முகாமையாளர் (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்) (ஜனவரி 2022 முதல் இன்று வரை)





2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து மேலதிக பொது முகாமையாளராக (வடமத்திய மற்றும் வடக்கு) நியமிக்கப்பட்டார். 1987 ல் விஞ்ஞானதுறை பொறியியல் (சிவில்) பட்டதாரி-பேராதனை பல்கலைக்கழகம், 1998 இல் ஜேர்மனியில் M.Sc (வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல நாடுகளின் நீர் முகாமைத்துவம்) என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் அவர் இலங்கை பொறியியல் நிறுவகத்தில் உறுப்பினராக உள்ளதுடன் செயற்திட்டப் பொறியியலாளர், வடிவமைப்புப் பொறியியலாளர், சிரேஷ்ட நிர்மாணப் பொறியியலாளர், செயற்திட்ட முகாமையாளர், முகாமையாளர் (O&M), உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் 32 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறியியலாளர். எம்.கே.டி.ஜே.எச் மீகொட / மேலதிக பொது முகாமையாளர் (வடமத்திய மற்றும் வடக்கு) (2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து நவம்பர் 2023 வரை)



பெப்ரவரி 2023 இல் மேலதிக பொது முகாமையாளராக (வடக்கு / வட மத்தி) நியமிக்கப்பட்டார். 1991 இல் இளங்கலை பொறியியல் (சிவில்) மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், 1991 இல், M.Eng. (கட்டுமான முகாமைத்துவம்) மொறட்டுவ பல்கலைக்கழகம் இலங்கை, 1998 இல், MSc. (நீரியல் மற்றும் நீர் வளங்கள்) - 2008 இல் நெதர்லாந்து, 2018 இல் MBA ரஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றில் பட்டம் பெற்றுள்ளார். இவர் IESL இன் உறுப்பினராக உள்ளார். மேலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபையின் சிவில் பொறியாளர், முகாமையாளராக (O&M) திட்ட மேலாளர், உதவி பொது முகாமையாளராக, திட்ட இயக்குனர், பிரதி பொது முகாமையாளர் ஆக 29 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

பொறியியலாளர். தி.பாரதிதாசன் / மேலதிக பொது முகாமையாளர் (வடக்கு/வடமத்திய) (ஜனவரி 2023 முதல் இன்று வரை)

பெப்ரவரி 2023 இல் மேலதிக பொது முகாமையாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) ஆக நியமிக்கப்பட்டார். BSc (பொறியியல்) விசேட, மொறட்டுவை பல்கலைக்கழகம் - 1991, P. G. டிப்ளோமா - கட்டுமான முகாமைத்துவம் - மொறட்டுவை பல்கலைக்கழகம் - 1996 P.G. டிப்ளோமா - குடிநீர் விநியோக முகாமைத்துவம் - கார்ல் டுயிஸ்பெர்க் நிறுவனம், ஜெர்மனி - 2000, MBA - வணிக நிர்வாகம் - முதுகலை முகாமைத்துவம் நிறுவனம் (PIM) - 2012 , IESL உறுப்பினர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் பொறியியலாளர், நிலத்தடி நீர் பொறியியலாளர், வடிவமைப்பு பொறியியலாளர், கட்டுமானப் பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் (P&D & O&M) திட்டப் பணிப்பாளர் (KTW திட்டம்), உதவி பொது முகாமையாளர் (MDT) பிரதி பொது முகாமையாளர் (Development & WSP) மற்றும் மேலதிக பொது முகாமையாளர் என 30 வருட அனுபவம் கொண்டவராக உள்ளார்.

பொறியியலாளர். ஜாலிய சீக்குகே / மேலதிக பொது முகாமையாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) (பிப்ரவரி 2023 முதல் இன்று வரை)





பெப்ரவரி 2023 இல் மேலதிக பொது முகாமையாளர் (நீர் சீரமைப்பு) ஆக நியமிக்கப்பட்டார். 1992 இல் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பொறியியல் (சிவில்) இளங்கலை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றுள்ளார். சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் முகாமைத்துவத்தில் PG டிப்ளோமா (1995) மற்றும் கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்புகள் (2011) மொறட்டுவ, MSC UNESCO-IHE, நெதர்லாந்தில் சுகாதாரப் பொறியியலில் (2005). IESL உறுப்பினர் மற்றும் IWA இன் உறுப்பினர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் வதிவிடப் பொறியியலாளர், வடிவமைப்புப் பொறியியலாளர் பிரதம பொறியியலாளர், தலைமைப் பொறியியலாளர், ஆலோசகர் (நீர் கழிவு வடிவமைப்பு), பிரதி பொது முகாமையாளர் (நீர் சீரமைப்பு) மற்றும் தற்போது மேலதிக பொது முகாமையாளராக (நீர் சீரமைப்பு) என 30 வருட அனுபவத்தினை கொண்டுள்ளார்.

பொறியியலாளர் . தனேஷ் குணதிலக்க / மேலதிக பொது முகாமையாளர் (நீர் சீரமைப்பு) (பெப்ரவரி 2023 முதல் இன்று வரை)

2023 டிசம்பரில் மேலதிக பொது முகாமையாளர் (மத்திய, வடமேற்கு, சப்ரகமுவ) ஆக நியமிக்கப்பட்டார். 1991 இல் சிவில் இன்ஜினியரிங் BSC (சிறப்பு) பட்டத்தினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். கட்டுமான மேலாண்மை, வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புப் பொறியியல் ஆகியவற்றில் முதுகலை டிப்ளோமா தகுதிகளைப் பெற்றுள்ளார். மற்றும் வணிக நடுவர் டிப்ளோமா (Institute for the Development of Commercial Law and Practice) Sri Lanka). அவர் உறுப்பினராவார். ஜேர்மனியில் கழிவு நீர் முகாமை தொடர்பான நிபுணத்துவப் பயிற்சியைப் பெற்றார். வடிவமைப்பு, கட்டுமான O&M மற்றும் திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் தே.நீ.வ. சபையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை கொண்டுள்ளார்.

பொறியியலாளர். M. T. M. ராசில் / மேலதிக பொது முகாமையாளர் (மத்திய/வடமேற்கு/ சப்ரகமுவ) (டிசம்பர் 2023 முதல் இன்று வரை)





இவர் 2022.12.30 இல் மேலதிக பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்) ஆக நியமிக்கப்பட்டார். அவர் 2006 இல் வணிக நிர்வாக முதுகலை பட்டத்தினை (MBA) ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவம் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்தில் (PIM) முடித்துள்ளார். 1999 இல் களனிப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ மனித வள சிறப்புப் பட்டப்படிப்பில் இளங்கலைப் பட்டம் பெற்றார். அவர் பணியாளர் முகாமை பட்டய நிறுவனத்தில் உறுப்பினராக உள்ளார். மற்றும் அவர் தனது பட்டப்படிப்புக்குப் பிறகு பல நிறுவனங்களில் மனித வள முகாமை துறையில் அனுபவத்தைப் பெற்றார். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் பிரதிப் பொது முகாமையாளராக (மனித வளங்கள்) வும், 1 வருடமும் 06 மாதங்கள் செயல் மேலதிக பொது முகாமையாளர் (HRM) ஆக பணிபுரிகின்றார்.

திரு. M. A. S. S. K. சந்திரசிறி / மேலதிக பொது முகாமையாளர் (மனித வளம்) வே.பா (டிசம்பர் 2023 முதல் இன்று வரை)

## பிரதி பொது முகாமையாளர்கள் தலை அலுவலகம்

1. **திருமதி. எம். எம். எஸ். பீரிஸ் (நிதி)**
   B.Sc. (Accountancy & Finance Mgt.), ACA (SL)

2. **திரு. ஆர்.எம் ஏ. பண்டார**
   **(விநியோகங்கம் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**
   B.Sc., (Business Administration - Spl.) Dip. in (Purchasing and Materials Mgt.)

3. **திரு. ஏஜி எஸ். குமார (செலவு)**
   B. Com. (Sp.), M. Sc. (Management), FCA

4. **எந்திரி . (திருமதி.) எம். ஏ. சி. ஹேமச்சந்திரா**
   **(சிறு நகர கிராமப்புறம் நீர் விநியோகம்)**
   B. Sc. (Eng.) Hons, PG. Dip (Envi.), PG. Dip. (Strac.), C. Eng. MIE (SL)

5. **எந்திரி . ஜி. என். டி. நெவில் (நீர் சீரமைப்பு)**B. Sc. in Civil Eng. (IESL), PG. Dip. (Env. Eng. & Mgt. Moratuwa), M. Sc. (Cons. Pro. Mgt.)

6. **திரு. ஜி. ஏ. பி. பத்மநாதா (வணிகம்)**
   B.Sc (P. Administration - Spl.), MBA, MSLIM, Fellow (IMSL), Member (IMSL), Asso. Member (IPFDA)

7. **எந்திரி . ஏ. மகாதந்திலா (நன்கொடையாளர் ஒருங்கிணைப்பு)**
   B. Sc. Eng, C. Eng. MIE (SL) - Member of IWA, PG. Dip (Env. Eng. & Mgt - UOM), Pg. Dip. Sanit. Eng. (IHE, Delft - Netherland)

8. **திரு. யு. ஜே. சமரசிங்க (உள் கணக்காய்வு)**
   B. Sc. (HONS), MBA (HR), MABE (UK)

9. **திரு. டி. ஜி. ஆர். டி. குமார (தொழில்துறை உறவுகள்)**
   B. Sc. Mgt (SP), Ad. Dip. in HRM, Dip in B. Mgt.

10. **எந்திரி . ஏ. எஸ். களுஆராச்சி (வளர்ச்சி)**
    M. Eng. (Env. Water Resources Eng.), M. Sc. Env. Science (Delft), C. Eng MIESL

11. **எந்திரி . (திருமதி) என்.பி குணவர்தன**
    **(நுகர்வோர் மற்றும் சொத்து முகாமை)**
    B. Sc. Eng, MBA, M. Eng. (AIT-Bangkok), PPD (IHE-Delft), Charted Engineer, FIE (SL)

12. **எந்திரி . எச். கே. பி. கே. ஜினதாச**
    **(திட்டமிடல் ரூ வடிவமைப்பு)**
    Bsc. Eng. (Hons.), C. Eng., MIE (SL), MSc. (Urban Eng.), PG. Dip. (Cons. Mgt.), MBA

13. **எந்திரி . (திருமதி.) சேனானி ஜெயசிங்க**
    **(கூட்டிணைந்த திட்டம்)**
    B. Sc. in Civil Eng. (Hons.), M. Eng. (Structural), C. Eng. MIE. (SL)

14. **எந்திரி . ஈ. எம். கே. ஏகநாயக்க**
    **(இயந்திரம் மற்றும் மின்சாரம்)**
    B. Sc. (Eng.) - Mech., C. Eng. (IESL), PG. Dip. (Energy Tec.)

15. **எந்திரி . எல். பி. ஏ. பி. பெரேரா (நீர் வழங்கல் திட்டம்)**
    B. Sc. Eng., M. Eng. (P. Mgt.) PG. Dip (Bus. Mgt.), C. Eng. MIE (SL)

16. **திரு.கே.கே.ஆர்.கன்னங்கரா**
    **(மனித வளம்)**
    B. Sc. (HONS), MBA (HR), MABE (UK)

## பிரதி பொது முகாமையாளர்கள் மாகாணம்

17. **எந்திரி . ஏ. கே. கபுருகே (மேல் மத்திய)**
    B.Sc. Eng. (Hon.), MIE (SL), C. Eng. M. Eng. (Struc.)

18. **எந்திரி . ரேமு ரணதுங்க (மேல் வடக்கு)**
    B.Sc. Eng., PG.Dip. (Env. Eng), Master in Dev. Studies, FIE (SL)

19. **எந்திரி . ஏ. எம். ஏ. ரஃபீக் (வடக்கு) ரூ திட்ட பணிப்பாளர் (KCWMP)**
    B.Sc. Eng, C. Eng. (IESL), M.Eng. (W.R. Mgt)

20. **எந்திரி . டிவி. மெதவத்த (மத்தி) ரூ திட்ட பணிப்பாளர் (பாத்ததும்பர WSP)**
    B.Sc. Eng, PG Dip (W.& W.W& Eng. Eng), C.Eng. (IESL), Fellow (IESL), MBA

21. **எந்திரி . (திருமதி.) ஏ. பி. குணவர்தன**
    **(வட மத்தி)**
    B.Sc.Eng, MBA, C. Eng. (IESL)

22. **எந்திரி . வி. ஜி. யு. ரஞ்சித் (தயாரிப்பு) / PD**
MBA (MOT), C. Eng. MIE (SL), PG. Dip (Waste Water)

23. **எந்திரி . கே. பிரதீபன் (வடக்கு)**
B. Sc. Eng.,C. Eng., MIE (SL), M. Sc. (Hydraulic Netherland), PG. Dip. (Water Supply & Waste Water)

24. **எந்திரி . எச். எம். பி. என். ஹேரத் (மேல் தெற்கு) மற்றும் திட்ட பணிப்பாளர் (களுகங்கை WSP)**
B. Sc. Eng., C. Eng.,MIE (SL),PG. Dip. (Moratuwa), MBA (Green University)

25. **எந்திரி . கே. வாசுதேவன் (கிழக்கு)**
B. Sc. Eng., C. Eng., MIE (SL), PG. Dip. (Cons. Mgt.), PG. Dip. (EEWRM)

26. **எந்திரி கே. ஜி. என். எஸ். குமார (தெற்கு)**
B. Sc. (Eng.), C. Eng. (IESL), M. Eng. in Energy Tec. (Moratuwa)

27. **எந்திரி . டி. எல். எஸ். அரியரத்னா (சப்ரகமுவ)**
B. Sc. (Eng.), C. Eng. (IESL), PG. Dip. in Civil Eng. (Ruhuna)

**திட்ட இயக்குநர்களாக உள்ள பிரதி பொது முகாமையாளர்கள்**

28. **எந்திரி . எஸ். எல். மோகன் (Exp. of Pipe Borne Sewer Coverage to Moratuwa/ Ekala Project)**
B. tech. (Civil), MBA, MIESL, PG. Dip. (Cons. Mgt.), M. Sc. (Env. Sci. & Tec.) Netherland

29. **எந்திரி . கே. எல்.எதிரிசிங்க (ஆனமடுவ WSP)**
B. Sc. Eng, C. Eng. MIESL, M. Sc. (Cons. Mgt.)

30. **எந்திரி . என். ஆர். எஸ். விக்கிரமசிங்க (கம்பஹா அத்தனகல்ல WSP)**
B. Sc. (Eng.), C. Eng., FIE (SL), M. Eng. in Moratuwa

# நிறுவனக்கட்டமைப்பு



“நீரை விட மென்மையானதும் நெகிழ்வானதும் எதுவுமில்லை, ஆனாலும் நீரை எதிர்க்க எதனாலும் முடியாது.”

லாவோ சூன்



# செயற்பாடு மற்றும் செயற்திறன் தொடர்பான கண்ணோட்டம்

# கூட்டிணைந்த திட்டத்தை செயல்படுத்துதல்

2023 ஆம் ஆண்டில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதில் உறுதியுடன் இருக்கின்றது. பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் நிச்சயமற்ற நிலைகளை எதிர்கொண்ட போதிலும், நாடு முழுமைக்குமான பாதுகாப்பான குடிநீருக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் அதனோடு இணைந்த சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் அயராது பாடுபட்டது.

**பொருத்தமான வள பயன்பாட்டிற்கான திட்ட மறுசீரமைப்பு**

பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையை ஏற்றுக்கொண்டு, சபையானது தனது "அனைவருக்கும் குடிநீர்" திட்டத்தை மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் கூடிய பயன்களை பெறுகின்ற நோக்கில் விரைவாக மறுசீரமைத்தது. திறன் விருத்தி மற்றும் விநியோக விரிவாக்கத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தது. அத்துடன் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும் அவற்றின் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றது.

**வணிகத் திறன் மற்றும் சமூகப் பொறுப்புக்கான மூலோபாய இலக்குகள்**

வாடிக்கையாளர் சேவை மேம்பாடு மற்றும் நிறுவன வளர்ச்சியுடன் வருமானம் அல்லாத நீர் (NRW) மற்றும் மின் செலவீனங்களைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் மூலம் சபையின் வணிக செயற்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. சமூகப் பொறுப்புணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது, குறிப்பாக அடையாளங் காணப்படாத நீண்டகால சிறுநீரக நோய் நிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பாதுகாப்பான நீர் விநியோக வசதிகள் இல்லாத கிராமப்புற சமூகங்கள் என்பன தொழில்நுட்ப உதவிகள் மூலம் நீரினை பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்பட்டது.

**நீர் பாதுகாப்பு திட்டங்களை செயற்படுத்தல்**

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை உறுதி செய்வதற்கான எமது உறுதிப்பாட்டிற்கு இணங்க, சபையானது நாடு முழுவதும் நீர் பாதுகாப்பு திட்டங்களை (WSPS) தொடர்ந்து செயற்படுத்தி வந்தது. குறிப்பாக 2023 ஆம் ஆண்டின் இறுதியில், 271 நீர் பாதுகாப்பு திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 80 நீர் பாதுகாப்பு திட்டங்கள் பிராந்திய சேவை நிலையங்களின் (RSCs) வழிகாட்டுதலின் கீழ் சிறப்பான ஆயத்தப்படுத்தலில் உள்ளன.

# முதலீடுகளின் தொகுப்பு

**அபிவிருத்தித் திட்டங்களுக்கான முதலீடுகளின் சுருக்கம் -2023**

இலங்கை அரசாங்கம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உள்நாட்டு நிதிகள், வெளிநாட்டுக் கடன்கள், மானியங்கள் மற்றும் நிதியுதவிகளை உள்ளடக்கிய திறைசேரி நிதிகள் மூலம் 61.7 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியது. இந்த ஒதுக்கீட்டிற்குள், 27.9 பில்லியன் ரூபாய் மூலோபாய ரீதியாக பல்வேறு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்பட்டது, இதற்கு மேலதிகமாக சபையின் நிதியில் இருந்து 590.8 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது. இந்த முதலீடுகள் நடைமுறையில் இருக்கும் பாரிய திட்டங்கள், "அனைவருக்கும் குடிநீர்" திட்டத்தில் உள்ள திறன் மேம்பாட்டுத்திட்டங்கள், கிராமப்புற குடிநீர் விநியோக விரிவாக்கம் மற்றும் அதனோடிணைந்த சுகாதார முயற்சிகள் என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்டன.

*அட்டவணை இல 11*

| வகை | இறுதி ஒதுக்கீடு 2023 மில்லியன் ரூபா | செலவு 2023 மில்லியன் ரூபா | | | நிதி நிலை அடைவு |
|---|---|---|---|---|---|
| | | திறைசேரி | சபை | மொத்தம் | |
| திறைசேரி கடன் பெற்ற பாரிய அளவிலான நீர் வழங்கல் திட்டங்கள் | 45,810.48 | 21,464.36 | 374.61 | 21,838.97 | 48% |
| கழிவுநீர் திட்டங்கள் | 2,565.60 | 55.99 | 92.55 | 148.54 | 6% |
| வளர்ந்து வரும் சிறு நகர நீர் வழங்கல் திட்டங்கள் | 300.00 | 52.04 | - | 52.04 | 17% |
| கிராமப்புற தே.நீ.வ.வ.ச மற்றும் பிரதேச குடிநீர் அமைச்சின் நீர் வழங்கல் அபிவிருத்தி | 50.00 | 21.79 | - | 21.79 | 44% |
| | 400.58 | 317.96 | - | 317.96 | 79% |
| தே.நீ.வ.வ.ச கடன் பெற்ற பாரிய அளவிலான நீர் வழங்கல் தற்போதைய திட்டங்கள் திறைசேரி கூறு | 255.09 | 265.87 | - | 265.87 | 104.2% |
| சுங்க வரி செலுத்துதல் | 1,000.00 | - | - | - | 0.0% |
| CEDE தவிர்ந்த திறைசேரியால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் மொத்தம் | **50,381.74** | **2,178.02** | **467.16** | **22,645.17** | **44.9%** |
| CEDE திட்டங்கள் | 11,358.25 | 5,800.29 | 123.73 | 5,924.02 | 52.2% |
| திறைசேரியால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் மொத்தம் | **61,739.99** | **27,978.31** | **590.88** | **28,569.19** | **46%** |

**திறைசேரிக்கான செலவு பின்வரும் நிதி வகைகளில் இருந்து பெறப்படுகிறது**

*அட்டவணை இல 12*

| உள்நாட்டு நிதிகள் மில்லியன் ரூபா | வெளிநாட்டு கடன்கள் மில்லியன் ரூபா | வெளிநாட்டு மானியங்கள் மில்லியன் ரூபா | வெளிநாட்டு நிதி தொடர்புடைய செலவுகள் மில்லியன் ரூபா |
|---|---|---|---|
| 8308.02 | 18716.04 | 178.67 | 775.56 |

மேலும், இலங்கை அரசாங்கத்தின் நேரடி ஒதுக்கீடுகளுடன், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளின் கடன்கள் உட்பட பல்வேறு நிதி மூலங்களைப் பெற்றுக்கொண்டது. மேற்கூறிய உள்நாட்டு வங்கி நிதியுதவி திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் என மொத்தம் 11.56 பில்லியன்களாக இருந்தது. இதில் 360.07 மில்லரின் ரூபா சபையின் சொந்த நிதியிலிருந்து திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டது.

*அட்டவணை இல 13*

| வகை | திறைசேரி ஒதுக்கீடு - 2023 மில்லியன் ரூபா | பயன்பாடு 2023 மில்லியன் ரூபா | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| திறைசேரி நிதி - அமுலாக்கலில் உள்ள நீர் வழங்கல் திட்டங்கள் | 50,381.74 | 22,645.17 | 44.9% |
| திறைசேரி நிதி - CEDEP | 11,358.25 | 5,924.02 | 52.2% |
| மொத்த திறைசேரி நிதி | **61,739.99** | **28,569.19** | **46.3%** |
| சபை கடன் பெற்ற நீர் வழங்கல் திட்டங்கள் | - | 11,169.66 | - |
| உள்ளூர் வங்கி நிதி திட்டங்கள் | - | 403 | - |
| மொத்த கூட்டுத்தொகை | **61,739.99** | **40,141.86** | - |

சபையானது பெறப்பட்ட நிதியுதவிகளை பொருத்தமான வழிகளில் பயன்படுத்தியது. நீர் வழங்கல் மற்றும் நீர் சீராக்கத் துறையின் மொத்தம் வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக 40.1 பில்லியன் ரூபா முதலிடப்பட்டது. இந்த முயற்சியானது அனைவருக்கும் நீர் மற்றும் நீர் சீராக்க சேவைகளுக்கான நிலையான சேவையினை வழங்குகின்ற எங்கள் சேவைக்கு உறுதுணையாக அமைந்தது. மேலும், 2.10 பில்லியன் ரூபா முதலீடு வருமானம் பெறப்படாத நீர் , புனர் நிர்மாண நடவடிக்கைகள், சக்தி சேமிப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட முன்முயற்சிகள் மூலம் வணிக செயல்திறனை விருத்தி செய்ய பயன்படுத்தப்பட்டது. முழுவதுமாக, இந்த முதலீடுகள் மொத்தம் 42.2 பில்லியன் ரூபா இருந்தது, இது நீர் வழங்கல் துறையின் வளர்ச்சியை நோக்காகக் கொண்ட நமது அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

2023 ஆம் ஆண்டானது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கான சவால் மிகுந்த காலப்பகுதியாகக் காணப்பட்டது. எனினும் அனைவருக்கும் குடிநீர் வழங்குவதற்கான எங்கள் இலக்கை விரைந்து அடையவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். வினைத்திறனான நிதி முகாமைத்துவம், மூலோபாய திட்டமிடல் மற்றும் நிலையான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம், தொடர்ச்சியான நீர் வழங்கல் மற்றும் நீர் சீராக்கல் தீர்வுகள் மூலம் நாட்டின் ஆரோக்கியம், செழிப்பு மற்றும் வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு சபையானது உறுதிபூண்டுள்ளது.

# பொருளாதார மதிப்பு கூட்டல் அறிக்கை

2023 ஆண்டு தேசிய நீர் வழங்கல் சபையானது நாட்டின் பொருளாதார நிச்சயமற்ற தன்மை, பணக்கொள்கைகள் என்பவற்றினால் சிக்கல்களை எதிர்கொண்டது. இத்தகைய சவால்களை எதிர்கொண்ட போதிலும் தேசிய நீர் வழங்கல் சபையானது நிலையான சேவைகளை வழங்குவதிலும் சிறப்பான வளமுகாமைத்துவத்தினை உறுதிசெய்வதிலும் உறுதியாக இருந்தது. சபையானது 17.11 பில்லியன் இயக்க இலாபத்தை பதிவு செய்தது. மேலும் இதற்கேற்ப கடன் மூலதனத்தின் செலவை கணக்கிட்ட பிற்பாடு நிதியாண்டின் செலவுக்கு மேற்பட்ட வருமான மிகுதியானது 5.28 பில்லியன் ஆக கணக்கிடப்பட்டது. எவ்வாறாயினும் அரசாங்க சமபங்கு மூலம் மொத்த முதலீட்டு மூலதனத்தின் மீதான வருவாயைக் கருத்தில் கொண்டு-17.46 பில்லியன் பொருளாதார மதிப்பு கூட்டப்பட்டதானது பொருளாதாரத்திற்கு பதிலளிக்கும் வகையில் மத்திய வங்கியின் நடவடிக்கைகளால் தாக்கப்பட்ட அதிகரித்த எடையுள்ள சராசரி மூலதனச்செலவின் தாக்கத்தை பிரதிபலிக்க செய்கின்றது.

இந்த பொருளாதார நெருக்கடிகள் இருந்த போதிலும் தேசிய நீர் வழங்கல் சபையானது தேசத்திற்கு அத்தியாவசிய நீர் மற்றும் நீர் மீட்பு சேவைகளை வழங்குவதில் தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றது. அடிப்படை மனித தேவையாக நீரை அங்கீகரித்து வருகின்றது. தேசிய நீர் வழங்கல் சபையின் உயர் நிர்வாகம் அதன் பொருளாதார மதிப்பை மேம்படுத்துவதற்கும் நிலைத்தன்மையில் சலால்களை வழிநடத்துவதற்கும் சமூகத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்புகளை உயர்த்துவதற்கும் தொடர்ந்து முயற்சிக்கிறது.

அட்டவணை இல 14

| | | 2022 | 2023 | மாற்றம் % |
|---|---|---|---|---|
| **பிரதான புள்ளிவிபரங்கள் : நீர் வழங்கல்** | | | | |
| நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை | | 339 | 341 | 0.59 |
| குழாய் நீர் உட்பத்தி (மில்லியன் க.மி) | | 818 | 803 | -1.83 |
| குழாய் நீர் நுகர்வு (மில்லியன் க.மி) | | 612 | 599 | -2.12 |
| வீட்டு இணைப்புக்கள் | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 1,116,928 | 1,146,787 | 2.67 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 1,556,603 | 1,630,145 | 4.72 |
| **மொத்த வீட்டு இணைப்புக்கள்** | | 2,673,531 | 2,776,932 | 3.87 |
| பொது நீர்க் குழாய்கள் (எண்ணிக்கை) | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 448 | 443 | -1.12 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 691 | 684 | -1.01 |
| **பொது நீர்க் குழாய்கள்** | | 1,139 | 1,107 | -2.81 |
| வீடல்லாத நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 108,118 | 112,497 | 4.05 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 123,892 | 131,621 | 6.24 |
| **மொத்த வீடல்லாத இணைப்புக்கள்** | | 232,010 | 244,118 | 5.22 |
| (பொது நீர்க் குழாய்கள் உள்ளடங்கலாக) | | | | |
| மொத்த சேவையில் உள்ள இணைப்புக்களின் எண்ணிக்கை | | 2,905,541 | 3,021,050 | 3.98 |
| சராசரி மாதாந்த வீட்டு நுகர்வுகள் | (அ)மேல் மாகாணம் | 16.81 | 15.72 | -6.48 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 12.88 | 11.91 | -7.53 |
| நீர் உற்பத்திக்கான சராசரி மீண்டெழும் செலவு (ரூபா/ க.மீ) | | 51.15 | 82.00 | 60.31 |
| சராசரி மொத்த செலவு /விற்பனை செய்த அலகு (ரூபா/ க.மீ) | | 68.43 | 86.00 | 25.68 |
| சராசரி அலகு வருமானம் (பட்டியல்/நுகர்வு) (ரூபா/ க.மீ) | | 53.18 | 53.18 | 0.00 |
| மாதாந்த சராசரி வீட்டுக் கட்டணப் பட்டியல் பெறுமதி (ரூபா) | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 1,030.88 | 1,794.33 | 74.06 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 652.01 | 1,210.45 | 85.65 |
| சேகரிப்பு வினைத்திறன் | | 0.99 | 0.95 | -4.04 |
| ஆழ் கிணறுகள் (எண்ணிக்கை) | (அ)தோண்டப்பட்டவை | 109 | 81 | -25.69 |
| | (ஆ)வெற்றியளித்தவை | 98 | 68 | -44.12 |
| வருமானமற்ற நீர் (%) | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 25.06 | 24.46 | -2.39 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 25.42 | 26.20 | 3.07 |
| | (இ)நாடுபூராவும் | 25.23 | 25.32 | 0.36 |
| **பிரதான புள்ளிவிபரங்கள் / நீர் மீளாக்கம்** | | | | |
| வீட்டு இணைப்புகள் | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 17,210 | 17,449 | 1.39 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 4,665 | 4,731 | 1.41 |
| வீட்டிணைப்பு அற்ற இணைப்புகள் (எண்ணிக்கை) | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 1,415 | 1,441 | 1.84 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | 864 | 871 | 0.81 |
| வீடமைப்பு திட்ட இணைப்புக்கள் (மொத்தம்) | | | | |
| | (அ)மேல் மாகாணம் | 3,666 | 3,666 | 0.00 |
| | (ஆ)ஏனைய மாகாணம் | - | - | - |
| **மொத்த கழிவகற்றல் அணைப்புக்கள்** | | | | |
| | (அ)நாடுபூராவும் | 27,820 | 28,158 | 1.21 |
| | (ஆ)மேல் மாகாணம் | 22,291 | 22,556 | 1.19 |
| | (இ)ஏனைய மாகாணம் | 5,529 | 5,602 | 1.32 |
| **ஏனைய பிரதான புள்ளிவிபரம்** | | | | |
| மொத்த வருமானம் (ரூ.மில்லியன் VAT அல்லாத) | | 32,533 | 57,537 | 76.86 |
| மொத்த மீண்டெழும் செலவினம் (ரூ.மில்லியன்) | | 41,461 | 63,972 | 54.29 |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை / 1,000 இணைப்புக்கள் | | 3.12 | 2.80 | -10.26 |
| | | 56.34 | 42.20 | -25.10 |

# செயற்பாடுகளின் தொகுப்பு

### குடிநீர் உற்பத்தி

2023 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட குடிநீரின் மொத்த அளவு 803 மில்லியன் கன மீட்டர் ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் குடிநீர் உற்பத்தியின் போக்கு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மேல்மாகாண நீர் வழங்கல் கட்டமைப்பானது பிரதானமாக அம்பத்தளை, லபுகம, களுதுவாவ, பியகம, பம்புகுளிய, கந்தானை மற்றும் கெத்ஹேன ஆகிய நீர் சுத்திகரிப்பு மையங்களின் ஊடாக நீர் உற்பத்தியின் பெரும் பங்கைப் பெறுகின்றது. இது வருடமொன்றில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீர் உற்பத்தியில் 51.03% ஆகும்.




### 2023 ஆம் ஆண்டின் மாகாண ரீதியிலான நீர் உற்பத்தி




### உற்பத்திக் கிரயம்

2022 உடன் ஒப்பீடு செய்து மொத்த செலவீனத்தின் விபரங்கள் (ரூபா மில்லியன்) கீழே தரப்பட்டுள்ளது.




### இணைப்புக்களின் அதிகரிப்பு




### வருடாந்திர நீர்ப்பட்டியல் மற்றும் கட்டண வரவிற்கான ஒப்பீடு (VAT உள்ளடங்கலாக)




### சாரசரி மாதாந்த வீட்டு நுகர்வு (க.மீ/ இணைப்பொன்றிற்கு)




### சாரசர் மாதாந்த வீட்டு பற்றுச்சீட்டு



| மாகாணம் / பி.ஆ.நி.வாரியாக இணைப்புகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | (சதவீதம்) |
| மேல் மத்தி | 563,287 | 575,328 | 2.14 |
| மேல் வடக்கு | 355,414 | 369,713 | 4.02 |
| மேல் தெற்கு | 306,345 | 314,243 | 2.58 |
| மத்திய | 321,665 | 337,112 | 4.80 |
| வடமேல் | 120,887 | 130,203 | 7.71 |
| வட மத்திய | 168,752 | 177,266 | 5.05 |
| சபரகமுவ | 145,556 | 153,197 | 5.25 |
| தெற்கு | 382,817 | 393,867 | 2.89 |
| ஊவா | 144,227 | 151,759 | 5.22 |
| வடக்கு | 43,571 | 51,553 | 18.32 |
| கிழக்கு | 353,030 | 366,809 | 3.90 |
| Total | 2,905,541 | 3,021,050 | 3.98 |

| தே.நீ.வ.ச. பிராந்திய வாரியாக இணைப்புகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | மாகாணம் / பி.ஆ.நி. 2021 திசெம்பர் | மாற்றம் % |
| முன்னுரிமை | 1,909 | 1,902 | -0.37 |
| கொழும்பு நகரம் | 147,244 | 148,809 | 1.06 |
| கோட்டை | 189,922 | 192,763 | 1.50 |
| மஹரகம | 224,212 | 231,854 | 3.41 |
| களனி | 248,767 | 255,599 | 2.75 |
| கம்பஹா | 106,647 | 114,114 | 7.00 |
| தெஹிவளை | 116,700 | 118,213 | 1.30 |
| களுத்துறை | 79,182 | 81,654 | 3.12 |
| பாணந்துறை | 110,463 | 114,376 | 3.54 |
| கண்டி வடக்கு | 128,618 | 140,192 | 9.00 |
| கண்டி தெற்கு | 113,284 | 115,486 | 1.94 |
| கண்டி கிழக்கு | 79,753 | 81,434 | 2.11 |
| குருநாகல் | 60,259 | 66,164 | 9.80 |
| புத்தளம் | 60,628 | 64,039 | 0.02 |
| அநுராதபுரம் | 111,035 | 116,951 | 5.33 |
| பொலன்னறுவை | 57,717 | 60,315 | 4.50 |
| இரத்தினபுரி | 77,755 | 81,634 | 4.99 |
| கேகாலை | 67,801 | 71,563 | 5.55 |
| ஹம்பாந்தோட்டை | 132,298 | 136,145 | 2.91 |
| மாத்தறை | 112,989 | 116,604 | 3.20 |
| காலி | 137,530 | 141,118 | 2.61 |
| பண்டாரவளை | 84,667 | 89,969 | 6.26 |
| மொனறாகலை | 59,560 | 61,790 | 3.74 |
| யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா | 43,571 | 51,553 | 18.32 |
| அம்பறை | 83,992 | 86,385 | 2.85 |
| திருகோணமலை | 99,791 | 103,310 | 3.53 |
| அக்கரைப்பற்று | 97,196 | 100,162 | 3.05 |
| மட்டக்களப்பு | 72,051 | 76,952 | 6.80 |
| Total | 2,905,541 | 3,021,050 | 3.98 |

குறிப்பு :
"*" கொழும்பு நகர பிரதேசங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை நீரிணைப்புகள் வழங்கப்படும்
"*" புதிய சேவை வரம்புகளை நிறுவி மீற்றர் தொகுப்புக்கள் முறையாக மாற்றம் செய்யப்பட்டது.

**வகுதிப்படுத்திய நுகர்வோரால் பயன்படுத்திய நீர் அளவின் சதவீதம்**




**வகுதிப்படுத்திய நுகர்வோர் மூலமான வருமான சதவீதம்**



# நிறுவன இடர் முகாமைத்துவம்

NWSDB செயற்பாடு மற்றும் செயற்திறனை பாதிக்கக்கூடிய பயனுள்ள அமைப்பை உறுதி செய்வதற்காக, கூட்டிணைந்த உள்ளடக்க அறிக்கை (SCI) 2023-2025 அடிப்படையில் 12 முக்கிய இடர்களை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

1. நீர் பற்றாக்குறை
2. நீர் மாசாக்கம்,
3. சமூக மற்றும் கலாச்சார தாக்கங்கள்
4. வருமானம் அல்லாத நீர்,
5. தகவல் பாதுகாப்பு மற்றும் இணைய பாதுகாப்பு
6. திட்ட அமுலாக்கம் மற்றும் முதலீட்டு அபாயங்கள்
7. சுயநிதி
8. கட்டண நிர்ணய இடர்கள்
9. நிதி மற்றும் முதலீட்டு அபாயங்கள்
10. அதிகரிக்கும் சக்திக்கான செலவீனங்கள்
11. நாணய பணவீக்கம்
12. அரசாங்க கொள்கை கட்டமைப்பு மாற்றம்

இடர் முகாமைத்துவம் அதன் கட்டமைப்பின் உருவாக்கம் மற்றும் மேம்பாடு இடர் மதிப்பீட்டு பொறிமுறையை அடையாளம் காண இடர் முகாமைத்துவகுழு தொடங்கப்பட்டுள்ளன. பூர்வாங்க நடவடிக்கையாக, கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்களால் சரியான முறையில் தயாரிக்கப்பட்ட சம்பவ பதிவேடுகள் மற்றும் இடர் பதிவேடுகளை பராமரிக்க முடிவு செய்யப்பட்டது. மேலதிக பொது முகாமையாளர் (கூட்டிணைந்த சேவைகள்) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி) ஆகியோர் முறையே இடர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைமை இடர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வருடாந்திர செயற்திறன் மதிப்பாய்வு கூட்டம் (APRM) - ஆண்டு 2023

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த செயல்திறன் மீளாய்வுக் கூட்டத்தின் போது, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளர் திரு. ருவன் லியனகே, 2022 ஆம் ஆண்டில் நிறுவனம் எதிர்கொண்ட டொலர் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, கோவிட் தொற்றுநோயின் தாக்கம் மற்றும் எரிபொருள் உட்பட பலமிக்க சவால்களை வெளிப்படுத்தினார். எவ்வாறாயினும், இந்தத் தடைகள் இருந்தபோதிலும், சபையானது நெகிழ்ச்சித்தன்மையை வெளிப்படுத்தி சார் செயற்திறனை அடைந்துகொள்ளும் வண்ணம் செயற்பட்டது . மேலதிக பொது முகாமையாளர் (நிதி) 2022 ஆம் ஆண்டிற்கான நிதி செயற்திறனை வழங்கினார், இது 40 பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக 35.4 பில்லியன் ரூபா வருமானம் மற்றும் 12.3 பில்லியன் ரூபா மொத்த லாபத்தை எடுத்துக்காட்டுகிறது. 1.15 பில்லியன் ரூபா செயற்பாட்டு இழப்பு மற்றும கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சவால்கள் இருந்தபோதிலும், வருமான வரத்தினை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டத்தின் போது முக்கிய விவாதங்கள் திட்ட நிறைவுக்கான சவால்கள் மற்றும் உத்திகள், நிதி செயல்திறன், மனித மூலதன மறுசீரமைப்பு, கணக்காய்வு நாயகத்தின் கருத்து, திட்ட தாமதங்கள், நிறுவனத்தை வலுப்படுத்துதல் மற்றும் ஒரு தேசிய கடமை மற்றும் மீட்பு உத்திகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. மேலதிக பொது முகாமையாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) வணிக செயற்திறன் மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான உத்திகளை கோடிட்டுக்காட்டினார். இதில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பது, மனித வளங்களை மேம்படுத்துதல், அறிவுசார் முகாமை, வருமானம் அல்லாத நீர் குறைப்பு, சக்தி சேமிப்பு திட்டங்கள், சொத்து முகாமை, எண்மிய மாற்றம், நிறுவன சீர்திருத்தங்கள், வாடிக்கையாளர் சேவை மேம்பாடுகள் மற்றும் வணிக செயல்முறை மறுசீரமைப்பு ஆகியவை அடங்கும்.

கூட்டத்தின் போது, நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. மொஹமட் காடர், போதிய நிதியுதவி இல்லாத நிலையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் எதிர்காலம் குறித்து தனது கருத்துக்களைத் தெரிவித்தார். நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சபையின் நிதி சவால்கள் பற்றிய பிரச்சசினைகளை வெளிப்படுத்தியதுடன், இந்த தடைகளை கடப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு திறைசேரியை வலியுறுத்தினார். பங்குதாரர்களின் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த தலைவர், நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் சரியான நேரத்தில் கொள்கை முடிவுகளை எடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஒட்டுமொத்தமாக, சவால்களை சமாளிப்பதற்கும், அதன் நோக்கத்தை அடைவதற்கும், நிலையான வளர்ச்சியை உறுதிசெய்ய பங்குதாரர்களிடமிருந்து ஆதரவைப் பெறுவதற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின அர்ப்பணிப்பை இந்த சந்திப்பு அடிக்கோடிட்டுக் காட்டியது.

# நிதி செயற்திறன் பகுப்பாய்வு


















# செயற்பாட்டு செயற்திறன் பகுப்பாய்வு

குழாயிடப்பட்ட நீர் வழங்கல் விஸ்தாரணம் (%)




செயற்பாட்டு விகிதம் (வருமானம் மற்றும் செலவினம்)




பட்டியல், அறவீடுகள் மற்றும் கடன்பட்டோர் முகாமைத்துவ வினைத்திறன்




1000 நீர் இணைப்புக்களுக்கான மொத்த ஊழியர்களின் எண்.




வருவாயற்ற நீர் முகாமைத்துவத்தின் குறைத்துக் கொள்ளும் செயற்திறன்




மதிப்பிடப்பட்ட பட்டியல் / 1000 இணைப்புக்கள்




இருப்பு வினைத்திறன் (நீரிணைப்பொன்றிற்கு ரூபா.)




நீர் தரம் % (நுண்ணுயிரியல் ரீதியாக அனுமதிக்கப்பட்ட நீர் மாதிரி)





“நீர் எப்போதும்
ஓடிக்கொண்டிருக்கின்றது, அது
நிலத்தை மறுசீரமைக்கிறது.”

*டிம் பால்மர்*

# செயற்பாட்டுத் துறைகள் மற்றும் பிரிவுகள்

# நீர் வழங்கல் திட்டங்கள்

நீர் வழங்கல் திட்டங்கள் (WSP) பிரிவானது திறைசேரி (TF), கடன் சபை (BB) உள்ளூர் வங்கி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கத் திட்டம் (ஊநுனுநு) உட்பட உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நிதியளிக்கப்படும் பல்வேறு பாரியளவிலான நீர் வழங்கல் திட்டங்களை மேற்பார்வை செய்கின்றது. திட்டங்களை செயற்படுத்துவதற்காக திட்ட நிர்வாகம், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தினை கண்காணித்தல், மாதாந்த முன்னேற்ற அறிக்கையிடல், தீர்மானம் எடுப்பதற்கான பதிவுகளை பராமரித்தல், ஒப்பந்த கொடுப்பனவுப் பரிந்துரைகள், மனித வள முகாமைத்துவம், ஒப்பந்த இணக்கம், நிதி முகாமைத்துவம், உதவி செயற்பாடுகள், திட்ட நிதியளித்தல், கொள்முதல் ஆகிய முக்கிய பொறுப்புக்களை செயற்படுத்துகின்றது.

2023 ஆம் ஆண்டு நீர் வழங்கல் திட்ட பிரிவானது சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை மக்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்ட பல முக்கியமான திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளது. இத்திட்டங்கள் பொது சுகாதாரத்தினை மேம்படுத்துவதிலும் நாட்டின் பொருளாதாரத்தினை வளர்ப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

*அட்டவணை இல 16*

| திறைசேரி நிதியுதவியுடனான திட்டங்கள் |
|---|
| ஆனமடுவ ஒருங்கிணைந்த நீ.வ.தி கட்டம் I |
| அனுராதபுர வடக்கு நீ.வ.தி கட்டம் I |
| அனுராதபுர வடக்கு நீ.வ.தி கட்டம் II |
| அம்பத்தளை நீர் வழங்கல் மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு திட்டம் |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம். |
| பாரிய மாத்தளை நீ.வ.தி |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புத் திட்டம் |
| களு கங்கை நீ.வ.தி விரிவாக்கம் I |
| கண்டி பத்தும்பர நீ.வ.தி |
| ருவன்வெல்ல நீ.வ.தி |

*அட்டவணை இல 17*

| கடன் சபை நிதியுதவியுடனான திட்டங்கள் |
|---|
| அழுத்கம மத்துகம அகலவத்த ஒருங்கிணைந்த நீ.வ.தி |
| கம்பஹா அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீ.வ.தி |
| கெம்மாதகம நீ.வ.தி |
| கட்டான நீ.வ.தி விரிவுபடுத்துதல் பணிகள் |
| மாத்தறை கட்டம் IV நீ.வ.தி |
| ஒருகொடவத்தையிலிருந்து கடுவெல வரையான பரிமாற்ற மற்றும் பிரதான விநியோக குழாய்களை மாற்றியமைத்தல் |
| பொல்கஹாவெல பொத்துஹெர அலவ்வ ஒருங்கிணைந்த நீ.வ.தி |
| தம்புத்தேகம நீ.வ.தி |

*அட்டவணை இல 18*

| உள்ளூர் வங்கி நிதியுதவியுடனான திட்டங்கள் |
|---|
| கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீர் வழங்கல் திட்டம்- தொகுப்பு - II |
| லக்கல நீ.வ.தி |
| வில்கமுவ நீ.வ.தி |
| பாரிய இரத்தினபுரி நீ.வ.தி (விநியோகம்) |
| கிரிதர நீ.வ.தி |
| காலி கிளஸ்ரர் நீ.வ.தி |

சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் கம்பஹா அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு திட்டம், அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்புத் திட்டம், கெம்மாதகம நீ.வ.தி மற்றும் ஒருகொடவத்தையிலிருந்து கடுவெல வரையான பரிமாற்ற மற்றும் பிரதான விநியோக குழாய்களை மாற்றியமைத்தல் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சில நீர் வழங்கல் திட்டங்களுக்கு மாத்திரமே முகவர்களிடமிருந்து நன்கொடை மற்றும் நிதி கிடைத்தது.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதார நெருக்கடி நாட்டின் இயல்பு நிலையை மேற்கோள் காட்டி ADB, China Exim Bank, Indian Exim Bank, JICA, AFD போன்ற சில சர்வதேச நிறுவனங்கள் நிதி வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. இதன் விளைவாக பல திட்டங்களை திட்டமிட்டபடி அவற்றின சரியான கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றன.

2023 ஆம் ஆண்டு நீர் வழங்கல் திட்டங்கள் பிரிவானது கெம்மாதகம நீ.வ.தி மற்றும் கொடவத்தையிலிருந்து கடுவெல வரையான பரிமாற்ற மற்றும் பிரதான விநியோக குழாய்களை மாற்றியமைத்தல் ஆகிய இரண்டு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இதற்கு மேலதிகமாக நாட்டின் நெருக்கடியான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் உள்ளூர் நிதியினை பயன்படுத்தி சகல திட்டங்களையும் நிறைவு செய்வதற்கு வசதியாக தொழிநுட்ப மற்றும் நிதி சாத்திய வள ஆய்வுகளை இப்பிரிவு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. மேலும் பொருளாதார நிதி நெருக்கடியினால் எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ள நன்கொடை நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

# கூட்டிணைந்த திட்டமிடல்

கூட்டுத் திட்டமிடல் (CP) பிரிவானது பிரதி பொது முகாமையாளரால் (CP) வழிநடத்தப்படுதலுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கொள்கை மற்றும் திட்டமிடல்) அறிக்கையிடுகின்றது.

**கூட்டிணைந்த திட்டமிடல் பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு உள்ளது.**

- தாபனத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதனை கண்காணித்தல்.
- நிறுவன திட்டத்தின் இலக்குகள் மற்றும் இலக்குகளின் முன்னேற்றம் தொடர்பில் சபைக்கு அறிக்கையிடல்.
- நிர்வாக தரவுகளை சேகரித்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளல் அத்துடன் பிரதான தகவல்களின் அடிப்படைத் தரவுகளை பேணல்.
- நீர் வழங்கல் அமைச்சு, பொதுத் திறைசேரி, தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD), NBD, PED, PMD, மத்திய வங்கி, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் என்பன உள்ளடங்கலாக உள்ளக, வெளிவாரி பங்குதாரருக்கு தொடர்பான தகவல்களை அறிக்கையிடல்.
- வருடாந்த மூலதன வரவு செலவு திட்டத்தின் கோரிக்கையை அமைச்சின் ஊடாக திறைசேரிக்கு சமர்ப்பித்தலுக்குரிய வேலைகளை மேற்கொள்ளல்.

- வருடாந்த மூலதன வரவு செலவு திட்டத்தின் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், முன்னேற்ற அறிக்கையிடலுக்கான அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து பொருத்தமான பிரிவுகளை ஒருங்கிணைத்தல்.
- பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஆண்டறிக்கை தயாரித்தல்.
- தகவல் கேட்டல் உரிமை சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கோரிக்கைகளை கையாளல்.
- மூத்த நிர்வாகத்தின் சார்பாக பங்குதாரர் கூட்டத்திற்கான விளக்கக்காட்சிகளை தயாரித்தல்.

### சிறப்பு அடைதல்கள் :

- CEDE திட்டத்திற்கு முன்னுரிமையளிப்பதற்காக, நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய மத்திய நிலையங்களால் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2023க்கான மூலதன வரவு செலவு திட்டத்தினை உருவாக்கி மேற்பார்வையிடப்பட்டதுடன் குறிக்கோளை நோக்கிய முன்னேற்றத்தினை கண்காணித்து திறம்பட செயற்படுவது உறுதி செய்யப்பட்டது.
- 04 காலாண்டு அறிக்கைகள் உள்ளடங்கலாக 12 முகாமைத்துவ தகவல்கள் (MI) வெளியிடப்பட்டன.
- முக்கிய செயல்திறன் காட்டிகளின் காலாண்டு அடிப்படையில் வெளியிடப்பட்டமை.
- 2023 மார்கழி 23 ம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.
- 04 காலாண்டு செயலாற்றல் அறிக்கைகள் அதனடிப்படையில் வெளியிடப்பட்டது.
- வருடாந்த உற்பத்தித் தன்மை மற்றும் மேலதிக கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் சேகரித்தல்.
- மேன்முறையீடுகள்.: வழக்குகள் தொடர்பில் RTI ஆணைக்குழு.: மனித உரிமைகள் ஆணைக்குழு முன் தோன்றி சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம், வேண்டுகைக்கான பதில்கள் வழங்கல்.
- குழாய்வழி நீர் மற்றும் பாதுகாப்பு நீர் விஸ்தீரணம் தொடர்பான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் வெளியிடப்பட்டது.
- துல்லியமான நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான துல்லியமான தகவல்கள் தேசிய / சர்வதேச அமைப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- ஒவ்வொரு துறை மற்றும் ஊழியர் மதிப்பாய்விற்காக மாதிரி முக்கிய செயல்திறன் காட்டி படிமுறைகள் தயாரிப்புக்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

## அபிவிருத்தி

அபிவிருத்தி பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரால் (அபிவிருத்தி) தலைமைதாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கொள்கை மற்றும் திட்டமிடல்) அறிக்கையிடுகின்றது.

**2023 ஆம் ஆண்டில் அபிவிருத்தி பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்.**

*அட்டவணை இல 19*

| செயற்பாடு | நடவடிக்ககைகள் |
|---|---|
| நீர் பாதுகாப்பு திட்டங்களின் (WSPs) அமுலாக்கலை கண்காணித்தல் | ■ 271 நீர்பாதுகாப்பு திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதேநேரம் 80 நீ.பா. தி. நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.<br>■ (IESL மற்றும் UNICEF உதவியுடன்) 50 முறையான உள்ளக கணக்காய்வு, 74 உள்ளக கணக்காய்வு மற்றும் நீ.பா.தி ன் 14 முறையான வெளியக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது<br>■ MDTD ஊடாக நீர் பாதுகாப்பு திட்டம் 2023 இன் WHO கையேடு மற்றும் கணக்காய்வாளர்களுக்கான் காலநிலை மாற்ற நீர் பாதுகாப்பு திட்டங்கள் (CRWSP) தொடர்பான மூன்று நாட்கள் கொண்ட இரண்டு TOT பயிற்சி திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br>■ சர்வதேச நீர் மாநாடு 2023 இன் போது WHO; நிதியுதவியுடன் நிபுணர்கள் அமர்வு நடாத்தப்பட்டது.<br>■ பயிற்சிக் கையேடுகளின் உருவாக்கம் மற்றும் பிரதேச சேவை மத்திய நிலையங்களின் அலுவலர் பயிற்சி.<br>■ ஒருங்கிணைக்கப்பட்ட 4 WSP வழிநடத்தல் குழு கூட்டங்கள் முன்வைக்கும் WSP முன்னேற்றும். |
| பங்குரிமையாளர் நிறுவனங்களுடன் நீர் பகிர்தல் தொடர்பாக பங்குனராக நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு | ■ நீர்ப்பாசன திணைக்களம் (ID) மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபை (MASL) என்பவற்றிடமிருந்தான 2020- 2025 வரையான கூட்டிணைந்த திட்டத்தில் செயற்திட்டங்களிற்காக 265 நீர் சுருக்கம் பெறப்பட்டது.<br>■ சபையின் நீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பகிரப்பட்ட நிதிகளுடன் நீர் வள அபிவிருத்தி அல்லது புனரமைப்பிற்காக ID, MASL போன்றவற்றுடன் ஒருங்கிணைப்பு<br>■ MASL மற்றும் MOI, ID இனால் நடாத்தப்பட்ட நீர் வழங்கல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாராந்த நீர் குழு கூட்டங்களில் பங்குபற்றியிருந்தது. |
| அபிவிருத்தி அடைந்துகெ ாண்டிருக்கும், அடையவிருக்கும் நீர்த்தேக்கங்கள் /திட்டங்கள் தொடர்பான மதிப்பீடு | ■ EIA ஒருங்கிணைப்பை மேற்பார்வை செய்து மகா ஓயா பள்ளத்தாக்கில் உத்துச யட்டிமஹன நீர்த்தக்க கருத்திட்டத்தினை தயாரித்தல்.<br>■ நில்வள நதியின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறைகளை தே.நீ.வ.வ.சபையின் சார்பில் தீர்த்தல்.<br>■ தே.நீ.வ.வ.சபையின் நீர் உள்ளெடுப்பு கட்டமைப்பில் தியபரா நீர்த்தேக்கத்ததினுள் நீர் வலைமட்ட அபிவிருத்தியை சாய்வுநிலைக்கு உட்படுத்தல்.<br>■ அம்பத்தல உவர் தன்மைக்கான திட்ட வடிவமைப்பிற்கு நீர்ப்பாசன அமைச்சுக்கு (PMU) உதவுதல்.<br>அத்தனகலு ஓயா தற்காலிக உள்ளெடுப்பு பணிகள் புனாகொடை நீர்த்தேக்கத்தின் நிர்மாணத்துடன் ஒருங்கிணைப்பு செய்தல். |
| சுற்றாடல் நிலைபேறான ஆரம்பம் | ■ EIA அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்காக சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபைக்கு (CEA) தே.நீ.வ.வ.சபையின் சார்பில் உதவுதல்.<br>■ சிறிய நீர் மின் உற்பத்தி மற்றும் ஏனைய நீர்துறை திட்டங்களுக்கான அனுமதியை வழங்குவதில் பொது முகாமையாளருக்கு உதவுதல்.<br>அத்தனகலு ஓயா பள்ளத்தாக்கிற்கான நீரேந்து முகாமைத்துவ திட்டங்களை வரைவதில் உதவி வழங்குதல். |
| தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பிற்காக (னுஊஊள) துறைரீதியான பங்களிப்பு | ■ NDC இலக்குகளின் அமுலாக்கலை கண்காணிப்பதற்கு நீர் வழங்கல் அமைச்சுடன் (MWS& EID) ஒருங்கிணைப்பு. |
| இடர் முகாமைத்துவ தயார்படுத்தல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு | ■ தேசிய வழிகாட்டல் வழியில் நிறுவன ரீதியான இடர் முகாமைத்துவ திட்டம் தயாரிப்பதற்கு தேவையான தரவுகள் மற்றும் உள்ளீடுகளை வழங்குவற்கு தே.நீ.வ.வ.சபையின் ஆலோசனையாளருடன் ஒருங்கிணைப்பு.<br>■ 2023 ல் வறட்சி மற்றும் வெள்ள நிகழ்வுகளை திறம்பட கையாண்டது.<br>பேரழிவு தயார் நிலை மற்றும் மீட்பு ஒருங்கிணைப்புக்காக RSC ஊழியர்களுடன் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் வளிமண்டல திணைக்களத்தின் வானிலை முன்னறிவிப்புக்களையும் DMC, ID மற்றும் NBRO இலிருந்து எச்சரிக்கைகளையும் பகிர்ந்து கொண்டமை. |
| தேசிய கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களுக்கான பங்களிப்பு. | ■ தேசிய ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவ கொள்கை, நீர் பாதுகாப்பு திட்ட கொள்கை மற்றும் தேசிய குடிநீர் கொள்கை ஆகியவற்றை இறுதி செய்வதில் பங்களிப்பு செய்தமை.<br>■ தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2023-2030 மற்றும் தேசிய சுற்றாடல் செயற்பாட்டு திட்டம் 2023-2030 ஆகியவற்றை தயாரிப்பதற்கு உதவியமை.<br>■ NAP திட்டத்திற்கான தரவுகளை வழங்கியமை. |
| நீர், சுகாதாரம் மற்றும் சுகாதார அணுகு றையினை (WASH) நடைமுறைபடுத்தல் | ■ கைகழுவுதல் நடைமுறைகளை மேம்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பாடசாலைகளில் சுற்றுச் சூழல் ரேனபநள சோதனை முன்னோடிகளை பயன்படுத்தி ஒருங்கிணைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>■ WASH மற்றும் கல்வித் துறைசார் பங்குதாரர்களுடன் ரேனபந வடிவ பட்டறைகளில் பங்குபற்றியமை.<br>■ மேற்கு மற்றும் தென் மாகாணங்களில் திட்ட இலக்கு நகரங்களில் ஆதார அடிப்படையிலான WASH நடத்தை மாற்ற தொடர்பாடல் மூலோபாயம் வடிவமைக்கப்பட்டமை.<br>சுகாதார மேம்பாட்டு பணியகம் உட்பட சம்பந்தப்பட்ட பகுதிகளில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தியமை. |
| ADB- KSTA, CCRR க்கான பங்களிப்பு | ■ அபிவிருத்தி பிரிவானது, நீர் துறை மறுசீரமைப்பு திட்டத்தில் கொள்கை அடிப்படையிலான கடன் (PBL) வழங்கலுக்கான ADBன் கோரப்பட்ட முன் முயற்சிகளின் கீழ் 2024 ம் ஆண்டில் சுற்றாடல் மற்றும் சமூகப்பிரிவு (ESD). என மறு பெயரிடப்படும்.<br>■ அடிப்படை ஆய்வுகள், ஆணை தயாரித்தல் (ESD), பாலின சமத்துவம் (GESI) மற்றும் சமூக உள்ளடக்க மூலோபாயம் (GESI), சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிறுவன கட்டமைப்பு (ESIF) மற்றும் GESI ஆகியவற்றை இறுதி செய்வதற்கான பட்டறைகளுக்கான ADB ன் (KSTA) ன் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கு உள்ளீடுகளை வழங்குதல்.<br>■ தே.நீ.வ.வ.சபையின் காலநிலை மாற்ற பின்னடைவு பாதை வரைபடம் (CCRRதயாரிப்பதற்க்காக CCRR னால் நியமிக்கப்பட்ட ஆலோசகரிற்கு விபரங்களை வழங்கி ஒருங்கிணைதலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.<br>■ CCRRஐ அறிமுகப்படுத்த 2023 ல் சர்வதேச நீர் மாநாட்டின் போது யுனுடீ ஆல் நிதியளிக்கப்பட்ட நிபுணர்கள் அமர்வு நடத்தப்பட்டது. |

### சிறப்பம்சங்கள்:

- 2020-2025 கூட்டிணைந்த திட்டத்திற்கான 265 நீர் சாராம்ச ஒப்பந்தங்களை பெற்றுள்ளது.
- 271 WSP அபிவிருத்திகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் நிறைவுற்றுள்ளது.
- 2023ல் வறட்சி மற்றும் வெள்ள அசம்பாவிதங்கள் திறம்பட நிர்வகிக்கப்பட்டுள்ளது.

# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது உதவிப் பொது முகாமையாளரால் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) தலைமை தாங்குவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கொள்கை மற்றும் திட்டமிடல்) அறிகையிடுகின்றது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது நீர் முகாமைத்துவம் நடைமுறைகளில் புதுமை மற்றும் முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்துகிறது. நீரை ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை மூலம், R&D பிரிவு, நீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோக முறைகளின் செயல்திறன், நிலைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கான அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் வழிமுறைகளை அடையாளம் காட்டுகிறது. தொடர்ந்து அறிவை மேம்படுத்துவதன் மூலமும், சவால்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதன் மூலமும், R&D பிரிவு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு, உயர்தர நீர் சேவைகளை வழங்கவும், பொது சுகாதாரத்தை உறுதிப்படுத்தவும் மற்றும் சுற்றுச்சூழல் வேலைகளை திறம்பட நிவர்த்தி செய்யவும் பலம் அளிக்கிறது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்**

- வெளிற்றும் தூள் பாவனையானது ஹைபோகுளோரைட் உற்பத்தி செய்வதன் மூலம் மாற்றுதல் தொடர்பான கூட்டு ஆராய்ச்சி (6Nos).

ஆராய்ச்சியின் அடிப்படையில் சோடியம் ஹைபோகுளோரைட் உற்பத்தியானது 21 தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, வெளிற்றும் தூள் பாவனையானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- PH சீர் திருத்தம் செய்ய கல்சியம் டோலமைட்டில் இருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நீரேற்றப்பட்ட சுண்ணாம்பு பயன்படுத்துதல்

நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் PH சரிசெய்தலுக்கான நேரலை இலங்கையில் உள்ளூரில் பெறப்படும் கல்சியம் டோலமைட்டிலிருந்து எளிதில் தீர்த்து வைக்கப்படுகிறது. இந்த முறையின் சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்காக ருவன்வெல்ல நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கள சோதனை அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இந்தத் தீர்வைச் செயல்படுத்துவது இறக்குமதி செய்யப்பட்ட நீரேற்றப்பட்ட சுண்ணாம்புக்கான செலவினங்களை 50 மூ வரை குறைக்கலாம். (குறிப்பிடப்பட வேண்டிய ஆய்வுகள்)

- நுகர்வோர் வளாகங்களுக்கு திறன் நீர்மானிகளை அறிமுகப்படுத்துதல்
- விரைவான புவியீர்ப்பு வடிகட்டலுக்கு எரிந்த தேங்காய் ஓடுகளைப் பயன்படுத்துதல்.
- ஹைட்ரோதெர்மல் கார்பனைசேஷன் (HTC) செயல்முறையைப் பயன்படுத்தி நீரேற்றப்பட்ட கரி மற்றும் திரவ உரங்களை தயாரிக்க கழிவு நீர் மண்டிகளை பயன்படுத்துதல்.
- நீர் சுத்திகரிப்பு நிலைய மண்டிகளை மீண்டும் கான்கிரீட் மற்றும் பீங்கான் உற்பத்தியில் பயன்படுத்துவதற்கான சாத்தியம்,
- இலங்கையில் அறியப்படாத நீண்டகால சிறுநீரக நோயின் மீது குடிநீரின் விளைவு தொடர்பாக முறையான மறு ஆய்வு மற்றும் சாத்தியமான காரணவியல் பற்றிய பகுப்பாய்வு.
- துகள் தாகரிகள் மூலம் நிலத்தடி நீரின் கடினத்தன்மை நீக்கம்.
- காரத் தன்மை கொண்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட ஆரோக்கியமான நீரை உற்பத்தி செய்தல்.
- நீர் தொடர்பபான தொழில்களில் கிரபைனின் பயன்பாடு தொடர்பான குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள்.

**சிறப்பம்சங்கள்**

1. கிருமி நீக்கம் செய்வதற்கான சோடியம் ஹைபோகுளோரைட் உற்பத்தியை செயல்படுத்துதல்.

உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய இரசாயனங்களின் அளவைக் குறைத்தல்.

2. சோடியம் ஹைபோகுளோரைட் உருவாக்கும் அமைப்பு (மத்திய ஆய்வகத்தால் முடிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை செயல்படுத்தும் போது, மனம்பிட்டிய (னுயடரமயெ) நீர் வழங்கல் திட்டத்தில் மாதிரி ஆய்வு செய்யப்பட்டது)
3. நாடளாவிய ரீதியில் 27 நீர் விநியோகத் திட்டங்களுக்கு சோடியம் ஹைபோகுளோரைட் உற்பத்தி முறைக்கு மாற்றியதன் மூலம் வருடாந்தம் 9 மில்லியன் ரூபா சேமிப்பு பெறப்பட்டது.



8 வது ஆண்டு ஆராய்ச்சி கருத்தரங்கு

# வணிகப் பிரிவு

வர்த்தகப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளரால் (வர்த்தகம்) தலைமை தாங்கப்பட்டதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கூட்டிணைந்த சேவைகள்) அறிக்கையிடப்படுகின்றது.

**பிரிவின் முக்கிய செயற்பாடுகள்**

1. அளவீடு மற்றும் கட்டணங்கள், நுகர்வோர், உறவுகள் மற்றும் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
2. வெளி பிராந்தியங்களுக்கான தரமான செயற்பாடு மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகளை உருவாக்குதல்.
3. ஒருங்கிணைந்த அறிக்கையிடலுக்காக அனைத்துப் பகுதிகளிலிருந்தும் புள்ளிவிவர மற்றும் நிதித் தரவைச் சேகரித்தல்.
4. கட்டண மற்றும் சேகரிப்புத் தரவுகளின் துல்லியமான அறிக்கையை நிதிப் பிரிவுக்கு உறுதி செய்தல்.
5. மேலும், மீட்பு மற்றும் கடன் முகாமைத்தவம் செயல்முறை, நுகர்வோர் முகாமைத்தவம் செயல்முறை, கணக்கியல் செயல்முறை மற்றும் MIS செயல்முறை ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டு வரை, விரைவாக தகவல்களைப் பெறக்கூடிய முறை கட்டணப் பிடிப்பு, மேம்படுத்தப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகள் மற்றும் அளவீட்டு முறை ஆகியவை வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. நெறிப்படுத்தப்பட்ட குறுகிய தகவல் சேவையானது (SMS), நுகர்வோர் கட்டண தொகைகள், கட்டண உறுதிப்படுத்தல்கள் மற்றும் தண்ணீர் இணைப்பு பற்றிய அறிவிப்புகளை சரியான நேரத்தில் பெறுவதை உறுதி செய்கிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காசாளர் புள்ளிகள், நுகர்வோர் இருப்பிடங்கள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயலி மென்பொருள் ஆகியவற்றில் கட்டண உள்வாங்கல் அம்சத்தின் தற்போதைய ஒருங்கிணைப்பு தடையற்ற கட்டண அனுபவத்தை விரைவாக தகவல்களைப் பெறக்கூடிய முறையை உறுதியளிக்கிறது. காசாளர் நிலையங்கள் காசோலைகள் மற்றும் வங்கிக் கணக்கு அட்டைகள் மூலம் பணம் செலுத்துவதை தொடர்ந்து ஏற்றுக்கொள்கின்றன, இது கட்டணம் செலுத்தும் செயல்முறைகளின் நவீனமயமாக்கலுக்கு பங்களிக்கிறது. நிகழ்நேர வாசிப்பு நிலை, எளிதான கண்காணிப்பு மற்றும் புதுப்பிப்புகளை வழங்கும், அளவீட்டு முறையை தொடர்ந்து பயனுள்ளதாக உள்ளது. புதுமையான தொலைபேசி மென்பொருள், வருவாய் மானி உதவியாளர்கள் அளவீடுகளைப்

பதிவுசெய்த பிறகு,மின்மானி வாசிப்பு அளவீடுகள் மற்றும் கட்டண இணைப்புகள் உள்ளிட்ட குறுஞ்செய்திச் சேவை அறிவிப்புகளை உடனடியாக வழங்குகிறது. சுருக்கமாக, அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து அம்சங்களும் திறமையாகத் தொடர்ந்து செயல்படுகின்றன.

## விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ (S&MM) பிரிவு பிரதி பொது முகாமையாளரால் (S&MM) தலைமை தாங்கப்பட்டதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கூட்டிணைந்த சேவைகள்) அறிக்கையிடுகின்றன. தே.நீ.வ.வ.ச. இனுடைய செயற்பாடுகளிற்காக உரிய நேரத்தில் விநியோகத்தை உறுதிப்படுத்துகின்ற அதன் நடவடிக்கைகளை விநியோகம் மற்றும் பொருள் முகாமைத்துவப்பிரிவு செயற்படுகின்றது. பொருட்ளின் கொள்வனவிற்காக கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிக்கின்றன.

**முக்கிய சாதனைகள்**

- 352 நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இரசாயனங்கள் வழங்குதல் மற்றும் புதுமையான உத்திகள் எதிர்கால தடைகளை முன்னறிவித்தல் ஆகியவற்றின் விளைவாக 2023 ஆம் ஆண்டு முழுவதும் மிகவும் நெருக்கடி நிலை நிலவிய போதிலும் இடையூறு இல்லாமல் இணைப்புப் பொருட்களை வழங்குதல்.
- இந்த ஆண்டில், பிராந்திய சேவை நிலையத்தின் அதிகப்படியான பொருட்களை தீவு முழுவதும் மீள் விநியோகம் செய்வதன் மூலம் ரூ.1000 க்கும் அதிகமான சேமிப்பு மேற்கொண்டு 60 மில்லியன் புதிய பொருட்களை வாங்க வேண்டிய அவசியமின்றி பெறப்பட்டது.
- நீர் வழங்கல் அமைச்சு, அரசாங்க திறைசேரி, இலங்கை சுங்கம், இலங்கை துறைமுக அதிகாரசபை, வங்கிகள், கப்பல் போக்குவரத்து, காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் முறைமைகள் உட்பட பல்வேறு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் 425 க்கும் மேற்பட்ட ஏற்றுமதிகளுக்கு உயர்தரத்திலான அனுமதி பேணப்பட்டது. தாமத கட்டணங்களைத் தடுக்க தொடர்புடைய O&M பொருட்கள் திறமையாக நிர்வகிக்கப்பட்டன.

**செய்யப்பட்ட வேலைகள்**

- 1500 க்கும் மேற்பட்ட கொள்முதல் கட்டளைகள் மற்றும் கொள்முதல்களுக்காக சுமார் 150 விருது கடிதங்கள், மொத்தம் ரூ. 1100 கோடி மதிப்பு.
- ஒப்பந்த ஆவணங்கள் சுமார் ரூ.2600 மில்லியன். இந்த ஆண்டில் நாங்கள் 48 தேவையற்ற மற்றும் வழக்கற்றுப் போன பொருட்களுக்கு ஏலம் கேட்டுள்ளோம், அதன் மதிப்பீட்டின் மதிப்பு ரூ.20 மில்லியன்.
- 2023இல், மொத்தம் ரூ.286 மின் கொள்முதல் மேற்கோள்கள் தொடங்கப்பட்டன. 100 மில்லியன், கையேடு மேற்கோள்களை விட அதிக போட்டி முறையை வழங்குகிறது
- பொருட்கள் முகாமைத்துவ அமைப்பு (IMS) மூலம் தீவு முழுவதும் உள்ள அனைத்து 314 களஞ்சியங்களையும் இணைக்கும் செயல்முறை நிறைவுபெற்றுள்ளது. அனைத்து களஞ்சியங்களும் IMS உடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது, பதிவுசெய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு அண்ணளவாக 20 பில்லியன் ஆகும். அனைவருக்கும் நீர் திட்டத்திற்குக்கீழ் உள்ள இருப்புக்களின் மதிப்பு 7.5 பில்லியன். கூடுதலாக, இந்த ஆண்டு பொருட்கள் முகாமைத்துவ அமைப்பு மூலம் வருடாந்திர கையிருப்பு சரிபார்ப்பு நடத்தப்பட்டது.

2023 முழுவதும், போக்குவரத்து சிரமங்கள், பணப்பற்றாக்குறை மற்றும் உயர்ந்து வரும் கப்பல் கட்டணம் போன்ற குறிப்பிடத்தக்க சவால்கள் இருந்தபோதிலும், பொருட்களை வழங்குதல் முகாமைத்துவம் பிரிவு எந்தவிதமான செயல்பாட்டுத் தடங்கலும் இல்லாமல் அத்தியாவசிய இரசாயனங்களை வெற்றிகரமாக வழங்கியது. இந்த தடைகள் இருந்தபோதிலும், அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் பொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதிசெய்தனர், மிதமான எண்ணிக்கையிலான புதிய இணைப்புகளை நிறைவுசெய்து, எந்தவொரு நெருக்கடியான சூழ்நிலையையும் எதிர்கொள்ள இடையக கையிருப்புகளை பராமரித்தனர். தொடர்ச்சியான பின்தொடர்தல் நடவடிக்கைகள் சரியான நேரத்தில் மூலோபாய திட்டமிடல் காரணமாக இந்த சாதனைகள் சாத்தியமானது.

## சக்தி முகாமைத்துவம்

இயந்திரவியல் மற்றும் மின்னியல (M&E) பிரிவானது பிரதி பொது முகாமையாளரால் (M&E) தலைமை தாங்கப்பட்டதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கூட்டிணைந்த சேவைகள்) அறிக்கையிடுகின்றன. இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு.சகல இயந்திரவியல் மற்றும் மின்னியல் பொறியியல் தீர்வுகளும் வழங்கல்.

சபை மற்றும் வெளித் தரப்பு முகவர்கள் மூலம் நீர் மற்றும் கழிவகற்றல் முறைமை செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஆலோசனை மற்றும் சம்பந்தமான சேவைகளை வழங்கல்.

வாகனங்கள், நீர் மானிகள் மற்றும் ஏனைய இயந்திரவியல் மற்றும் மின்னியல உபகரணங்களிற்காக விதப்புரைகள் மற்றும் கேள்வி ஆவணங்கள் உதவி தயாரித்தல்.

பி.ஆ.நி. மற்றும் முக்கியமான செயற்திட்டங்களிற்கு வடிவமைப்பு, நிர்மாணம், பராமரிப்பு போன்றவற்றில் இயந்திரவியல் மற்றும் மின்னியல நிபுணத்துவத்தை வழங்கல்.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலாக, போக்குவரத்து பிரிவு, மத்தியவேலைத்தள மற்றும் கட்டிட பராமரிப்பு பிரிவுகள் தே.நீ.வ.வ.ச. இன் பிரதான வியாபாரத்திற்கு அத்தியாவசியமான ஆதார சேவைகளை உறுதிப்படுத்துவதற்கு இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவால் நிர்வகிக்கப்பட்டன.

நீர் வழங்கல் திட்டங்கள், இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு கண்காணிப்புகள் என்பவற்றில் ஒட்டுமொத்த வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை பேணும் நோக்கில் நீர் வழங்கல் முறைமையின் தடையற்ற செயற்பாட்டை உறுதிப்படுத்தவதற்கு ஒவ்வொரு பி.ஆ.நி. இலுமுள்ள இயந்திரவியல் மற்றும் மின்னியல் உத்தியோகத்தர் ஊடாக சகல இயந்திரவியல் மற்றும் மின்னியல் உபகரணங்களின் திட்டமிடப்பட்ட பாதுகாப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை கண்காணிக்கின்றது.

**2023 மின் நுகர்வு விவரங்கள்**

*அட்டவணை இல 20*

| பயன்பாட்டு விவரம் | (ரூபாய்(மில்லியன்) |
|---|---|
| நீர் உற்பத்தி மற்றும் பம்பிங் | 6,443 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பம்பிங் | 82.6 |
| அலுவலக இடங்களுக்கு | 141 |

**சக்தி முகாமைத்துவத் திட்டம்**

சக்தி சேமிப்பு திட்டம் 2004 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அது படிப்படியாக கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2004 முதல் 2023 வரை முடிக்கப்பட்ட சூரிய சக்தி அமைப்புகள் (2.2 மெகாவாட்), மின் மற்றும் இயந்திர மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சக்தி சேமிப்பு திட்டங்கள் ஆகியவற்றில் நிறுவப்பட்ட கட்டண வகை திருத்தங்கள் நியாயமான சக்தி மற்றும் செலவு சேமிப்புக்கு வழிவகுத்தன.

- மின்னியல் மற்றும் இயந்திரவியல் பிரிவு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஆற்றல் பயன்பாட்டு பகுப்பாய்வை நடத்துகிறது மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சிகளை செயல்படுத்துகிறது. ஊழியர்களுடன் இணைந்து சக்தி செயல்திறனை அதிகரிக்க அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

- 2023 ஆம் ஆண்டில் பிராந்திய உதவி காரியாலயத்தின் மின்னியல் மற்றும் இயந்திரவியல் பிரிவுகளின் ஆதரவுடன் ஆறு எண்ணிக்கையான சக்தி தொடர்பான கணக்காய்வுகள் மற்றும் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**சிறப்பம்சங்கள்:**

2023 இல், நான்கு திட்டங்கள் நிறைவடைந்தன, இதன் மொத்தச் செலவு அண்ணளவாக ரூ.70 மில்லியன். இந்த திட்டங்கள், நடப்பு திட்டங்களுடன் சேர்த்து, ஆண்டு செலவு ரூ.42 மில்லியன். 2024 ஆம் ஆண்டிற்கு, 15 தற்போதைய மற்றும் புதிய திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, மொத்த முதலீட்டில் கிட்டத்தட்ட ரூ.200 மில்லியன், அந்த ஆண்டிற்கான தற்போதைய திட்டங்களை உள்ளடக்கியது.

நிலை கண்காணிப்பு மற்றும் தொலைநிலை இயக்க முறைமைகள் (SCADA), பிராந்திய சேவை நிலையத்தின் ஊழியர்களைக் கொண்டு உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களில் நிறுவப்பட்ட மின்னியல் மற்றும் இயந்திரவியல் ஊழியர்களால் வருமானமற்ற நீரைக் குறைத்து, நீர் விநியோக நம்பகத்தன்மையை மேம்படுத்துகிறது.

## தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்ப பிரிவானது பிரதி பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கூட்டிணைந்த சேவைகள்) அறிக்கையிடப்படுகின்றன.

சபையானது ஊழியர்களுடைய வினைத்திறனை முன்னேற்றுவதைப் போல வாடிக்கையாளர்களிற்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு தகவல் தொழில்நுட்ப தீர்வினை முன்னேற்றுவதற்கு முன்னுரிமையளிக்கின்றது. ஆகவே, தகவல் தொழில்நுட்ப பிரிவானது வாடிக்கையாளர்கள் மற்றும் தே.நீ.வ.வ.ச ஊழியர்கள் என்பவற்றிற்கு இடையில் இடைவெளியை குறைப்பதற்கு தகவல் தொழில்நுட்ப அடிப்படை தீர்வுகள் மற்றும் நிலைபேறான உட்கட்டமைப்பு தீர்வுகளின் விருத்திகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறு படிமுறைகளை எடுக்கின்றது.

**2023 ஆண்டில் தகவல் தொழிநுட்ப பிரிவின் சாதனைகள்**

- **செயல்முறை மேம்படுத்தல்**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வாடிக்கையாளர்களின் புகார்களை நிவர்த்தி செய்யவும், அச்சிடும் செலவைக் குறைக்கவும், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் உடனடி கட்டண அறிவிப்புகளை வழங்கவும் இணையவழி கட்டண முறையை அறிமுகப்படுத்தியது. இது காலாவதியான தொகுதி செயலாக்க அமைப்பை மாற்றியது, பணம் செலுத்துவதில் தாமதம் சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் காகிதம் மற்றும் அச்சுப் பிரதி செலவுகளைக் குறைத்தது.

- **இயக்க மற்றும் பராமரிப்பு செயல்பாடுகளின் டிஜிட்டல் மயமாக்கல்**

புகார் முகாமைத்துவம் (அழைப்பு மையம் 1939), நீர்மானி வாசிப்பு மற்றும் மீட்பு, பொருட்கள் முகாமைத்துவம், அடிப்படையிலான சொத்து முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளுடன் தொலைபேசியில் தரவுகள் உருவாக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது. ஆரம்பத்தில் மேற்கு மண்டலத்தில் செயல்படுத்தப்பட்டது, இது இணையத்தின் மூலம் பிராந்திய செயல்பாடுகளை நெறிப்படுத்த துண்டித்தல் மீண்டும் இணைப்பு செயல்முறைகளையும் ஒருங்கிணைக்கிறது. இந்த காகிதமற்ற தீர்வு விரிவான முகப்புப் பட்டி மூலம் எளிதாகக் கண்காணிக்க உதவுகிறது.

- **உட்கட்டமைப்பு மேம்படுத்தல்**

இந்த செயல்முறையானது சந்தா அடிப்படையிலான வெளிவாரி (out sourcing) மூலம் தரவு மையத்தில் இயற்பியல் சேவையகங்களை இணை-இடமாக்கியது. இது மூலதனச் செலவுகளைக் குறைத்தது, பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தது மற்றும் வலைமையம் நம்பகத்தன்மையை வலுப்படுத்தியது. GIS சேவையகத்தை வெளிவாரி மூலம் இடத்திற்கு மாற்றுவது செலவுகள், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றில் பலன்களை அளித்தது.

- **தகவல் தொழில்நுட்பப் பிரிவை மேம்படுத்துதல்**

தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த சகாப்தத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவை வலுப்படுத்துவது காலத்தின் தேவையாகும். எனவே நிர்வாகம் ஆட்சேர்ப்பு பணியமர்த்தல் மூலம் அதன் மனித வளத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## ஆய்வு கூட சேவைகள்

ஆய்வுகூட சேவைகள் பிரிவானது உதவி பொது முகாமையாளரால் (ஆய்வுகூட சேவைகள்) தலைமை தாங்கப்பட்டதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (கூட்டிணைந்த சேவைகள்) அறிக்கையிடப்படுகின்றன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆய்வு கூட சேவைகள் கீழே தரப்பட்டவாறு அமைக்கப்பட்டது.

- மத்திய ஆய்வுகூட சேவைகள்
- பிராந்திய ஆய்வுகூட சேவைகள்
- சுத்திகரிப்பு நிலைய ஆய்வுகூட சேவைகள்

ஒவ்வொரு ஆய்வு கூடங்களும் உதவி பொது முகாமையாளரால் (ஆய்வுகூட சேவைகள்) வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசனையாளர் தலைமையின் நெறிப்படுத்தலின் கீழ் உள்ளது. நீர் தரக் கட்டுப்பாடிற்கான நிலையமாக மத்திய ஆய்வுகூட செயற்படுகின்றது. சகல ஆய்வுகூட மட்டங்களின் நடவடிக்கைகளிற்கான கண்காணிப்பாக சேவையாற்றுகின்றதுடன் பிரதானமாக செயற்பாட்டு கண்காணிப்பு மற்றும் நீர் தரம், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பதவியுயர்வு பயிற்சி என்பவற்றின் கண்காணிப்பு ஆய்விற்கு உட்படுத்தகின்றது. மத்திய ஆய்வுகூடம் கட்டுப்பாட்டை செயற்படுத்தவதற்கு ஆலோசனை இயலளவில் செயற்படுத்துகின்றதுடன் அமைப்பிலுள்ள உயர் முகாமைத்துவ மட்டத்திற்கு பகுப்பாய்வு தரவினை வழங்குவதற்காக செயற்படுத்தல் நிலையமாக சேவையாற்றுகின்றது.

**2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

நீர் சுத்திகரிப்புக்கான ஆன்சைட் ஜெனரேஷன் குளோரினேஷன் (OSG) அமைப்பு பற்றிய ஆய்வு வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, 100 முதல் 1500 m3/ நாள் திறன் கொண்ட 21 நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நிறுவப்பட்டது.

- இரண்டு ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை நடத்தியது -
  - பாதுக்கை MOH பகுதியில் நுகர்வோர் விழிப்புணர்வினால் நடைமுறை வழியில் நீர் சுத்திகரிப்பு கசடுக்கான பெறுமதி சேர்ப்பு மற்றும் குடிநீருக்கான குழாய் மூலம் நீர் பாவனையை மேம்படுத்துதல் ஆகியவை வெற்றிகரமாக நிறைவடைந்தன. கசடு முகாமைத்துவத்திற்க்காக தேசிய வடிவமைப்பு மையம் (NDC) மற்றும தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
  - நீர் சுத்திகரிப்புக்காக குப்பை கழிவு அலுமினியத்தால் செய்யப்பட்ட பாலிஅலுமினியம் குளோரைட்டின் உற்பத்தி வெற்றிகரமாக முடிக்கப்பட்டது மற்றும் தரநிலைகளின் இணக்கத்திற்காக சோதிக்கப்பட்டது.

**சிறப்பம்சங்கள்**

1. 2023 ஆம் ஆண்டின் நீரின் தரத் தரவு, பக்டீரியாவியல் தரத்திற்கு 97.4% திருப்திகரமாகவும், இயற்பியல் மற்றும் இரசாயனத் தரத்திற்கு 86.9% திருப்திகரமாகவும், குடிநீரின் நச்சுயியல் அளவுருக்களில் 100% திருப்திகரமாகவும் இருப்பதை வெளிப்படுத்தியது.
2. மத்திய ஆய்வகம், மேற்கு தெற்கு ஆய்வகம், மேற்கத்திய உற்பத்தி (அம்பத்தளை) ஆய்வகம், பியகம ஆய்வகம், யாழ் ஆய்வகம் மற்றும் வவுனியா ஆய்வகம் ஆகியவை 2023 ஆம் ஆண்டிற்கான ISO/IES 17025: 2017 ஐ பராமரிக்கின்றன.

## நீர் மீளாக்கம் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)

நீர் மீளாக்கம் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவானது பிரதி பொது முகாமையாளரால்(திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) நீர் மீளாக்கம் தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நீர் மீளாக்கம்) அறிக்கையிடப்படுகின்றது. பிரிவின் ஆரம்ப செயற்பாடுகள்

- மத்தியமயப்படுத்திய கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகள் உள்ளடங்கலாக சுகாதார உட்கட்டமைப்பு செயற்பாடுகளின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பை மேற்கொள்ளல்.
- கழிவு முகாமைத்துவ சுத்திகரிப்பு பொறித் தொகுதிகள் (FSTPs)
- அரசாங்க / தனியார் முகவர்களிற்கான கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகளின் பன்முகப்படுத்தல்.
- கழிவுநீர் உட்கட்டமைப்பு செயற்திட்டங்களின் மீளாய்வை வடிவமைத்தல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) / ஆரம்ப சுற்றடல் பரீட்சித்தல்
- கற்கைகள் (IEE) என்பவற்றின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு.
- சுகாதார துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றன மீது பங்குதாரர்களிற்கு இடையில் விழிப்புணர்வை உருவாக்கல்.

*அட்டவணை இல 21*

| செயற்பாடு | விடயம் |
|---|---|
| திட்டமிடல் கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகளை மதிப்பீடு செய்தலும் செயற்படுத்தலும் | • குருவிட்ட, நீர்கொழும்பு, வாரியபொல மற்றும் பொலன்னறுவை போன்ற சிறைச்சாலை நிறுவனங்களில் கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகளுக்கான திட்டமிடல் ஆகியவை குறிப்பிடத்தக்க திட்டங்களில் அடங்கும், UN Habitat உடனான ஒத்துழைப்பு ரிக்கிலகஸ்கட, வலப்பனை மற்றும் ஹப்புத்தளை பிரதேச வைத்தியசாலைகளில் கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகளை திட்டமிடுவதற்கு வசதியளித்தது. இதற்கு மேலதிகமாக, திட்டமிடல் நடவடிக்கைகள் டிக்கோயா மற்றும் சிலாபம் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நுவரெலியாவில் உள்ள - நகர் லைன் வீடுகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.<br>• WR (P&D) பிரிவு மதிப்பீட்டு மறுசீரமைப்பைத் தயாரிப்பதை ஆரம்பித்தது |
| கழிவு நீர் முகாமைத்துவ அமைப்புகளின் புனரமைப்பு | • கைத்தொழில் அமைச்சு கட்டிடத்தில் கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகளை புனரமைத்தல், வத்துப்பிட்டிவலையில் கழிவு நீர் சேகரிப்பு முறைமை, ஹிம்புட்டு உயான வீடமைப்புத் திட்டத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மத்தேகொட வீடமைப்புத் திட்டம், நிபுன-பூஸ்ஸ கடற்படை முகாம், தெஹிவளையிலிருந்து வெள்ளவத்தை வரையிலான கழிவுநீர் கடத்தல் பிரதான பாலம் கடவை மற்றும் தியவானவையில் புதிய கழிவு நீர் சேகரிப்பு முறைமை ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க விரிவான வடிவமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• ஜல்தார வீடமைப்புத் திட்டத்திற்கான கழிவுநீர் முகாமைத்துவ முறைமையை புனரமைத்தல் |
| திட்டமிடல் வடிவமைப்புகள் கட்டடம் மேற்பார்வை மற்றும் ஆணையிடுதல் FSTP | ☐ மலக்கழிவு முகாமைத்துவ உத்தியின் கீழ், பதுளை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிர்மாணப் பணிகள் மொனராகலை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. கட்டுமானத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது- பண்டாரவளை FSTP. WR (P&D) பிரிவு கீழ்க்கண்ட சுத்திகரிப்பு நிலையங்களுக்கான விரிவான வடிவமைப்புகளை முடிவுறுத்தியுள்ளது ரன்பொக்குனுகம, மாத்தறை, நாவலப்பிட்டி, வெலிகம, மற்றும் கலிகமுவ. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டமிடல் பணிகள், அதே காலகட்டத்தில பத்துதும்பர, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, திருகோணமலை, களுத்துறை மற்றும் பிற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. |
| வடிவமைத்தல் மற்றும் கட்டடம் மேற்பார்வை FSTP | மறுவாழ்வுக்காக O&M தொடர்பான வடிவமைப்புகளை மேற்கொள்ளுதல். தெஹிவளையிலிருந்து வெள்ளவத்தை வரையான கழிவுநீர் அழுத்த பிரதான குழாய் மத்தேகொட வீடமைப்புத் திட்ட கழிவு நீர் முகாமைத்துவ முறைமை, ஜயவடனகம பம்பி நிலையம் போன்றவை. |
| சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு பணிகள் | 2023 ஆம் ஆண்டில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகர திட்டமிடலாளர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகள், உள்ளூர் நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு சுகாதார பிரதான திட்டத்தில் (2021-2030) சமூக விழிப்புணர்வின் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி கழிவுநீர் முகாமைத்துவத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.<br>☐ கேகாலை, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.<br>☐ அனுராதபுர மாவட்டம் அரச வைத்தியசாலைகளில் நிலையான கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பாக செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பிரிவினருக்கான பயிற்சி அமர்வுகள் ருவன்வெல்ல, வெலிகேபொல, தலவாக்கலே ஆகிய இடங்களில் ஊழியர்கள் உள்ளூர் அதிகாரிகள், FSTP, O&M அம்சங்களில் கவனம் செலுத்துகின்றனர் |
| சாத்தியக்கூறு ஆய்வைத் தயாரிப்பதை மேற்பார்வை செய்தல் | பதுளை மாவட்டத்தில் சுகாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வு |

# நகரங்கள், கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாடு

சிறிய நகரங்கள், கிராமிய நீர் மற்றும் துப்பரவேற்பாடு பிரிவானது பிரதி பொது முகாமையாளரால் (சி.ந.கி.நீ.து.) தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நீர் மீளாக்கம்) அறிக்கையிடப்படுகிறது.

**பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு உள்ளன.**

- தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்காக சமூதாய அடிப்படை அமைப்புகளின் (r.m.m) ஸ்தாபிப்பு.
- நீர் வழங்கல் திட்டங்களின் கருத்து ரீதியான வடிவமைப்பிற்கு புற்தரை கூரை அமைப்புகளின் தொடக்கம்.
- உத்தேசிக்கப்பட்ட கிராமிய நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு மீளாய்வு.
- சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கான (CBO) கொள்வனவு நடைமுறைகளை மேற்கொள்ளல்.
- சமூதாய அடிப்படை அமைப்புகளிற்கான (CBO) தேவையான தொழில்நுட்ப உதவிகளை மேற்கொள்ளல்.

**2023 ஆம் ஆண்டின் போது பிரிவால் மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு உள்ளன.**

- காலநிலை மாற்றத்திற்கு பொருத்தமான ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (CRIWMP)

UNDP மற்றும் இலங்கை அரசாங்கமானது குருநாகல், அனுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய ஏழு மாவட்டங்களில் ஒரு செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சமூகம் சம்பந்தப்பட்ட நீர் வழங்கல் விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது, இதில் 12 துணைத் திட்டங்கள், கிடைக்கும் குழாய்களைப் பயன்படுத்தி நிதி உதவி பெறுகிறது. CRIWMP இலிருந்து 150.0 மில்லியன். 2022 செப்டம்பரில் தொடங்கப்பட்டு, 2023ல் நடைபெற்று வரும் இந்தத் திட்டம், முடிவடைந்தவுடன் 4,242 குடும்பங்கள் பயனடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிராந்திய சேவைகள் நிலையம் திட்டச் செயல்பாட்டிற்கு பொறுப்பாகும். அதே நேரத்தில் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு மற்றும் நிதி சிறிய நகரங்கள், கிராமிய நீர் மற்றும் துப்பரவேற்பாடு பிரிவால் கண்காணிக்கப்படுகிறது.

- நீர் சுத்திகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு அமைப்புக்கள் பாடசாலைகள் மற்றும் சுகாதார மையங்களை நிறுவுதல் இவை UNDP நிதியத்தால் ஆதரிக்கப்படுகிறது.

UNDP மற்றும் இலங்கை அரசாங்கமானது குருநாகல், வவுனியா, மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒரு செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. 24 பாடசாலைகள் மற்றும் 05 சுகாதார நிலையங்களுக்கு, தற்போதுள்ள வசதிகளில் தேவையான மேம்பாடுகளுடன், சிறிய மேம்பட்ட வடிகட்டிகள் மற்றும் துணைக்கருவிகளை வழங்குதல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும். மொத்த செலவு ரூ.71.0 மில்லியன். ST,RWS பிரிவு,பிராந்திய உதவி காரியாலயத்தின் ஊழியர்களின் உதவியுடன், இந்த திட்டத்தை கூட்டாக செயல்படுத்துகிறது, இது செப்டம்பர் 2023 இல் தொடங்கி தற்போது கொள்முதல் நிலையில் உள்ளது.

**நீர்க்கசிவை சரிசெய்யும் திட்டம்**

நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்துதல், தண்ணீர் வீணாவதைக் குறைத்தல், பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் பாடசாலைகள் மதத் தலங்கள், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றில் அனைத்து உள்ள சட்டவிரோத இணைப்புகளைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ST, RWS இந்த முயற்சியை ஒருங்கிணைக்கிறது, மேலும் இந்த இலக்குகளை அடைவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**அரச கிரமப்புற பாடசாலைகளுக்கான நீர்வழங்கல்**



# நிலக்கீழ் நீர்

நிலக்கீழ் நீர் பிரிவானது நீர் வழங்கல் அக்கறையுடன் பிரதானமாக நிலக்கீழ் நீர் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவானது உதவி பொது முகாமையாளரால் (நிலக்கீழ் நீர்) தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நீர் மீட்டெடுப்பு) அறிக்கையிடுகின்றது.

2023 ஆம் ஆண்டின் போது பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு உள்ளன.

*அட்டவணை இல 22*

| நடவடிக்கை | செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| நீரியல் ஆய்வுகள் | 302 |
| ஆழமான மற்றும் ஆழமற்ற குழாய்க் கிணறு கட்டுமானங்கள் | 81 |
| சுத்திகரித்தல் மற்றும் கிணறு மேம்பாடு | 127 |
| கை பம்பி நிறுவல் | 161 |
| கை பம்பி குழாய் கிணறுகளின் பழுது மற்றும் மறுசீரமைப்பு | 92 |

**சிறப்பம்சங்கள்:**

1. புதிய நீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், ஏற்கனவே உள்ள நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், நிலத்தடி நீரை ஏற்கனவே உள்ள நீர் வழங்கல் திட்டங்களுக்கு துணை ஆதாரமாக பயன்படுத்துவதற்கும் நிலத்தடி நீர் ஆதாரங்களை மதிப்பிடுவதற்கு நிலத்தடி நீர் மேம்பாட்டு நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.
2. வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காலநிலை தாங்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டம் (CRIWMP) மூலம் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளவும், நிலத்தடி நீர் முகாமைத்துவ திட்டங்களை உருவாக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
3. வாரியபொல நிலத்தடி நீர்இணைப்பு மையத்தில் நிலத்தடி நீர் மறுசீரமைப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர் மட்ட கண்காணிப்பு திட்டங்கள் சுற்றியுள்ள பகுதிகளில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

4. நிலத்தடி நீர் பிரித்தெடுத்தல், இயக்கவியல் மற்றும் புவி வேதியியல், நிர்வகிக்கப்பட்ட நீர்நிலை நீர் இணைப்பு மையத்தில் அதன் பயன்பாடுகள் மற்றும் மனித வளத் திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு முகாமையாளர்கள் மற்றும் நீரியலாளர்களுக்கான பம்பி சோதனை மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றில் மூன்று பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## சொத்து முகாமைத்துவ பிரிவு

மேலதிக பொது முகாமையாளர் (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்) தலைமையின் கீழ், நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவு சொத்துகளின் முகாமைத்துவம், வருவாய் அல்லாத தண்ணீரை (NRW) குறைத்தல், அழைப்பு மையம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி மூலம் நுகர்வோர் பராமரிப்பு சேவைகளை வழங்குவதை மேற்பார்வையிட உறுதிபூண்டுள்ளது. மற்றும் நிலம் கையகப்படுத்துதலையும் மேற்பார்வை செய்தல்.

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துகளின் முகாமைத்துவம்.**

சொத்து முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், மூன்று முன்னோடித் திட்டங்கள் (02 நீர் வழங்கல் 01 கழிவு நீர்) செயல்படுத்தலுக்கான தரவு இடைவெளிகளைக் கண்டறிந்து சொத்து முகாமைத்துவ திட்டங்களை உருவாக்கத் தொடங்கப்பட்டன. கூடுதலாக, புதுப்பித்தல் திட்டமிடல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்காக மேலும் நான்கு முன்னோடித் திட்டங்கள் (03 நீர் வழங்கல் 01 கழிவு நீர்) ஆகஸ்ட் 2023 இல் தொடங்கப்பட்டன. அதே நேரத்தில், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்த் தாங்கிகளுக்கான நீண்ட கால புதுப்பித்தல் திட்டத்தை தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. ADB மூலம் 2023 ஆம் ஆண்டின் மத்தியில் தொடங்கப்பட்ட KSTA திட்டம், சொத்து முகாமைத்துவ (AM) செயல்பாடுகளை அறிமுகப்படுத்துவது உட்பட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிறுவன திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வருமானமற்ற நீர் (NRW)

வருமானமற்ற நீர் குறைப்பு (NRW) பிரிவானது உதவி பொது முகாமையாளரால் (NRW) தலைமை தாங்கப்படுகின்றதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்) அறிக்கையிடுகின்றது.

வருமானமற்ற நீர் குறைப்பானது தே.நீ.வ.வ.ச. இன் பிரதான கவனயீர்ப்பு பகுதியில் ஒன்றாக வருகின்றது. வருமானமற்ற நீரின் சதவீதமானது தொழில்நுட்ப மற்றும் நிதிச் செயலாற்றல், வருமானமற்ற நீர் குறைப்பு உபாயங்களின் திட்டமிடல், (IWA நியமங்களை ஒன்றிணைத்து) மற்றும் வருமானமற்ற நீர் பிரிவால் செய்யப்படுகின்ற வருமானமற்ற நீர் நடவடிக்கைகளின் கண்காணிப்பு என்பவற்றினைக் குறிக்கின்றது. நிறுவன மீளமைப்புக்களுடன் வருமானமற்ற நீர் - மேல் மாகாணம் மற்றும் வருமானமற்ற நீர் மேல் மாகாண பிரிவுகளிற்கு வெளியில் 2023 ஆம் ஆண்டளவில் 15% இற்கு வருமானமற்ற நீர் மட்டத்தை குறைப்பதற்கு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

*அட்டவணை இல 23*

| வருமானமற்ற நீர் குறைப்பிற்கு பொறுப்பான நபர், | மாகாணம் | முகாமையாளர் பிராந்தியங்களின் மாகாண எண் |
|---|---|---|
| உ.பொ.மு (NRW-மேற்கு) மற்றும் பி.பொ (NRW-மேற்கு) | மேல் மாகாணம் | 09 |
| உ.பொ.மு (NRW-OW) CEE (NRW | மேல் மாகாணத்திற்கு வெளியே | 20 |

**நடவடிக்கைகள்**

i மொத்த நீர்மானிகள் தேவைகள் திட்ட உற்பத்தி அளவை அளவிடுவதற்கு மூன்று கட்டங்களில் அடையாளம் காணப்பட்டன.

பிராந்திய சேவை நிலையங்களால் வழங்கப்பட்ட ஆரம்ப மொத்த நீர்மானிகள்

ii இரண்டாவது பகுதி தேவை வழங்கப்பட்டது, விநியோகம் நடந்து கொண்டிருக்கிறது

iii மூன்றாவது பகுதி தேவை அடையாளம் காணப்பட்டது, ஆவணம் தயாரித்தல் நடந்து வருகிறது.

- 2023 ஆம் ஆண்டில், NRW பிரிவானது, வாசிப்புத்திறனுக்காக நீர்மானிகள் இடமாற்றம் செய்தல், இரவு நேர ஆய்வுகள் மற்றும் தினசரி கசிவு கண்டறிதல், செயலில் உள்ள மற்றும் செயலற்ற கசிவுகளைக் கண்டறிந்து சரிசெய்வது, சட்டவிரோதமான தட்டுதலைக் குறைத்தல், அங்கீகரிக்கப்பட்ட கட்டணமில்லா நுகர்வுகளை நீக்குதல் மற்றும் தண்ணீர் மீட்டர் துல்லியத்தை உறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- நிர்வாக பிழைகளை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பழுதடைந்த நீர் மானிகளை மாற்றுதல் மற்றும் நடப்பு மாதத்தின் திடீர் பூஜ்ஜிய நுகர்வு வளாகத்தை குறைத்தல் போன்ற மதிப்பிடப்பட்ட கட்டணங்கள்.

**இலக்கு**

வருமானமற்ற நீர் குறைப்பு (NRW) பிரிவானது பிரிவானது திட்ட வரைபடம் ஒன்றினை உருவாக்கி, 15% க்கும் குறைவான வருமானமற்ற நீர் குறைப்பு இலக்கினை அடையும் நோக்கிலும் "விரிவான வருமானமற்ற நீர் குறைப்பு முகாமைத்துவம்" என்ற இறுதி இலக்கை அடையும் வழிமுறைகளை அடையாளம் கண்டுள்ளது. இந்த மைல்கற்களை அடைய, NRW பிரிவால் வழிநடத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட பல நீர் வழங்கல் திட்டங்களால் பல்வேறு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**சிறப்பம்சங்கள்:**

நீர்மானிகள் பற்றாக்குறை 2023 சனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை வரை சராசரி NRW ஆனது 25.15% ஆகக் குறைந்துள்ளது, இது 2022 இல் 25.24% ஆக இருந்தது, இது ஒரு வருட காலப்பகுதியில் 0.09% குறைப்பைக் குறிக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில், பணியாளர்கள், வரவு செலவுத் திட்டம் மற்றும் வளங்கள் இரண்டிலும் கட்டுப்பாடுகள் இருந்த காரணத்தினாலே இந்த முன்னேற்றம் அடையப்பட்டது.

## வாடிக்கையாளர் சேவை - அழைப்பு மையம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தினசரி செயல்பாட்டில் 1939 தகவல் தொடர்பு மையத்தின் சேவைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. மாளிகாகந்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வளாகத்தில் நவீன தகவல் தொடர்பு மையத்தின் சேவை வசதி அமுல்படுத்தப்பட்டதிலிருந்து, அழைப்பு மையச் செயல்பாட்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை முறியடித்துச் செயற்பாடு திறமையாக இயங்குகிறது. இலங்கை முழுவதுமான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வாடிக்கையாளர் தளமான 2.9 மில்லியனுக்கான முக்கிய மையப்படுத்தப்பட்ட தொடர்பு மையமாக இப்போது அழைப்பு மையமாக செயல்படுகிறது.

2023 ஆம் ஆண்டில், மையப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அழைப்பு மையத்தில் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக பல முன்முயற்சிகள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன, தற்போது இந்த செயல்பாடு மாதத்திற்கு சராசரியாக 90,000 அழைப்புகளைக் கையாளுகிறது, மேலும் மாதத்திற்கு 120,000 அழைப்புகளைக் கையாளும் திறனை மேம்படுத்துகிறது. வாடிக்கையாளர் அழைப்புகளை திறம்பட கையாளும் பொருட்டு தினசரி அடிப்படையில் 20 சுழற்சி முறை இயக்க செயல்பாட்டுடன், பின்-அலுவலக ஆதரவிற்காக பயன்படுத்தப்படும் தேசிய

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஊழியர்களின் ஆதரவுடன் செயல்பாடு விரிவுபடுத்தப்படுகிறது.

**2023 இல் அழைப்பு மைய செயல்பாட்டின் வளர்ச்சி**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அழைப்பு மைய செயல்பாடு, அதன் வாடிக்கையாளர்களுக்கு “சேவையில் சிறந்து விளங்கும்” தரஅடையாளம் (brand) உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் செழுமைப்படுத்துவதில் தொடர்ந்து புதிய வசதிகளையும் சேர்த்து வருகிறது.

மாத ரீதியான வாடிக்கையாளர் பங்கேற்பு




## மனித வலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி

மனித வலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி ஆனுவுனு பிரிவானது உதவி பொது முகாமையாளரால் (ம.வஅ.ம.ப) தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்) அறிக்கையிடுகின்றனர். MDTD ஆனது பல்வேறு வகுதியுடைய ஊழியர்களிற்காக 2022 ஆம் ஆண்டின் பொது 184 உள்ளக பயிற்சிகளை நடாத்தியிருந்ததுடன் மொத்த ஊழியர் பங்குபற்றல் 7,143 ஆக இருந்தது.

மனித வலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவானது 2023 ஆம் ஆண்டில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்காக 270 உள்வாரி பயிற்சித் திட்டங்களை நடத்தியது. மொத்த ஊழியர்களின் பங்கேற்பு 7889 ஆக இருந்தது. மற்றும் 2023 ஆம் ஆண்டு முழுவதும் 16,731 பயிற்சி மனித நாட்களைக் கொண்டுள்ளது.

**நிறுவனத்தினால் வழங்கப்படும் பயிற்ச்சி**

*அட்டவணை இல 24*

| சபை தரம் | பங்குபற்றிய ஊழியர்கள் |
|---|---|
| 1 - 4 | 784 |
| 5 - 8 | 3,020 |
| 9 - 10 | 1,681 |
| 11 - 13 | 2,090 |
| 14 - 16 | 314 |
| மொத்தம் | 7,889 |

**மாகாணம்**

*அட்டவணை இல 25*

| இல | சபையின் தரம் | சபையினால் கார்த்திகை 2022 இறுதி வரை தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | பயிற்சி நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | முதுகலை பாடநெறிகள் | 14 | உள்ளூர் பல்கலைக்கழகங்கள் NIBM, CIPM, CETRAC, ICTAD, IESL, CHPB, SLIDA |
| 2 | டிப்ளோமா பாடநெறிகள் | 45 | |
| 3 | சான்றிதழ் மற்றும் பிற பாடநெறிகள் CIPM,CE- | 50 | |
| 4 | அட்டவணைப்படுத்தப்படாத பாடநெறி | 24 | |
| 5 | சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | 133 | |

**வெளிநாட்டு பயிற்சி மற்றும் அதிகாரப்பூர்வ வருகைகள்**

*அட்டவணை இல 26*

| இல | பங்கேற்பாளர்களின் வருகை | நிகழ்ச்சிகளின் வகை | பங்கு பற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆய்வு அதிகாரப்பூர்வ வருகைகள் | 11 | 22 |
| 2 | ஆய்வு அதிகாரப்பூர்வ வருகைகள் | 18 | 25 |
| 3 | குறுகிய கால பயிற்சி (ஆன்லைன்) | 01 | 01 |
| 4 | நீண்ட கால (ஆன்லைன்) | 05 | 07 |

**குறுகிய கால பயிற்சியின் விவரங்கள் (பார்வையிடப்பட்டது)**

*அட்டவணை இல 27*

| பெயர் | காலம் | நாடு நிதியளிக்கப்பட்ட | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|
| சுற்றுச்சூழல் கொள்கையில் எதிர்கால உலகளாவிய தலைவர்களுக்கான முதுகலை பட்டப்படிப்பு (MGLEP) | 13/02/2023 to 31/12/2024 | கொரிய குடியரசு | சியோல் பல்கலைக்கழகம் |
| சர்வதேச உயர்நிலை முதுகலை பட்டப்படிப்பு OpT AgroParisTech பிரான்ஸ் | 24/04/2023 To 17/03/2024 | பிரான்ஸ் | AgroParis-Tech, பிரான்ஸ் தே.நீ.வ.ச |
| எரிசக்தி கொள்கையில் KOICA-SNU முதுகலை பட்டப்படிப்பு | 29/08/2023 To 31/12/2024 | கொரிய குடியரசு | KOICA |
| காலநிலை மாற்றத்திற்கான பதிலளிப்பதற்கான திறனை வளர்ப்பதில் KOICA புலமை பரிசில் முதுகலை பட்டப்படிப்பு | 16/08/2023 To 27/12/2024 | கொரிய குடியரசு | KOICA |
| எம்.எஸ்சி. நீர் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான திட்டம் - IHE நீர் கல்விக்கான நிறுவனம் - நெதர்லாந்து | 30/10/2023 To 11/10/202 | நெதர்லாந்து | ஜப்பான், உலக வங்கி |

**தொழிற்துறை பயிற்ச்சி**

*அட்டவணை இல 28*

| மாணவர் வகை | 2022 டிசம்பர் வரையான மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| இளமானி | 352 |
| டிப்ளோமா | 156 |
| சான்றிதழ் | 142 |
| மொத்தம் | 650 |

ளளளளளளள




### நிறுவன வளர்ச்சி நடவடிக்கைகள்

- NVQ 4/CIDA குழாய் பொருத்துநர் பயிற்சி மற்றும் அங்கீகாரம் பெற்றது.
- மின் இலத்திரணியல் கற்கை தளம் நிறுவப்பட்டது
- ISO 9001: 2015 செயல்படுத்தலின் நிறைவு செய்யப்பட்ட ஆவணப்படுத்தல் பகுதி மேம்பாடு- மென்பொருள் தேவை சேகரிப்பு முடிந்து, உள்-வீட்டு பயிற்சி தொகுதிக்கான உருவாக்கம் தொடங்கியது
- பணியாளரின் செயல்திறனுடன் இணைக்க கட்டாய பயிற்சி நடைமுறை உருவாக்கப்பட்டது
- 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட திட்டங்களுக்கான பயிற்சி பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன
- நீர்த் துறைக்கான செயல்பாட்டு பகுப்பாய்வு நடத்தப்பட்டது மற்றும் NCS வளர்ச்சியின் தேவையை அடையாளம் காணவும்
- சுத்திகரிப்பு நிலைய தொழில்நுட்ப வல்லுநர்களுக்காக NCS மற்றும் குழாய் பொருத்துபவர்களுக்கு ஊேளு உருவாக்கப்பட்டுள்ளது
- பயன்படுத்தப்பட்ட அங்கீகாரம் குழாய் பொருத்துபவர்
- NCS மற்றும் பாடத்திட்ட குழாய் பொருத்துபவர்களுக்குக் திருத்தப்பட்டது
- RPL முறை மூலம் குழாய் பொருத்துபவர்களுக்கு NVQ 3: 4 வழங்குதல்.
- கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு குறுகிய பாடத்திட்டத்தை நடத்துதல்
- சபைத் தரம் VI மற்றும் அதற்குக் கீழே ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது.

## நீரிற்கான காணி

நீர் வழங்கல் மற்றும் நீர் மீளாக்கச் செயற்திட்டங்களின் அமுலாக்கலின் போது அவற்றின் வசதிகளை அமைப்பதற்கான காணிகள் தேவைப்பட்டடுமிடத்து அத்தகைய காணிகளின் சுவீகரிப்பு அல்லது குத்தகை நடைமுறை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் (தே.நீ.வ.வ.ச.) காணிப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டதுடன் முகாமையாளரால் (வளாகம்) தலைமை தாங்கப்படுவதுடன் மேலதிக பொது முகாமையாளரிற்கு (நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்) அறிக்கையிடுகின்றன.

01.01.2023- 31.12.2023 நிலவரப்படி நில முன்னேற்றம்




## நிறுவன தொடர்பாடல்

நிறுவன தொடர்பாடல் பிரிவு, முகாமையாளர் (நிறுவன தொடர்பாடல்) தலைமையில் மற்றும் மேலதிக பொது முகாமையாளரிடம் (நுகர்வோர் சொத்து முகாமைத்துவம்) அறிக்கை வழங்குகிறது.

**2023 மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்**

- **பொது விழிப்புணர்வு திட்டம்**

நிறுவன தொடர்பாடல் பிரிவு வாடிக்கையாளர் குழுக்கள், பாடசாலை குழந்தைகள் மற்றும் நுகர்வோர் சங்கங்களை இலக்காகக் கொண்டு நாடு தழுவிய அளவில் பல கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது. நீர் சேமிப்பு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, 3 பாடசாலைத் திட்டங்கள் மற்றும் 21 திட்டங்கள் அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளுக்கு நடத்தப்பட்டன.







- **சர்வதேச நீர் மாநாடு 2023 - நிகழ்வு முகாமைத்துவம்.**

2023 இல் நிறுவன தொடர்பாடல் பிரிவு சர்வதேச நீர் மாநாட்டுக்கான நிகழ்வை நிர்வகித்தது, இதில் தேநீர் மேசை (Coffee Table) புத்தகத்தை கருத்தாக்கம், வடிவமைத்தல் மற்றும் அச்சிடுதல் ஆகியவை அடங்கும். ஐறுஊ பற்றி ஒரு சிற்றேட்டை உருவாக்குதல் அழைப்பிதழ்கள், கோப்பு அட்டைகள், கொடிகள், பதாகைகள், அடையாள அட்டைகள் மற்றும் வடிவமைத்தல், இயங்குபட பின்னணியை உருவாக்குதல், புகைப்படம் எடுத்தல் மற்றும் சமூக ஊடக செயல் எல்லை வழங்குதல், மாநாட்டு பைகள் வடிவமைத்தல் மற்றும் மூன்று மொழிகளில் செய்தித்தாள் துணை வெளியீடு என்பன மேற்கொள்ளப்பட்டன.




- ◈ சர்வதேச நீர் தினம் 2023
- ◈ சர்வதேச நீர் தினம் 2023 இனை முன்னிட்டு நாடகம், சித்திரம், கட்டுரைப்போட்டிகள் மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது.







**விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு**

சுவரோவிய வடிவமைப்புகளுடன் கூடிய "Drive Thru" நீர் கட்டணம் செலுத்தும் முறையின் வடிவமைப்பு மற்றும் "ஜலய" என்ற மின் இதழின் உருவாக்கம் என்பன விழிப்புணர்வை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டன.

மேலும், நிறுவன தொடர்பாடல் பிரிவு பிராந்திய அதிகாரிகளுடன் இணைந்து வளர்ச்சி செய்திகளை வெளியிடுகிறது மற்றும் பார்வையை அதிகரிக்க முகப்புத்தகம், Twitter மற்றும் YouTube போன்ற சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துகிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கூடுதலாக, தொடர்பான நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதிலும் இப் பிரிவு ஈடுபட்டுள்ளது.






## நீர் மற்றும் சுகாதாரத்திற்கான சிறப்பு மையம் (CEWAS)

நீர் மற்றும் சுகாதாரத்திற்கான சிறப்பு மையம் 3முக்கிய பிரிவுகளைக் கொண்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்யின் மூலோபாய வணிகப் பிரிவு.

இரத்மலானையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிறுவப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 9,800 சதுர மீட்டர் பரப்பளவில் உயர்தர வசதிகளுடன் கூடிய நவீன நான்கு மாடிக் கட்டிடத்தைக் கொண்டுள்ளது. அதன் வசதிகளில் கேட்போர் கூடம், விரிவுரை அரங்குகள், மாநாட்டு அறைகள், அலுவலகங்கள், உடற்பயிற்சி கூடம் சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்கும் விடுதி ஆகியவை அடங்கும். CEWAS தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை யின் மூலோபாயப் பிரிவு, பல்வேறு நிகழ்வுகளை நடத்துகிறது மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒத்துழைக்கிறது. அறிவு, புத்தாக்கம் மற்றும் தர மையங்களாகப் பிரிக்கப்பட்ட

CEWAS ஆனது பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆய்வகச் சேவைகளில் கவனம் செலுத்துகிறது. டிசம்பர் 2022 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, CEWAS 150 நிகழ்வுகளை நடத்தி தனியார் மற்றும் அரசு துறைகளிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றது. ஒட்டுமொத்தமாக பார்த்தால் CEWAS ஆனது நீர் மற்றும் சுகாதாரத்தில் புதுமை, பயிற்சி மற்றும் தர உத்தரவாதத்திற்கான ஒரு மையமாகும், இது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இன் கீழ் சிறந்து விளங்குகிறது.



நீர் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க நிலையம்



நீர்பகுப்பாய்வு நிலையம்




பயிற்சிக்கு முந்தைய கலந்துரையாடல்



எதிர்கால நட்சத்திரங்கள் விருது வழங்கும் விழா



Hangum கண்காட்சி - மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு



சர்வதேச நீர் மாநாடு - 2023, இலங்கை


ஒரு துளி நீர், அதன் சொந்த
வரலாற்றை எழுத முடிந்தால்,
பிரபஞ்சத்தை நமக்கு விளக்கும்.”
லூசி லார்காம்
தேசத்திற்கான,
நீருக்கான
உபாய மார்க்கம்

# நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

## ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டம்

ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டம் (HWS) என்பது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால்அமைப்பு சபையின் குறிப்பிடத்தக்க முயற்சியாகும், இது நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமின் ING வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் (GOSL) நிதி ரீதியாக ஆதரிக்கப்படுகிறது. தொலைதூர இடங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள ஆதாரங்களின் மாசுபாடு காரணமாக சுத்தமான தண்ணீரை அணுக முடியாத சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை இந்தத் திட்டம் நிவர்த்தி செய்கிறது.



ஜூலை 26, 2023 இல் நிறைவடையும் இலக்குடன் டிசம்பர் 24, 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட HWSP ஆனது மாவனல்லை, அரநாயக்கா மற்றும் ரபுக்கனத்தலைப் பிரிவுகளில் உள்ள 135 GN பிரிவுகளில் உள்ள சுமார் 169, 204 (2042 ஆம் ஆண்டளவில்) மக்களுக்கு பாதுகாப்பான குழாய் மூலம் நீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திட்டக் கூறுகளில் உள்கட்டமைப்பு, நீர் சுத்திகரிப்பு நிலையம், தரை நீர்த்தேக்கங்கள், மூல நீர், பரிமாற்றம் மற்றும் விநியோக குழாய்கள், அணுகல் சாலைகள் ஆகியவை அடங்கும்.




ஜூலை 31, 2023 நிலவரப்படி, திட்டமானது 100% உடல் மற்றும் நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது, தற்போது இது குறைபாடுகள் அறிவிப்பு காலத்தில் உள்ளது

கொடவத்தையிலிருந்து ஒலிபரப்பு மற்றும் விநியோக மாற்றுதல்

## ஒருகொடவத்தையிலிருந்து கடுவெல திட்டத்திற்கு பரிமாற்றம் மற்றும் விநியோக குழாய்களை மாற்றுதல் (RETDOK)

ஒருகொடவத்தை மேம்பாலத்தில் இருந்து கடுவெல அதிவேக நெடுஞ்சாலை பரிமாற்றம் வரையிலான குறைவான அழுத்தமுள்ள வீதியில் லபுகம, கலட்டுவாவ மற்றும் அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து 1200 மி.மீ மற்றும் 1000 மி.மீ DI குழாய்களை மாற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இந்த பிரிவில் 355 மிமீ மற்றும் 160 மி.மீ HDPE குழாய்கள் பாதிக்கப்படுகின்ற தற்போதுள்ள 150,000 இணைப்புகளுக்கான சேவை நிலைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதி விரிவாக்க திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இருப்பினும், சில வீதிகள் செப்பனிடும் பணிகள் நிறைவுறாத காரணங்களால் குழாய் பதிக்கும் பணி தடைப்பட்டுள்ளது.



டிசம்பர் 31, 2023 நிலவரப்படி, பௌதீக மற்றும் நிதி சார் அடைவானது முறையே 99.10% மற்றும் 91.% ஆக உள்ளது.



# செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்கள்



*அட்டவணை இல 29*

| இல் | திட்டங்கள் | கொள்ளளவு (கன மீ./ நாள்) | பயனாளிகள் எண்ணிக்கை (குடும்பங்கள்) | இணைப்புகளின் எண்ணிக்கை | மேவுகை பிரதேசம் | மதிப்பீடு (மில்லியன்) | | நிதி முதல் | ஆரம்ப திகதி | எதிர்பார்க்கும் முடிவு திகதி | முன்னேற்ற அளவு 31.12.2023 ல் | நிதி முன்னேற்ற அளவு டிசம்பரில் (ரூபா மில்லியன்) | திட்டக்கூறுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அசல் | திருத்தம் | | | | | | |
| திறைசேரி மூலம் பெற்ற நீர் வழங்கல் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 1 | **பாரிய மாத்தளை நீர் விநியோகத்திட்டம்** | 75,000 | 267,700 | 90,000 | மாத்தளை, உக்குவெல்ல, ரத்தோட்ட, நாஉல, யட்டவட்ட, பல்லேபொல, அபன்கங்கா கோரல, | 31,453.00 | | CACIB-France | 2017.04.17 | மாசி 2022 | 100.00% | 310.87 | 1. ஆரம்பப்பணிகள்<br>2. நீர உள்ளெடுப்பு நிலையம் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையம் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பொருட்கள் விநியோகமும் பொருத்துதலும்<br>3. குடிசார் வேலைகள ஒரு நீர உள்ளெடுப்பு நிலையம் மூன்று நீர்ப்பம்பி நிலையம் (மாத்தளை, ரஜமன்ன, உடதனா இரண்டு அணைகள் (ரத்தோட்ட, உக்குவல) ஐந்து நீர் சுத்திகரிப்பு நிலையம் (மாத்தளை-30000, ரஜமன்ன-18000, உடதென்ன, ரத்தோட்ட, உக்குவல ஒவ்வொன்றும் 9000) மொத்தக்கொள்ளளவு 75000<br>4. 39 கி.மீ பரிமாற்ற குழாய், 394 கி.மீ விநியோக குழாய் |
| 2 | **யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் திட்டம்** | 24,000 | 300,000 | 60,000 | யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை,காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை, தென்மராட்சி,-கரவெட்டி, பளை,பூநகரி, கோப்பாய | 35,881.49 | | ADB | மாசி 21 | மார்கழி 23 | 84.04% | 9,526.03 | 1. நீர் சுத்திகரிப்பு நிலையம் (24000 கன.மீ∴ நாள்)<br>2. இருபது எண்ணிக்கையான நீர்த்தாங்கிகள<br>3. பரிமாற்ற மூலகுழாய் - HDPE 1400 மி.மீ. விட்டம்<br>4. நிலக்கீழ் நீர்த்தாங்கி 10000 கன மீ.,4000 கன மீ, 3000 கன மீ.1500 கன மீ & 100 கன மீ<br>5. சுத்திகரிக்கப்பட்ட பரிமாற்ற மூலகுழாய்:195 கி.மீ<br>6. விநியோக குழாய் பதித்தல் : 710 கி.மீ<br>7. பொறுப்பதிகாரி காரியாலயம், அலுவலர் விடுதி, உதவிபொது முகாமையாளர் காரியாலயம் |
| 3 | **அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம்- கட்டம் 1** | 94,000 | 115,600 | 25,000 | றம்பாவ, மதவாச்சி | 11,515.00 | | JICA | பங்குனி -2013 | மார்கழி-2022 | 98.71% | 358.80 | 1. Lot A- நீர உள்ளெடுப்பு நிலையம், நீர் சுத்திகரிப்பு நிலையம், நிலக்கீழ்த்தாங்கி, நீர்த்தாங்கி, அலுவலகம், இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள்<br>2. Lot B- பரிமாற்ற மூலகுழாய் விநியோகமும் பதித்தலும் (110அஅ - 500 அஅ விட்டம் )- 88.7 மஅ<br>3. Lot C1- uPVC குழாய் பதித்தல், DI,GI விநியோகமும் குழாய் பதித்தலும் இசின்பெசகல பகுதிக்கு<br>4. Lot C3- uPVC குழாய் பதித்தல், DI,GI விநியோகமும் குழாய் பதித்தலும் ரம்பேவ, ரம்பேவ கிழக்கு, எத்தகட பகுதிக்கு<br>5. ஆலோசனை ஒப்பந்தம்<br>மேலுள்ளவை திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். இதைவிட மேலதிகமாக சிறுதொகுப்புகளாக பராமரிப்பு இயந்திரங்கள், வாகனங்கள் வழங்கப்பட்டன. |
| 4 | **பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னெற்ற முதலீட்டு திட்டம் (கட்டம் 1)** | | | | | 14,560.00 | | ADB | புரட்டாதி 13 | ஆனி 21 | | | 1. கொழும்பு வடக்கு பகுதியின் வருமானமின்றிய நீரை குறைத்தல் விநியோக குழாய் வலையமைப்பு முன்னேற்றம் 16 மாவட்ட மீட்டர் பரப்பு கொழும்பு வடக்கு தொகுப்பு 2<br>2. கொழும்பு கிழக்கு பகுதியின் வருமானமின்றிய நீரை குறைத்தல் விநியோக குழாய் வலையமைப்பு முன்னேற்றம் 20 மாவட்ட மீட்டர் பரப்பு கொழும்பு கிழக்கு |
| 5 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னெற்ற முதலீட்டு திட்டம் (கட்டம் 2) | | | | கொழும்பு, திம்பிரிக்கசாய | 13,917.00 | | ADB | புரட்டாதி 14 | மாசி-2023 | 98.00% | 2,187.77 | 1. கொழும்பு மேற்கு பகுதியின் வருமானமின்றிய நீரை குறைத்தல் விநியோக குழாய் வலையமைப்பு முன்னேற்றம் 19 மாவட்ட மீட்டர் பரப்பு கொழும்பு மேற்கு தொகுப்பு 4<br>2. கொழும்பு தெற்கு பகுதியின் வருமானமின்றிய நீரை குறைத்தல் விநியோக குழாய் வலையமைப்பு முன்னேற்றம் 23 மாவட்ட மீட்டர் பரப்பு கொழும்பு தெற்கு |
| 6 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னெற்ற முதலீட்டு திட்டம் (கட்டம்3) | | | | | 7,232.00 | | ADB | கார்த்திகை 16 | மாசி 23 | N/A | 3,218.91 | திட்டம் 1,2 ற்கான மேலதிக நிதி வழங்கல் |

| இல் | திட்டங்கள் | கொள்ளளவு (கன மீ.். நாள்) | பயனாளிகள் எண்ணிக்கை (குடும்பங்கள்) | இணைப்புகளின் எண்ணிக்கை | மேவுகை பிரதேசம் | மதிப்பீடு (மில்லியன்) அசல் | மதிப்பீடு (மில்லியன்) திருத்தம் | நிதி முதல் | ஆரம்ப திகதி | எதிர்பார்க்கும் முடிவு திகதி | முன்னேற்ற அளவு 31.12.2023 ல் | நிதி முன்னேற்ற அளவு டிசம்பரில் (ரூபா மில்லியன்) | திட்டக்கூறுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திறைசேரி மூலம் பெற்ற நீர் வழங்கல் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 7 | அம்பத்தலே நீர் வழங்கல் அமைப்பு முன்னேற்றம் மற்றும் வலு சேமிப்பு திட்டம் | | சேவை முன்னேற்றம் | 500000 சேவை முன்னேற்றம் | கொலன்னாவ, ஸ்ரீ ஜெயவர்த்தன புர, கோட்டே, கடுவல | 13,000.00 | | AFD | ஆனி 16 | ஆனி 23 | 80.26% | 3,785.82 | CB 03 - கொத்தடுவ கட்டுமானம் 15000 m3 நீர்த்தேக்கம் மற்றும் பம்பி நிலையம் மற்றும் 5 km, 1200 mm DI குழாய்கள்<br>ICB 05 - நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் அம்பத்தலே உற்பத்தியின் வலு சேமிப்பு , மின்னியல், இயந்திரவியல் மற்றும் குடிசார் வசதிகள் |
| 8 | ஆனைமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் | 11,000 | 81,750 | 18,750 | ஆனமடுவ, கொடவெஹர, நவகத்தேகம & புத்தளத்தின் பகுதி, கல்கமுவ, முந்தலம, மககும்புக்கடவல | 8,625.17 | | ICO-spain | மாசி 17 | மார்கழி 22 | 75.00% | 16.54 | புதிய நீர உள்ளெடுப்பு நிலையம் 12500 கனமீ / நாள், இங்கினிமிடிய நீர்த்தேக்கம்<br>புதிய நீர்சுத்திகரிப்பு நிலையம் 11000கனமீ / நாள்<br>புதிய நீர்த்தாங்கிகள் 4 எண்ணிக்கை (ஆனமடுவ 1000 கன.மீ, கொடவெஹர 300 கன. மீ நவகத்தேகம 300 கன.மீ, மககும்புக்கடவல 1500 கன.மீ<br>பரிமாற்ற மூலகுழாய்- 1 கி.மீ<br>சுத்திகரிக்கப்பட்ட பரிமாற்ற குழாய்- 60 கி.மீ<br>சுத்திகரிக்கப்பட்ட வினியோக குழாய் - 328 கி.மீ |
| 9 | றுவான்வெல்ல நீர் வழங்கல் திட்டம் | 4,000 | 35,000 | 9,000 | றுவன்வெல்ல, புலத்கொஹபிடிய, யடியந்தொட்ட | 6,291.00 | | Exim bank of Korea | மார்கழி 19 | மார்கழி 22 | 27.70% | 671.78 | நீர்சுத்திகரிப்பு நிலையம், நீர உள்ளெடுப்பு நிலையம்<br>5 சேவை நீர்த்தேக்கங்கள்<br>2 பம்பி நிலையங்கள்<br>21 கி.மீ. பரிமாற்ற மூலகுழாய்<br>95 கி.மீ. விநியோக குழாய் |
| 10 | கண்டி வடக்கு பத்தாடும்பற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் | 100,000 | 290,000 | 72,000 | குண்டசாலை, ஹரிஸ்பத்துவ, பத்தாடும்பற, பூஜாபிடிய, அல்குரன, தும்பனே, யட்டி நுவர | 51,324.25 | | bank of china | ஆவணி 19 | சித்திரை 23 | 88.40% | 1,671.04 | 1. நீர் உள்ளெடுப்பு நிலைய முன்னேற்றம்<br>2. நீர் சுத்திகரிப்பு நிலைய முன்னேற்றம் 50000 m3/day to 100,000 m3/day<br>3. பரிமாற்ற குழாய் பதித்தல்- 83 கி.மீ<br>4. விநியோகக் குழாய் பதித்தல் - 570 கி.மீ<br>5. சேவை நீர்த்தேக்க கட்டுமானம் - 27 எண்ணிக்கை<br>6. பம்பி நிலைய கட்டுமானம் - 18 எண்ணிக்கை<br>7. இயந்திரவியல் மின்னியல் வேலைகள் |
| 11 | அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம்- கட்டம் 2 | 16,500 | 192,390 | 67,000 | பதவிய, ஹொரவபொத்தான, கஹடகஸ்கிலிய, கெபெடிகொல்லாவ, றம்பாவ பகுதி | JICA loan | | JICA | வைகாசி 18 | ஜூலை-2024 | 13.13% | 20.05 | 7400 m3/day நீர் உள்ளெடுப்பு நிலைய கட்டுமானம், 16500 m3/day நீர் சுத்திகரிப்பு நிலையம், 12 நீர்த்தாங்கிகள், 10 நிலக்கீழ் நீர்த்தேக்கங்கள், 148 கி.மீ பரிமாற்ற குழாய், 1475 கி.மீ விநியோக குழாய் |
| 12 | களு கங்கை நீர் வழங்கல் திட்டம் விரிவாக்கம்-1 | 140,000 | 500,100 | 75,000 புதிய இணைப்புகள்,20,000 இணைப்பு முன்னேற்றம் | மொரட்டுவ, கஸ்பாவ, பாதுக்க, ஹோமாகம, ஹொரண, இங்கிரிய, புலத்சிங்கள, மதுறுவெல, களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம | 55,339.00 | | JICA | மார்கழி 20 | வைகாசி 25 | 8.00% | 157.91 | கட்டம் 1 (5 கூறுகள்)<br>1. நீர் உள்ளெடுப்பு நிலையம், நீர் சுத்திகரிப்பு நிலையம் கந்தான<br>2. பரிமாற்ற மற்றும் விநியோக குழாய்கள்<br>3. நீர்த்தேக்கமும் நீர்ப்பம்பி நிலையமும்<br>4. மாற்றுதலும் புதிய குழாய் பதித்தலும் (தெஹிவளை/மொரட்டுவை)<br>5. நடத்துகை பராமரிப்பு கட்டடம், இயந்திரங்களின் கொள்முதல்<br>கட்டம் 2 (5 கூறுகள்)<br>6. விநியோக ஊட்டும் குழாய்கள் மற்றும் இரண்டாந்தர குழாய்கள்<br>7. னுஆயு கட்டுமானம் (19 எண்ணிக்கை) வருமானமின்றிய நீரை குறைத்தல்<br>8. விநியோக மூன்றாம் நிலை குழாய்கள் மற்றும் நீரிணைப்புகள்<br>9. DMA உபகரணம் வழங்குதலும் பொருத்துதலும்<br>10. நடத்துகை பராமரிப்பு மற்றும் வருமானமின்றிய நீரை குறைத்தலுக்கான கொள்முதல் |
| 13 | தெதுறு ஓயா நீர் வழங்கல் திட்டம் கட்டம் 1 | 15,000 | 90,700 | 20,000 | மஹாவ, பொல்பிதிகம | 10,227.00 | | EDFC Korea | மார்கழி 16 | மாசி 21 | 9% | 7.19 | 1. நுண் வடிகட்டி- நீர உள்ளெடுப்பு நிலையத்தில் 34000 m3/day கொள்ளளவு நுண்வடிகட்டி வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்<br>2. GAC வடிகட்டி- 15000 m3/day புயுஊ வடிகட்டி வடிவமைப்பு, கட்டுமானம், நடத்துதல் பராமரிப்பு உபஅரணக்களை பரிட்சித்தல், மற்றும் ஆரம்பித்தல்<br>3. விநியோக குழாய்- 260கி.மீ. விநியோக குழாய் வடிவமைப்பு மற்றும் பதித்தல். |
| 14 | கிராம கட்டுவான | 3,500 | 36,000 | 5,200 | கட்டுவான, வலஸ்முல்ல | 2776 | | Unicredit bank Austria | தை 19 | மாசி 21 | 100% | 0.79 | நீர உள்ளெடுப்பு நிலையம், நீர் சுத்திகரிப்பு நிலையம், பரிமாற்ற மற்றும் விநியோக குழாய்கள் |

*அட்டவணை இல 29*

| இல் | திட்டங்கள் | கொள்ளளவு (கன மீ.ஃ. நாள்) | பயனாளிகள் எண்ணிக்கை (குடும்பங்கள்) | இணைப்புகளின் எண்ணிக்கை | மேவுகை பிரதேசம் | மதிப்பீடு (மில்லியன்) | | நிதி முதல் | ஆரம்ப திகதி | எதிர்பார்க்கும் முடிவு திகதி | முன்னேற்ற அளவு 31.12.2023 ல் | நிதி முன்னேற்ற அளவு டிசம்பரில் (ரூபா மில்லியன்) | திட்டக்கூறுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அசல் | திருத்தம் | | | | | | |
| சபை மூலம் பெற்ற நீர் வழங்கல் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 1 | **கம்பஹா, அட்டனகல, மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்** | 54,000 | 550,000 | 88,000- | அத்தனகல, மினுவாங்கொட, கம்பஹா, மீரிகம, மாஹற | 33,060.00 | | CDBC-China | மாசி 2017 | மார்கழி 2022 | 92.52% | 2,324.11 | 1. 54000 கனமீ.ஃ. நாள் நீர் சுத்திகரிப்பு நிலையம் கரஸ்னாகல¸ 85,000 கனமீ.ஃ. நாள் உள்ளெடுப்பு நிலையம் கரஸ்னாகல, முகாமையாளர் காரியாலயம், இரண்டு பொறுப்பதிகாரி காரியாலயம், ஐந்து விடுதி, குழாய் வழங்கல்<br>2. 3.5 மில்லியன் கன மீ. பஸ்னாகொட நீர்த்தேக்கம்<br>3. 10,000 கன.மீ. உயர்மட்ட நீர்த்தேக்கம் நில்கஹடிகண்ட<br>4. அட்டனகல பரிமாற்றம் மற்றும் விநியோகமு, தெளிவான நீர் மூலம்<br>5. நிட்டம்புவ பரிமாற்றம் மற்றும் விநியோகமு,1500 கன.மீ நீர்த்தாங்கி¸ மூல நீர்<br>6. கம்பஹாபரிமாற்ற குழாய்கள்<br>7. நல்வல பரிமாற்றம் மற்றும் விநியோகமு,1500 கன.மீ நீர்த்தாங்கி<br>8. பஸ்யல பரிமாற்றம் மற்றும் விநியோகமு,1500 கன.மீ நீர்த்தாங்கி(புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டது)<br>9. மினுவாங்கொட பரிமாற்றம் மற்றும் விநியோகமு,1500 கன.மீ நீர்த்தாங்கி<br>10. பளுமெஹற பரிமாற்றம் மற்றும் விநியோகமு,1500 கன.மீ நீர்த்தாங்கி |
| 2 | **ஹெம்மத்தாகம நீர் வழங்கல் திட்டம்** | 21,000 | | 15,200 | றம்புக்கன,அறனாயக்க, மாவனல்ல | 17,422.00 | | ING | மார்கழி 2018 | ஆடி 23 | 100.00% | 3,801.03 | 1. 24,000 கனமீ.ஃ. நாள் கொள்ளளவு நீர உள்ளெடுப்பு நிலையம் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்<br>2. 0.6 கி.மீ. மூல நீர் குழாய்கள் வடிவமைப்பு மற்றும் பதித்தல்<br>3. 21,000 கன.மீ.ஃ. நாள் நீர் சுத்திகரிப்பு நிலையம் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்<br>4. 07 நீர்த்தேக்கங்கள் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்<br>5. 37 கி.மீ. நீளபரிமாற்ற குழாய்கள் வடிவமைப்பு மற்றும் பதித்தல்<br>6. 74 கி.மீ நீள விநியோக குழாய்கள் வடிவமைப்பு மற்றும் பதித்தல் |
| 3 | **தம்புத்தேகம நீர் வழங்கல் திட்டம்** | 18,000 | 91,810 | 25,000 | | 15,841.00 | | china development bank | ஆடி 17 | சித்திரை 23 | 86.10% | பொல்கஹவெல, பொத்துஹெர, அலவ்வ நீர் வழங்கல் திட்டம் | 1. நீர உள்ளெடுப்பு நிலையம்<br>2. நீர் சுத்திகரிப்பு நிலையம்<br>3. நீர்த்தாங்கிகள்<br>4. பிரதான நீர் குழாய்<br>5. சுத்திகரிக்கப்பட்ட பரிமாற்ற குழாய்<br>6. சுத்திகரிக்கப்பட்ட விநியோக குழாய்<br>7. காரியாலய கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானங்கள் |
| 4 | **பொல்கஹவெல, பொத்துஹெர, அலவ்வ நீர் வழங்கல் திட்டம்** | 29,000 | 162,725 | 38,000 | பொல்கஹவெல, அலவ்வ, குருணாகல், வீரம்புகெதற, மல்லவாபிட்டிய | 20,207.80 | | Exim bank of india | ஆனி-2017 | சித்திரை-2023 | 94.10% | 1,201.13 | 1. அணை<br>2. உள்ளெடுப்பு நிலையம் (31,000 கன. மீ/ நாள்)<br>3. நீர் சுத்திகரிப்பு நிலையம் (29,000 கன. மீ/ நாள்)<br>4. மூல நீர் குழாய் (1.5 கி.மீ)<br>5. நிலக்கீழ் நீர்த்தேக்கங்கள் 6 எண்ணிக்கை (50,175,500,800,1500,2000) கன.மீ. மற்றும் நீர்த்தாங்கி 1(1500 கன.மீ)<br>6. தெளிவான நீர் பரிமாற்ற குழாய் (38.25 கி.மீ)<br>7. விநியோக குழாய் (181.57 கி.மீ)<br>8. 3 நிறுவன கட்டடங்கள், 2 விடுதிகள் |
| 5 | **அளுத்கம,மதுகம,அகலவத்த நீர் வழங்கல் திட்டம்** | 13,500 | 300,000 | 60,000 | மத்துகம, தொடங்கொட, களுத்துறை, பேருவல, அகலவத்த, மதுறுவல | 32,278.00 | | Exim bank of india | வைகாசி 17 | கார்த்திகை 23 | 95.34% | 1,093.39 | புதிய நீர உள்ளெடுப்பு நிலையம் கொலேமொடற கொள்ளளவு 78,500 கன.மீ 13,500 கன.மீ/ நாள் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் இருக்கும் கெத்தேனா சுத்திகரிப்பு நிலையத்தை புதுப்பித்தல் இருக்கும் கெத்தேனா நீர உள்ளெடுப்பு நிலையத்தை பெருப்பித்தல் (74,250 கன.மீ. / நாள்)<br>நிலக்கீழ் நீர்த்தேக்கம் (தொடங்கொட 1500 கன.மீ)<br>நான்கு எண்ணிக்கை நீர்த்தாங்கிகள்( நேபொட 600 கன மீ / அகலவத்த 600 கன மீ,/மத்துகம கண்டா 225 கன மீ மற்றும் மத்துகம 1000 கன, மீ.)<br>பம்பி நிலையம், ஆலை கட்டடம், அலுவலகம் மற்றும் அலுவலர் விடுதி<br>விநியோக அமைப்பு (260 கி.மீ- 90-300 மி.மீ. விட்டம். DI/PVC) (களுத்துறை, பேருவல, தொடாங்கொட, மத்துகம, அகலவத்த, மதுறுவல)<br>பரிமாற்றக் குழாய் (58 கி.மீ- 300-800 மி.மீ. விட்டம் DI. (பிரதான நீர் பரிமாற்றம் கொலேமொதற - கெத்தான, பழைய நீர உள்ளெடுப்பு நிலையம் கெத்தான, கெத்தான- தொடங்கொட, கெத்தான- நேபொட, நேபொட- மத்துகம, மத்துகம- அகலவத்த, மத்துகம - மத்துகமகந்த, பேருவளை- தர்கா நகரம்) |

| இல | உதவித்திட்டம் | கொள்ளளவு (கன மீ./ நாள்) | பயனாளிகள் எண்ணிக்கை (குடும்பங்கள்) | இணைப்புகளின் எண்ணிக்கை | மேவுகை பிரதேசம் | மதிப்பீடு (மில்லியன்) அசல் | மதிப்பீடு (மில்லியன்) திருத்தம் | நிதி முதல் | ஆரம்ப திகதி | எதிர்பார்க்கும் முடிவு திகதி | முன்னேற்ற அளவு 31.12.2023 ல் | நிதி முன்னேற்ற அளவு டிசம்பரில் (ரூபா மில்லியன்) | திட்டக்கூறுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சபை மூலம் பெற்ற நீர் வழங்கல் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 6 | ஊர்கொடவத்தையிலிருந்து கடுவல வரை பரிமாற்ற மற்றும் விநியோக குழாய்களை மாற்றுதல் | | சேவை முன்னேற்றம் | | 03 பிரதேச செயலர் பிரிவு (கொழும்பு, திம்பிரிகஸ்யாய, கொலன்னாவ) | 10,794.00 | | unicredits bank Austria & peoples bank | புரட்டாதி 18 | பங்குனி 23 | 99.10% | 2,101.00 | 1200 மி.மீ விட்டம் DI குழாய்கள் விநியோகம் பதித்தலும் - 11890 மீ<br>1000 மி.மீ விட்டம் DI குழாய்கள் விநியோகம்˙விநியோகம் பதித்தலும் - 3960 மீ<br>355 மி.மீ விட்டம் HDPE குழாய்கள் விநியோகம் பதித்தலும் - 16070 மீ<br>160 மி.மீ விட்டம் HDPE குழாய்கள் விநியோகம் பதித்தலும் - 16835 மீ<br>4400 மீ. வழங்குதலும் பதித்தலும் (விட்டம் 63 மி.மீ இருந்து 350 மி.மீ வரை இணைப்புகள் மாற்றுகையில் வேறுபடும்)<br>புதிய ஊட்டக்குழாய்களில் இருந்து பிரியும் பாதைக்கான விநியோக குழாய்கலுக்கான இணைப்புகள்<br>இணை கட்டமைப்புகளும் இரும்பு வளை கட்டுமானங்களும் 8 ஏண்ணிக்கையான பால கடப்புகளுக்கானது<br>ஏற்கனவே உள்ள 10 000 சேவை இணைப்புகளை மாற்றுதல்<br>7 எண்ணிக்கையான முக்கிய குழாய் இணைப்புகள்<br>1000 மி.மீ - 1200 மி.மீ) |
| 7 | மாத்தறை 4ம் கட்ட நீர் வழங்கல் திட்டம் | 30,000 | 285,000 | 60,000 | மாத்தறை, தெவுனுவர, திக்வெல்ல, கபுறுபிடிய, கிரிந்த, புஹுல்வெல்ல, திககொட, வெலிகம, வெலிபிட்டிய, மலிம்பட, பெலியத்த, தங்கல்ல | 18,208.00 | | NDB bank | ஐப்பசி 2017 | [illegible]-2022 | 93.10% | 577.53 | உள்ளெடுப்பு நிலையம் கட்டுவான்கொட 66,000 கன.மீ/ நாள்<br>நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவான்கொட 30,000 கன.மீ/ நாள்<br>பரிமாற்றக் குழாய் : 70 கி.மீ<br>விநியோக அமைப்பு : 103 கி.மீ<br>நிலக்கீழ் நீர்த்தேக்கங்கள் (6 எண்ணிக்கை): மலிம்பொட, கல்கெட்டிய, யட்டியான, தன்தெனிய, கொடிகஹகந்த, மிரிஸ்வத்த<br>நீர்த்தாங்கிகள்: சல்மவுண்ட், ஹுண்டுவ, கரகொட, உயன்கொட, மிரிஸ்வத்த<br>உவர்த்தடுப்பு: நில்வல கங்கைக்கு குறு க்காக நவிமன தெற்கில் |
| கழிவு நீர் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 1 | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ திட்டம் | | | 55,000 | கண்டி, யட்டினுவர, கஹவடகொரல | 22,588 | | JICA | ஆடி 2010 | மார்கழி 2022 | 92.56% | 34 .81 | |
| 2 | இலங்கை தென்மேற்கு பிரதேச நகர சுகாதாரத்திற்கான முயற்சி | | | 200,000 | களனி, நீர்கொழும்பு, காலி மாநகர சபைகள், உணவட்டுன ஹோட்டல் பிரதேசம், களனி, பேலியகொட பிரதேசம் | 17,665 | | AFD | ஆனி 2016 | மார்கழி 2023 | 11.60% | 64.45 | |
| 3 | இரத்மலானை,மொரட்டுவை கழிவு நீர் வெளியேற்றும் திட்டத்தின் கட்டம் 1 கூறு 2 | | | 45,000 | இரத்மலானை,மொர-ட்டுவை | 16,073 | | AFD | ஆடி 2016 | மார்கழி 2025 | 16.00% | 49.28 | |
| உள்ளூர் வங்கி நிதியளிக்கும் திட்டங்கள் | | | | | | | | | | | | | |
| 1 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் திட்டம் -கூறு 1 | | | | பாதுக்க, சீதாவக்க, ஹொரணை | 5,170 | | BOC | 2015.04.30 | முடிந்தது (10.02.2020) | 100.00% | | |
| 2 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் திட்டம் | 91,000 | | | பாதுக்க, சீதாவக்க | 4,823 | | BOC | 2016.08.03 | 2022.08.31 | 94.40% | | |
| 3 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் திட்டம் | | | | கடுவல, ஹோமகம, பாதுக்க, சீதாவக்க,உரு- | 10,049 | | BOC | 2015.10.28 | முடிந்தது | 100.00% | | |
| 4 | உருகசஸ்மங்கண்டிய கோனப்பினுவல, டிக்கும்புர, வெலிகம | 11,395 | | | கோனப்பினுவல, டிக்கும்புர, வெலிகம | 1755.00 (திருத்தம் 759.17) | | Peoples bank/ BOC | 2017.03.15 | 2022.03.31 | 100.00% | | |
| 5 | பெரிய இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டம் | 7,000 | | | இரத்தினபுரி, குருவிட்ட | 1,528 | | BOC | 2018.12.11 | 30.06.2022 | 61.00% | | |
| 6 | வில்கமுவ நீர் வழங்கல் திட்டம் | 5,500 | | 7,500 | வில்கமுவ | 3,580 | | NDB | 2016.08.01 | 31.10.2022 + 3 மாதம் பராமரிப்பு காலம் | 71.87% | | |
| 7 | லக்கல நீர் வழங்கல் திட்டம் | 4,000 | | 6,800 | லக்கல, பல்லேகம | 4,496 | | HNB | 2016.07.21 | 14.10.2022+ 3 மாதம் பராமரிப்பு காலம் | 81.12% | 403.00 | |
| 8 | எற்றம்பிடிய நீர் வழங்கல் திட்டம் | | | 4,000 | ஹல்லேல்ல | 2244.00 | | Peoples bank | 2017.05.12 | 2021.10.31 | 100.00% | | |
| 9 | மெதிரிகிரிய விநியோக திட்டம் கூறு 2 | | | 8,600 | மெதிரிகிரிய | 1500.00 | | BOC | 2016.03.01 | 2021.01.31 | 100.00% | | |

# தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்

| மாகாணம்/ பி. சே. நி | நீ.வ.தி. எண்ணிக்கை |
| --- | --- |
| மத்திய | 38 |
| கிழக்கு | 56 |
| வட மத்திய | 34 |
| வட மேல் | 16 |
| வடக்கு | 34 |
| சப்ரகமுவ | 23 |
| தென் | 51 |
| ஊவா | 36 |
| மேல் - மத்தி | 19 |
| மேல் - வடக்கு | 21 |
| மேல் - தெற்கு | 13 |
| மொத்தம் | 341 |



# பிராந்திய ஆதார நிலையங்கள்



பிராந்திய சேவைகள் நிலையம்

| பி. சே. நி | பிராந்தியம் | நிறைவேற்றுகை திறன் — வீட்டு நீரிணைப்புக்கள்: வீட்டு நீரிணைப்புக்கள் (சமுர்த்தி அல்லாத) | (சமுர்த்தி | வீட்டிணைப்பில்லாத இணைப்புக்கள்: பாடசாலை (அரச மற்றும் ஏனையவை) | மத தலங்கள் | வணிகம் | அரச நிறுவனம் | ஏனையவை | மொத்த இணைப்புக்கள் | வருடத்தில் வழங்கப்பட்ட புதிய இணைப்புக்கள் | பி சே நி உள்வாங்கல் பிரதேசம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் - மத்தி | கொழும்பு நகரம் | 126,503 | 119 | 230 | 736 | 21,005 | 1,111 | 1,007 | 150,711 | 1,558 | 100% |
| | கோட்டை | 175,478 | 948 | 106 | 420 | 15,366 | 334 | 111 | 192,763 | 2,841 | |
| | மகரகம | 213,836 | 540 | 166 | 496 | 16,240 | 409 | 167 | 231,854 | 7,642 | |
| | | **515,817** | **1,607** | **502** | **1,652** | **52,611** | **1,854** | **1,285** | **575,328** | **12,041** | |
| மேல் - தெற்கு | தெஹிவளை | 107,678 | 213 | 93 | 387 | 9,371 | 408 | 63 | 118,213 | 1,513 | 68.6% |
| | களுத்துறை | 75,819 | 119 | 131 | 356 | 4,853 | 309 | 67 | 81,654 | 2,472 | |
| | பாணந்துறை - ஹொரன | 104,600 | 1,149 | 136 | 321 | 7,738 | 353 | 79 | 114,376 | 3,913 | |
| | | **288,097** | **1,481** | **360** | **1,064** | **21,962** | **1,070** | **209** | **314,243** | **7,898** | |
| மேல் - வடக்கு | களனி | 236,317 | 1,469 | 204 | 530 | 16,351 | 531 | 197 | 255,599 | 6,832 | 57.9% |
| | கம்பஹா | 101,535 | 464 | 154 | 362 | 10,868 | 501 | 230 | 114,114 | 7,467 | |
| | | **337,852** | **1,933** | **358** | **892** | **27,219** | **1,032** | **427** | **369,713** | **14,299** | |
| தெற்கு | காலி | 127,332 | 1,784 | 258 | 604 | 10,191 | 797 | 152 | 141,118 | 3,588 | 64.4% |
| | மாத்தறை | 104,445 | 2,718 | 205 | 443 | 8,022 | 746 | 25 | 116,604 | 3,615 | |
| | அம்பாந்தோட்டை | 125,140 | 3,636 | 243 | 585 | 5,334 | 974 | 233 | 136,145 | 3,847 | |
| | | **356,917** | **8,138** | **706** | **1,632** | **23,547** | **2,517** | **410** | **393,867** | **11,050** | |
| கிழக்கு | அம்பாறை | 76,951 | 5,184 | 201 | 320 | 2,840 | 624 | 265 | 86,385 | 2,393 | 81.9% |
| | அக்கரைப்பற்று | 88,517 | 6,358 | 247 | 687 | 3,614 | 598 | 141 | 100,162 | 2,966 | |
| | மட்டக்களப்பு | 65,921 | 6,663 | 304 | 618 | 2,709 | 546 | 191 | 76,952 | 4,901 | |
| | திருகோணமலை | 93,510 | 4,380 | 509 | 800 | 3,149 | 827 | 135 | 103,310 | 3,519 | |
| | | **324,899** | **22,585** | **1,261** | **2,425** | **12,312** | **2,595** | 732 | **366,809** | **13,779** | |
| ஊவா | பண்டாரவளை | 81,599 | 563 | 202 | 485 | 6,409 | 637 | 74 | 89,969 | 5,302 | 65.1% |
| | மொனராகலை | 54,474 | 2,987 | 125 | 231 | 3,580 | 339 | 54 | 61,790 | 2,230 | |
| | | **136,073** | **3,550** | **327** | **716** | **9,989** | **976** | **128** | **151,759** | **7,532** | |
| மத்தி | கண்டி - தெற்கு | 105,087 | 316 | 194 | 613 | 8,804 | 398 | 74 | 115,486 | 2,202 | 58.3% |
| | கண்டி - கிழக்கு | 74,987 | 1,630 | 129 | 372 | 3,880 | 377 | 59 | 81,434 | 1,681 | |
| | கண்டி - வடக்கு | 127,843 | 1,891 | 252 | 633 | 8,932 | 520 | 121 | 140,192 | 11,574 | |
| | | **307,917** | **3,837** | **575** | **1,618** | **21,616** | **1,295** | **254** | **337,112** | **15,457** | |
| வட மேல | குருநாகல் | 58,115 | 1,164 | 148 | 376 | 5,869 | 398 | 94 | 66,164 | 5,905 | 34.6% |
| | புத்தளம் | 58,722 | 303 | 112 | 372 | 4,069 | 366 | 95 | 64,039 | 3,411 | |
| | | **116,837** | **1,467** | **260** | **748** | **9,938** | **764** | **189** | **130,203** | **9,316** | |
| சப்பரகமுவ | இரத்தினபுரி | 69,470 | 3,567 | 141 | 260 | 7,752 | 416 | 28 | 81,634 | 3,879 | 53.6% |
| | கேகாலை | 64,133 | 788 | 180 | 380 | 5,681 | 333 | 68 | 71,563 | 3,762 | |
| | | **133,603** | **4,355** | **321** | **640** | **13,433** | **749** | **96** | **153,197** | **7,641** | |
| வட மத்தி | அனுராதபுரம் | 105,543 | 674 | 177 | 506 | 9,022 | 852 | 177 | 116,951 | 5,916 | 65.3% |
| | பொலன்னறுவை | 52,980 | 2,668 | 85 | 169 | 3,713 | 463 | 237 | 60,315 | 2,598 | |
| | | **158,523** | **3,342** | **262** | **675** | **12,735** | **1,315** | **414** | **177,266** | **8,514** | |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 18,710 | 2,794 | 99 | 160 | 466 | 180 | 223 | 22,632 | 4,680 | 21.5% |
| | வவுனியா | 25,445 | 1,153 | 92 | 299 | 1,464 | 310 | 158 | 28,921 | 3,302 | |
| | | **44,155** | **3,947** | **191** | **459** | **1,930** | **490** | **381** | **51,553** | **7,982** | |
| நாடு முழுவதும் | | 2,720,690 | 56,242 | 5,123 | 12,521 | 207,292 | 14,657 | 4,525 | 3,021,050 | 115,509 | 61.6% |

| பி. சே. நி | பிராந்தியம் | வணிக திறன்: உற்பத்தி (மில்லியன் கன மீட்டர்) | பாவனை (மில்லியன் கன மீட்டர்) | வருமானமற்ற நீர் % | பற்றுச்சீட்டு (மில்லியன் ரூபா) | பெறுகை (மில்லியன் ரூபா) | பெறுகை திறன் (மில்லியன் ரூபா) | கடன் தவறியகாலம் துண்டிப்பு (மாதங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் - மத்தி | கொழும்பு நகரம் | 79,017,332 | 63,808,006 | 19.25 | 9,207 | 8,709 | 0.95 | 1.32 |
| | கோட்டை | 67,124,172 | 45,179,214 | 32.69 | 5,120 | 4,777 | 0.93 | 2.03 |
| | மகரகம | 58,403,924 | 46,246,962 | 20.82 | 4,811 | 4,518 | 0.94 | 1.93 |
| | | **204,545,428** | **155,234,182** | **24.11** | **19,139** | **18,004** | **0.94** | **1.68** |
| மேல் - தெற்கு | தெஹிவளை | 41,936,442 | 28,243,668 | 32.65 | 3,654 | 3,524 | 0.96 | 1.62 |
| | களுத்துறை | 19,022,935 | 14,893,073 | 21.71 | 1,662 | 1,548 | 0.93 | 2.19 |
| | பாணந்துறை - ஹொரன | 24,185,961 | 20,581,196 | 14.90 | 2,315 | 2,192 | 0.95 | 1.44 |
| | | **85,145,338** | **63,717,937** | **25.17** | **7,630** | **7,265** | **0.95** | **1.69** |
| மேல் - வடக்கு | களனி | 82,496,277 | 62,058,528 | 24.77 | 7,374 | 7,006 | 0.95 | 1.52 |
| | கம்பஹா | 32,511,002 | 24,709,687 | 24.00 | 2,909 | 2,716 | 0.93 | 1.70 |
| | | **115,007,279** | **86,768,215** | **24.55** | **10,284** | **9,721** | **0.95** | **1.57** |
| தெற்கு | காலி | 39,018,273 | 26,345,554 | 32.48 | 2,929 | 2,721 | 0.93 | 1.88 |
| | மாத்தறை | 29,398,569 | 20,463,502 | 30.39 | 2,219 | 2,070 | 0.93 | 1.81 |
| | அம்பாந்தோட்டை | 33,555,783 | 24,466,660 | 27.09 | 2,547 | 2,264 | 0.89 | 2.57 |
| | | **101,972,625** | **71,275,716** | **30.10** | **7,695** | **7,056** | **0.92** | **2.09** |
| கிழக்கு | அம்பாறை | 16,401,385 | 13,761,453 | 16.10 | 1,341 | 1,260 | 0.94 | 1.84 |
| | அக்கரைப்பற்று | 18,079,444 | 14,970,487 | 17.20 | 1,483 | 1,357 | 0.91 | 1.79 |
| | மட்டக்களப்பு | 11,848,220 | 9,848,546 | 16.88 | 1,059 | 1,010 | 0.95 | 1.25 |
| | திருகோணமலை | 20,394,963 | 15,872,292 | 22.18 | 1,599 | 1,385 | 0.87 | 2.29 |
| | | **66,724,012** | **54,452,778** | **18.39** | **5,481** | **5,012** | **0.91** | **1.85** |
| ஊவா | பண்டாரவளை | 17,186,544 | 12,734,069 | 25.91 | 1,364 | 1,257 | 0.92 | 1.60 |
| | மொனராகலை | 12,378,952 | 8,643,626 | 30.17 | 873 | 820 | 0.94 | 1.44 |
| | | **29,565,496** | **21,377,695** | **27.69** | **2,237** | **2,076** | **0.93** | **1.54** |
| மத்தி | கண்டி - தெற்கு | 30,028,194 | 19,816,554 | 34.01 | 1,947 | 1,771 | 0.91 | 1.74 |
| | கண்டி - கிழக்கு | 17,095,396 | 13,472,997 | 21.19 | 1,400 | 1,272 | 0.91 | 1.54 |
| | கண்டி - வடக்கு | 44,153,898 | 27,058,175 | 38.72 | 2,643 | 2,422 | 0.92 | 1.59 |
| | | **91,277,488** | **60,347,726** | **33.89** | **5,990** | **5,465** | **0.91** | **1.63** |
| வட மேல | குருநாகல் | 15,833,380 | 13,031,620 | 17.70 | 1,208 | 1,168 | 0.97 | 1.38 |
| | புத்தளம் | 12,775,462 | 10,212,247 | 20.06 | 1,127 | 1,072 | 0.95 | 1.90 |
| | | **28,608,842** | **23,243,867** | **18.75** | **2,335** | **2,239** | **0.96** | **1.63** |
| சப்பரகமுவ | இரத்தினபுரி | 19,389,368 | 14,239,901 | 26.56 | 1,551 | 1,457 | 0.94 | 1.72 |
| | கேகாலை | 14,480,967 | 10,811,239 | 25.34 | 1,186 | 1,129 | 0.95 | 1.79 |
| | | **33,870,335** | **25,051,140** | **26.04** | **2,737** | **2,586** | **0.94** | **1.75** |
| வட மத்தி | அனுராதபுரம் | 25,027,642 | 21,122,914 | 15.60 | 2,249 | 2,487 | 1.11 | 1.66 |
| | பொலன்னறுவை | 13,406,220 | 10,844,758 | 19.11 | 1,156 | 1,037 | 0.90 | 2.23 |
| | | **38,433,862** | **31,967,672** | **16.82** | **3,405** | **3,524** | **1.03** | **1.85** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 2,265,112 | 1,806,480 | 20.25 | 203 | 164 | 0.81 | 2.68 |
| | வவுனியா | 5,807,264 | 4,606,593 | 20.68 | 496 | 449 | 0.91 | 2.13 |
| | | **8,072,376** | **6,413,073** | **20.56** | **699** | **613** | **0.88** | **2.28** |
| நாடு முழுவதும் | | 803,223,081 | 599,850,001 | 25.32 | 67,632 | 63,562 | 0.94 | 2.00 |

அட்டவணை இல 30

## மேல்மாகாணம் - மத்திய பிராந்திய சேவைகள் நிலையம்

### நிர்வாக எல்லை

மேல் மத்திய பிராந்திய சேவை நிலையமானது கொழும்பு மாவட்டம் முழுவதுமான நீர் வழங்கல் முகாமைத்துவ செயற்பாடுகளை நிர்வகிக்கின்ற நிலையமாக உள்ளது. இது தெஹிவளை, இரத்மலானை மற்றும் மொரட்டுவை பிரதேச செயலக பிரிவுகள் தவிர்ந்த கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு நகரம் வடக்கு, கொழும்பு நகரம் தெற்கு, கோட்டை மற்றும் மகரகம போன்ற முகாமையாளர் பிராந்தியங்களைக் கொண்டவாறு தனது சேவைப்பிரதேசத்தை கொண்டுள்ளது.

### விநியோக விரிவாக்கம்

மேல் மத்திய பிராந்திய சேவை நிலையமானது அறிக்கையிடல் காலப்பகுதியில் நீர் விநியோக விஸ்தரிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. அதாவது 2023 ஆம் ஆண்டிற்கான பாரிய அபிவிருத்திகளின் கீழ் 14 முன்னுரிமை இணைப்புகளிற்காக 13.3 கிலோ மீற்றர் நீளமான பெரிய சுற்றளவுடைய குழாய்களைக் கொண்டு விநியோக வலையமைப்பு இடப்பட்டது. இதற்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வீதிகளில் 24.50 கிலோ மீற்றர் நீளமும், மாநகர சபை வீதிகளில் 4.80 கிலோ மீற்றர் நீளமும், 2.92 கிலோமீற்றர் நீளமுடைய பிரதேச சபை வீதிகளிலும் குழாய் இடமாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக நீர் வழங்கலை 60 கிலோமீற்றர் நீளமான விநியோக குழாய் வலையமைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.

### நீரின் தரத்தினை உயர்த்துதல்

கொஸ்கம நீர் விநியோக மீள் கட்டுமான முயற்சிகளுக்கான திட்டம் - நிலை 1 ற்கான ஒப்பந்தமானது வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ள நிலையில் நிலை 2 மற்றும் 3 ற்கான ஒப்பந்தமானது கேள்வி கோரல் நிலையிலுள்ளதுடன் குறித்த வேலை 2024 ம் ஆண்டளவில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### வருமானமற்ற நீர் குறைப்பு

மேல் மத்திய பிராந்திய சேவை நிலையமானது வருமனமற்ற நீர் குறைப்பில் அவதானிக்கக் கூடிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. அதாவது வருமானமற்ற நீரானது 24.33% லிருந்து 0.96% ஆக குறைந்திருக்கின்றது. பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் மேம்பாட்டுத் திட்டமானது கொழும்பு நகரிற்குள் 24.27% லிருந்து 19.7% ற்கு வருமானமற்ற நீர் குறைப்பினை அடைவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது. வருமானமற்ற நீரினை சிறப்பான முறையில் கண்காணிப்பதற்காக மாவட்டமட்டத்தில் அளவிடப்பட்ட வலையங்களிற்குள் எல்லை நிர்ணயிப்பிற்காக மகரகம மற்றும் கோட்டை பிராந்தியங்களில் விநியோக வலையமைப்புக்களின் மீள் வடிவமைப்பு தற்போது செயற்பாட்டில் உள்ளது.

### வினைத்திறனான சக்தி நடவடிக்கைகள்

கோட்டை யூப்லி எதிரிசிங்க வீதியிலுள்ள இறைக்கும் சாலையில் பம்பிகள் மீளமைத்தல், மின்மாற்றியின் உள்வரும் கேபிள் மாற்றீடுகள் போன்ற குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்கள் 2023ல் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. வினைத்திறனான சக்தி முகாமைத்துவத்திற்காக நீர்த் தேவை ஒரு மணித்தியாலத்திற்கு 190 கன மீற்றர் கொள்ளளவிலிருந்து 300 கன மீற்றர் கொள்ளளவிற்கு மாறும் போது kvA 120 இலிருந்து 95 வரை kwA 70,000 லிருந்து 59,500 வரை குறைத்தல் மற்றும் உயர் பாவனை kwA 12750 லிருந்து 8000 ற்கு குறைக்கப்பட்டது. கோட்டை யூப்லி எதிரிசிங்க வீதியிலுள்ள இறைக்கும் சாலையில் பொருத்தப்பட்ட மெய்நிகர் பம்பிகள் கண்காணிப்பு முறைமையானது அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் கோகந்தர நிலையத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. செயல்பாட்டு செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையினை உறுதி செய்து கொள்வதற்காக பல்வேறு இறைக்கும் சாலைகள், மின்பிறப்பாக்கி மற்றும் குளிரூட்டிகளிற்கான மீளமைப்பு மேற்கொள்ளப்பட்டமையினை சக்தி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### வணிக செயற்திறன் பற்றிய விழிப்புணர்வு

நீர் வீண் விரயத்தை தடுக்கவும், நீர்க்கசிவுகளை கண்டு பிடிக்கவும் பாடசாலைகள், மருத்துவமனைகள், பொலிஸ்நிலையங்கள், மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றில் ஆய்வுகளும் கள அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களுக்கு நீரின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துவதற்காக 6 கல்வி சார் விழிப்புணர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

### முறைமை மேம்பாட்டிற்கான திட்டமிடல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மேற்பார்வையின் கீழ் யூப்லி கோட்டை பகுதி மற்றும் கொலன்னாவ பகுதி நீர் வழங்கல் வசதிகளை தரமுயர்த்தல் மற்றும் முகாமைத்துவ உபாயங்களிற்காக அதிகமாக தடையற்ற வலையமைப்புக்களுடன் 2040 ம் ஆண்டிற்கு ஏற்ப திட்டம் வடிவமைப்பு செய்யப்பட்டது. எனினும் நிதிச் சிக்கல் காரணமாக குறித்த திட்டமானது தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. இது தவிர மேல் மத்திய பிராந்திய சேவை நிலையமானது வருமானமற்ற நீர் குறைப்பில் 0.96% னை அடைந்துள்ளதுடன் நீர் விநியோகம், தரம், வினைத்திறன் மிகு சக்தி பாவனை போன்றவற்றிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. மேல் மத்திய பிராந்தியத்தில் நெகிழ்ச்சியான நீர் எதிர்காலத்திற்கான பங்குதாரர்களின் பங்களிப்பினை இவ் அறிக்கை வலியுறுத்துகின்றது.

## மேல்மாகாணம் - தெற்கு பிராந்திய சேவைகள் நிலையம்

### நிர்வாக எல்லை

மேல் தெற்கு பிராந்திய சேவைகள் நிலையமானது களுத்துறை மாவட்டம் முழுமைக்கும் கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை, இரத்மலானை மற்றும் மொறட்டுவ பிரதேச செயலக பகுதிகளுக்கு தனது நீர் வழங்கலை முகாமையாளர் தெஹிவளை, முகாமையாளர் களுத்துறை, மற்றும் முகாமையாளர் பாணந்துறை என்ற மூன்று பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களினூடாக வழங்குகின்றது.

### விநியோக விரிவாக்கம்

மேல் தெற்கு பிராந்திய சேவை நிலையமானது இந்தக் காலப்பகுதியில் நீர் விநியோக விரிவாக்கலில் களுத்துறை பிரதேசத்தில் 29 கிலோமீற்றரும், பாணந்துறை கொறணை பிரதேசத்தில் 61 கிலோ மீற்றரும் தெஹிவளை பிரதேசத்தில் 1.5 கிலோ மீற்றரும் உள்ளடங்கலாக மொத்த தூரம் 95.3 கிலோ மீற்றர் பிரதேசத்திற்கான குழாய் பதிப்பினை மேற்கொண்டுள்ளது. 500 கன மீற்றர் கொள்ளளவுடைய தகம்பாகனகம நீர்த் தேக்கம் மற்றும் அதனுடன் இணைந்ததான 160 மில்லி மீற்றர் பிரதான குழாய் வலையமைப்பும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக 6800 கன மீற்றர் கொள்ளளவுடைய அல்விஸ் பகுதி நீர்த் தேக்கம் வெற்றிகரமாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இங்கிரிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பிரதான குழாய் வலையமைப்பு மற்றும் கெத்கேன சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மத்திய சந்திக்கு செல்லும் பகுதிக்கான பிரதான குழாய் வலையமைப்பு என்பவற்றின் விரிவுபடுத்துதல் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளது.

### நீரின் தரத்தினை உயர்த்துதல்

நீர் பாதுகாப்பு திட்டத்தின் வெளிவாரிக் கணக்காய்வு மற்றும் உள்ளக கணக்காய்வின் போது கொறணை நீர் வழங்கல் திட்டத்தின் தரத்தினை கருத்திற்கொண்டு அதற்கு மிகச்சிறந்த திட்டம் என்ற விருது வழங்கப்பட்டது. இதனூடாக நீரின் தரத்தினை மேம்படுத்த்துவதில் உள்ள எமது அர்ப்பணிப்பு தெளிவாக தெரிகின்றது.

### வருமானமற்ற நீர் குறைப்பு

நீர்க்கசிவுகளை வினைத்திறன் மிகு முறையில் கண்டு பிடிப்பதற்காக இரவு நேர மதிப்பீடு உள்ளடங்கலாக பாடசாலைகள், மருத்துவமனைகள், பொலிஸ் நிலையங்கள், மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. வருமானமற்ற நீர்க்குறைப்பிற்கான எமது செயற்பாடுகள் 100% ஆக முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. 442 இணைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு கள அவதானிப்பில் 34 சட்டவிரோத இணைப்புக்கள் கண்டறியப்பட்டு

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவற்றினூடாக நீர் முகாமைத்துவத்தினை சிறப்பான முறையில் வினைத்திறனாக மேற்கொள்ளும் எமது அர்ப்பணிப்புமிக்க சேவையானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

#### கூட்டுச் சமூகப் பொறுப்பு

தொடன்கொட பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளுக்கு புதிதாக இணைப்பினை வழங்குவதற்காக 2 பாடசாலை மட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளும், 2 பங்குதாரர்கள் கலந்துரையாடல்களும், வீட்டிற்கு வீடு விழிப்புணர்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### விசேட முன்னேற்றங்கள் மற்றும் உற்பத்தி முன்னேற்ற ஊக்குவிப்புகள்

மேல் தெற்கு பிராந்திய சேவைகள் நிலையமானது உலக நீர் தினம் - 2023 னை முன்னிட்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட போட்டியில் தகவல் தொழில்நுட்பத்தில் முதல் இடத்தினை பிடித்துள்ளதுடன் தெஹிவளை நீர் பாதுகாப்பு திட்டமானது 3ம் இடத்தினை பெற்றது. மேல்மாகாணத்திற்கிடையில் போட்டிகளில் பாணந்துறை - கொறணை பிராந்திய முகாமையாளர் அலுவலகமானது 2ம் இடத்தினையும் கொரித்துட்டுவ களஞ்சியம் 2ம் இடத்தினையும் வட்டுவா பொறுப்பதிகாரி அலுவலகம் 3ம் இடத்தினையும் களுத்துறை பிராந்திய ஆய்வு கூடம் 3ம் இடத்தினையும் பெற்றிருந்தன. தெஹிவளை பாணந்துறை பிராந்திய ஆய்வு கூடமானது சிறப்பான உயிரியல் சோதனை மேற்கொள்வதற்குரிய இலங்கை அங்கீகார சபையின் ISO 17025 அங்கீகாரத்தினை வெற்றிகரமாக புதுப்பித்துள்ளது.

#### விசேட கவனம் பெற்ற ஏனைய செயற்பாடுகள்

தெஹிவளை அலன் அவனியூவில் 34 பேர்ச்சில் சட்டவிரோதமாக குடியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். பாணந்துறை கொறனை பிராந்திய முகாமையாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேச சபை வீதிகளில் புதிய இணைப்புக்கள் வழங்குவதற்கான புதிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களின் செயற்திறனை மதிப்பிடுவதற்கான புதிய குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன.

#### முறைமை மேம்பாட்டிற்கான திட்டமிடல்

களுத்துறை மாவட்டத்தில் நீர் விநியோக வலையமைப்பினை விஸ்தரிப்பதற்கான பாலிந்தநுவர நீர் விநியோகத்திட்டத்தின் முன் சாத்தியப்பாட்டு ஆய்வு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மேல் மாகாணம் - வடக்கு பிராந்திய சேவைகள் நிலையம்

#### நிர்வாக எல்லை

மேல் வடக்கு பிராந்திய சேவைகள் நிலையமானது மேல் வடக்கு பிராந்திய சேவைகள் நிலையம் மற்றும் முகாமையாளர் (களனி), முகாமையாளர் (கம்பஹா) ஆகிய இரண்டு பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களையும் கொண்டு கம்பஹா மாவட்டம் முழுமைக்குமான நீர் வழங்கல் செயற்பாடுகளுக்காக பொறுப்பாக உள்ளது.

#### விநியோக விரிவாக்கம்

மேல் வடக்கு பிராந்திய சேவைகள் நிலையமானது 2023 இல் களனிப் பிரதேசத்தில் 48 கிலோமீற்றரும் கம்பஹா பிராந்திய முகாமையாளர் ஆளுகைக்குட்பட்ட பகுதியினுள் 45 கிலோமீற்றர் குழாய் வலையமைப்பினை விரிவாக்கம் செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக 13000 புதிய நீரிணைப்புக்களை வழங்கி தற்போது 368,413 இணைப்புகளை மொத்தமாக கொண்டுள்ள நிலையில் தற்போது கம்பஹா மாவட்டமானது குழாய் வழி குடிநீர் வழங்கலில் 54% னை அடைந்துள்ளது.

#### நீரின் தரத்தினை உயர்த்துதல்

மேல் வடக்கு பிராந்திய சேவைகள் நிலையத்தினால் அறிக்கையிடல் காலப்பகுதியினுள் 119 மில்லியன் ரூபா செலவில் 25 கிலோமீற்றர் நீளமான குழாய் பதித்தல் மற்றும் மீள் உருவாக்க வேலைத்திட்டங்கள் முடிக்கப்பட்டன. நீர்க்கசிவுகளை வினைத்திறன் மிகு முறையில் கண்டு பிடிப்பதற்காக விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ரன்பொகுனவத்தை, கம்பஹா, ரத்தொலுகம, மற்றும் திவுலபிட்டிய ஆகிய இடங்களிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கொள்ளளவு திறன் மற்றும் நீர்த்தரம் ஆகியவற்றை மேம்படுத்தியமை. கந்தானை திட்டத்தின் கீழ் குழாய் பதிக்கும் வேலை 70% வரை பூர்த்தியடைந்துள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடனான திட்டத்தின் கீழ் 90 கிலோ மீற்றர் குழாய் பதிக்கப்பட்டமையால் மேலதிகமாக 1500 புதிய இணைப்புக்கள் வழங்க முடிந்தது.

#### வருமானமற்ற நீர் குறைப்பு

இந்த வருடம் முழுவதும் வருமானமற்ற நீர் அளவீடு தகுதிப்படுத்துவதற்குரிய நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதன் விளைவாக திவுலுப்பிட்டிய பகுதியில் 10% வருமானமற்ற நீர் குறைப்பு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் நீர் கசிவூடான விரயத்தை கண்டறியவும் அறிக்கையிடவும் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### வினைத்திறனான சக்தி நடவடிக்கைகள்

பியகம பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு சக்தி சேமிப்புக்குரிய நிதி ஒதுக்கீட்டிலிருந்து சூரிய சக்தியுடன் கூடிய மின் கலம் பொருத்தப்பட்டது.

#### கூட்டுச் சமூகப் பொறுப்பு

பொது நிறுவனங்கள், சமூக மட்ட நீர்வழங்கல் திட்டங்கள், தனியார் அமைப்புக்கள், மற்றும் பொதுக் கிணறுகளில் நீர்த் தர முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டன.

#### விசேட முன்னேற்றங்கள் மற்றும் உற்பத்தி முன்னேற்ற ஊக்குவிப்புகள்

பிராந்தியம் முழுவதற்குமான தகவல் தொழில்நுட்ப வலையமைப்புக் கட்டுமானத்தினை நிறுவியமையினால் குறித்த வருடத்திற்கான சிறந்த தகவல் தொழில்நுட்பத்தினை பேணும் அலுவலகங்களில் 2 ஆம் இடத்தினை பெற்றது. மேலும் பிராந்தியங்களிற்கான கணனி மயப்படுத்தல் முயற்சியில் நுகர்வோர் அமைவிடங்கள் 98 வீதமும் குழாய் வலையமைப்பு 92 வீதங்களும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன.

#### பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

உத்தியோகத்தர்களுக்கான 21 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

#### விசேட கவனம் பெற்ற ஏனைய செயற்பாடுகள்

நீர்கொழும்பு பொறுப்பதிகாரி அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதால், வாடகைக் கட்டிடத்தில் இருந்து புதிய வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2021-2030 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான துப்பரவேற்பாட்டிற்கான நோக்கங்கள் கம்பஹா மாவட்டத்தில் வினைத்திறனான அமுலாக்கத்தின் காரணமாக அவை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

## மேல் மாகாணம் பிராந்திய சேவைகள் நிலையம் - உற்பத்தி பிரிவு

#### உட்கட்டமைப்பு

மேல்மாகாண உற்பத்தி பிராந்திய சேவைகள் நிலையமானது அம்பத்தலை, லபுக்கம, களத்துவாவ, பியகம, பம்புக்குளிய, கந்தானை, கெத்கேன, நவகமுவ (சிகோ), அட்டங்கல ஆகிய 09 இடங்களில் மேல் மாகாண குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்கின்றது. மேல்மாகாண உற்பத்தி பிராந்திய சேவைகள் நிலையத்தின் உற்பத்தி நாளொன்றிற்கு நாடுபூராவுமான மொத்த உற்பத்தியின் 50 வீதத்தினை உற்பத்தி செய்கின்றது. அதாவது மொத்த உற்பத்தி நாளொன்றிற்கு 1.27 மில்லியன் கன மீற்றர் ஆகும்.

#### திறன் மேம்பாடு

கோலேமோதரையில் அமைக்கப்பட்ட புதிய நீர் அகத்துறிஞ்சும் அமைப்பினால் நீர்த்தரத்தில் உவர்த்தன்மை காணப்பட்டமையினால் 2022 இல் கெத்தகேன நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவானது நாளொன்றிற்கு 53,000 கன மீற்றரிலிருந்து 74,000 கன மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டது.

அம்பத்தலயின் கொள்ளளவினை நாளொன்றிற்கு 50000 கன மீற்றராலும் வெலிவிட்ட நீர்ச் சுத்திகரிப்பு ஆலையினை 180,000 கன மீற்றராலும் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டது. இந்த ஏற்பாடானது மேல்மாகாணத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதுடன் பெருகிவரும் நீர்த் தேவையினையும் நிவர்த்தி செய்யவும் பொருத்தமாக இருக்கும்.

### சக்தி வினைத்திறன் நடவடிக்கைகள்

அம்பத்தலை நீர் வழங்கல் மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்புத் திட்டமானது வினைத்திறனான சக்தி மற்றும் சிறப்பான செயற்பாட்டினை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டது. அதாவது பழைய பம்பிகளை மாற்றுதல், பரிமாற்ற குழாய்கள் மற்றும் வால்வுகளை நிறுவுதல் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதற்காக மீள் சுத்திகரிப்பு செய்தல் மற்றும் வெளியேறும் நீர் சுத்திகரிப்பு போன்றவற்றை அமைத்தல் என்பவற்றினை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

### விநியோக வலையமைப்பு மற்றும் தொடர் நீர் வழங்கல்

மேல்மாகாண உற்பத்தி பிராந்திய சேவைகள் நிலையமானது மேல் மத்தி, மேல் வடக்கு, மேல் தெற்கு ஆகிய 3 பிராந்திய சேவைகள் நிலையத்தினூடாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகள் ஆகியவற்றிற்கு நீர் வழங்கல் சேவையினை மேற்கொள்கின்றன. நீர் வழங்கல் செயற்பாட்டினையும் அதன் பாதுகாப்பினையும் உறுதி செய்து கொள்வதற்காக நான்கு முகாமையாளர்களினால் மேற்பார்வைசெய்யப்படுகின்றது.

### தரச் சான்றிதழ்கள்

அம்பத்தளை, பியகம மற்றும் பம்புக்குளிய என்ற பெயருடைய மூன்று நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதிகளும் ISO 9001 - 2015 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழைப் பெற்றிருந்தது. கந்தானை நீர் சுத்திகரிப்பு நிலைய ஆய்வு கூடமானது 12 அளவுருக்கள் அடங்கிய இரசாயன சோதனையில் ISO 17025 - 2017 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழை 15.11.2023 பெற்றிருந்தது. அம்பத்தளை மற்றும் பியகம நீர் சுத்திகரிப்பு பொறிமுறை ஆய்வு கூடமானது ISO 17025 - 2017 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழைப் பெற்றிருந்தது.

### நீர்ப் பாதுகாப்பு திட்டங்கள்

தொடர்ச்சியான பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக நீர்ப்பாதுகாப்பு திட்டமானது 07 நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் அமுல்படுத்தப்பட்டது. 2023 ல் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் வெளிவாரி கணக்காய்வு செய்யப்பட்ட லபுகம, களத்துவாவ, பம்புக்குளிய, கெத்கேன நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகள் மிக நன்று இடத்தை பெற்றிருந்தது.

### ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறைமை

சகல சுத்திகரிப்பு தொகுதிகள், களஞ்சியம், சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டு திறனை மேம்படுத்த ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட்டது. வருடாந்த சொத்து கணக்கெடுப்பு சரிபார்க்கையினூடாக சொத்துக்கள் முகாமைத்துவம் முன்னேற்றமடைந்துள்ளது. குளோரின் அளவுகள் இரண்டாம் நிலை குளோரினுடன் பராமரிக்கப்படுவதனால் மாதாந்த குளோரின் பாவனையில் குறிப்பிடத்தக்க குறைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் குளோரின் பாவனைக்கான மாதாந்த செலவில் கிட்டத்தட்ட 60.8 மில்லியன் ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

### மீள்நிர்மாண வேலைகளின் முன்னேற்றம்

மீள்நிர்மாண வேலைகளிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட 47 மில்லியன் ரூபா செலவில் கந்தானை நீர் சுத்திகரிப்பு தொகுதியிலிருந்து பாணந்துறைக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை காவும் பாரிய குழாய் தொகுதியானது தும்மோட்டறைக்கு அருகிலுள்ள பொல்கொட ஆற்றிற்கு குறுக்காகவுள்ள பாலத்தினூடாக குழாய் போடப்பட்டது. இதற்கு மேலாக ஒதுக்கப்பட்ட 125 மில்லியன் ரூபாவில் 114 மில்லியனுக்குரிய மீள்நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

### ஏனையவை

கடுவலையிலிருந்து வெல்லம்பிட்டிய வரையான பழைய குழாய்களை அகற்றி நீர் வழங்கல் சேவையினை பிராந்திய சேவை நிலையம் நீக்கம் செய்ய அனுமதி வழங்கியமையால் 2023ல் கொடவத்தயிலிருந்து கடுவெல வரையான பிரதான மற்றும் விநியோக குழாய் வலையமைப்பினை மாற்றியமைப்பதற்கான திட்டமானது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இந்த முயற்சியானது குறைந்த மட்ட வீதிகளில் நீர்க் கசிவினை குறைக்கவும் வருமானமற்ற நீர் குறைப்பிற்கும் ஏதுவாக இருந்தது. மேலதிகமாக வறட்சி காலங்களில் அம்பத்தளை நீர் அகத்துறிஞ்சும் அமைப்பிற்கு உவர்நீர் உட்புகாமல் இருப்பதற்காக அம்பத்தளையில் களனி ஆற்றை குறுக்கறுத்து உவர்நீர்த்தடுப்பணை அமைக்கப்பட்டது.

## பிராந்திய சேவைகள் நிலையம் தெற்கு

### நிர்வாக எல்லை

தெற்கு பிராந்திய சேவைகள் நிலையமானது பிராந்திய சேவைகள் நிலையம் தெற்கு அலுவலகம் மற்றும் தென் மாகாணம் முழுவதையும் கூட்டாக இணைந்து செயற்படுகின்றதும் மற்றும் தென்மாகாணத்தின் முழுதானான நிலப்பரப்பையும் உள்ளடக்கியதும் அத்துடன் முகாமையாளர் (காலி), முகாமையாளர் (மாத்தறை), மற்றும் முகாமையாளர் (ஹம்பாந்தோட்டை) ஆகிய 03 முகாமையாளர் அலுவலங்களையும் கொண்டுள்ளது.

### நீர் விநியோக விரிவாக்கம்

திறன் மேம்பாடு மற்றும் நீர் விநியோக வலையமைப்பு விரிவாக்கல் ஊநுனுநு திட்டத்தின் கீழ் தென் மாகாணத்தில் 73.4 கிலோமீற்றர் நீளமான குழாய் பதிக்கப்பட்டது. அத்துடன் உலக வங்கி நிதியுதவியுடனான நீர் வழங்கல் மற்றும் சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாத்தறை பிரதேசத்தில் 134.8 கிலோ மீற்றர் நீளமான குழாய் பதிக்கப்பட்டது. தென் மாகாணத்தில் காலியில் 12.4 கிலோமீற்றரும் ஹம்பாந்தோட்டையில் 73.2 கிலோமீற்றரும் மாத்தறையில் 37.8 கிலோமீற்றருமாக மொத்தமாக 123.4 கிலோமீற்றர் நீளமான குழாய்கள் சமூகமட்ட மக்கள் பங்களிப்புடன் பதிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக பிராந்திய சேவைகள் நிலையம் தெற்கு அலுவலக பிரிவினால் 331.6 கிலோமீற்றர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது.

### நீரின் தரத்தினை உயர்த்துதல்

தெனியாய நீர் வழங்கல் திட்டத்தில் நீரத்தரப் பிரச்சினை கண்டறியப்பட்டதுடன் உடனடியாக அதனை தீர்க்கின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்ததுடன் நீரேந்து பிரதேச கொள்ளளவினை அதிகரிக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவை 2024 ல் நிறைவேற்றப்படும் வகையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### வருமானமற்ற நீர் குறைப்பு

வருமானமற்ற நீர் குறைப்பினை நோக்காகக்கொண்டு 14.15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதனூடாக வேலைத்திட்டடங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் சிறந்த மூலோபாயங்களை அடிப்படையாகக்கொண்ட திட்டங்களூடாக வருமானமற்ற நீர்க்குறைப்பினை குறைப்பதற்கான அடிப்படையில் இனிவரும் முதலீடுகள் அமையும் வண்ணம் செயற்பாடுகள் திட்டமிடப்படுள்ளன.

### வினைத்திறனாற்றல் மற்றும் சக்தி மேம்பாட்டு நடவடிக்கைகள்

சக்தி சேமிப்பின் ஒரு பகுதியாக மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை பிராந்தியங்களில் சூரிய சக்தியுடன் கூடிய மின்சக்தி பிறப்பாக்கி பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் வருடாந்த செலவு மிகுதியானது 73 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அம்பாந்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சக்தி கணக்காய்வினூடாக அடையாளங் காணப்பட்ட “நோனாகம” வில் காணப்பட்ட குறைந்த செயற்திறன்கொண்ட பம்பிகள் 2024 இல் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

#### பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

பிராந்திய சேவைகள் நிலையத்திற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 32 தொழில்நுட்பம் சார் மற்றும் தொழில்நுட்பம் சாரா பயிற்சிகள் நடாத்தப்பட்டன. குறித்த இப் பயிற்சிகளில் "5S" கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளும் அத்துடன் காலி மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்தியங்களுக்காக நீர்ப்பாதுகாப்பு திட்டம் தொடர்பான பயிற்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

#### விசேட கவனம் பெற்ற ஏனைய செயற்பாடுகள்

மீள்கட்டுமான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 272 மில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. அலுவலக கட்டட கட்டுமானம் மற்றும் புனர்நிர்மாணம் உட்பட இயந்திரவியல் மின்னியல் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல், நீர்ச்சுத்திகரிப்பு நிலைய மேம்பாடு, நீர் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி உள்ளடங்கலாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### முறைமை மேம்பாட்டிற்கான திட்டமிடல்

மாத்தறை நீர் வழங்கல் திட்டம் பகுதி 4 ஊடாக 3 பாரிய நீர் பரிமாற்றக் குழாய் தொகுதி பூர்த்தி செய்யப்பட்டதுடன் மலிம்பட, வெலிகம, கரகொட, உயங்கொட ஆகிய பிரதேசங்களுக்கு நீரிணைப்பு இணைப்பு சேவைகள் விரிவுபடுத்தப்பட்டன. அத்துடன் முக்கிய 03 நீர் உள்வாங்கு பிரதேச அமைப்புக்களின் நிலையான தடங்கலற்ற செயற்பாட்டிற்காக நில்வள ஆற்றில் உவர்நீர் உட்புகுகையைத் தடுக்கும் நோக்கில் உவர் நீர் தடுப்பணை அமைக்கப்பட்டது. "லுணுகம்வேகர' நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் குறுகிய கால அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டு அதனொரு பகுதி ஆரம்பித்தமையால் குறித்த பகுதியில் இணைப்புகளின் விஸ்தரிப்பு மற்றும் சேவை மேம்பாடு உருவாக்கப்பட்டது. இதன் மீதி செயற்பாடுகள் மற்றும் கொள்வனவுகள் 2024 இல் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## பிராந்திய சேவைகள் நிலையம் கிழக்கு

#### நிர்வாக எல்லை

கிழக்கு மாகாணத்திற்கான பிராந்திய சேவைகள் நிலையமானது பிரதிப் பொது முகாமையாளரின் நிர்வாகத்தின் கீழ் இரு உதவிப் பொதுமுகாமையாளரினால் (கிழக்கு - வடக்கு • கிழக்கு - தெற்கு) என்ற அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திற்கான செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் திருகோணமலை, அம்பாறை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு ஆகிய நான்கு பிராந்திய முகாமையாளர்களினால் முகாமை செய்யப்படுகின்றது.

#### நீரிணைப்பு விநியோக விரிவாக்கம்

2023 ஆம் ஆண்டில் 2421 புதிய இணைப்புகளை வழங்கவதற்காக 71.62 கிலோமீற்றர் நீளமுடைய விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டன. குறிப்பாக மட்டக்களப்பில் 22 கிலோமீற்றரும் திருகோணமலையில் 2.6 கிலோமீற்றரும் அக்கரைப்பற்றில் 18.7 கிலோமீற்றரும் அம்பாறையில் 28.1 கிலோமீற்றர் நீளமானதுமான குழாய்கள் பதிக்கப்பட்டன.

திறன் மேம்பாடு மற்றும் விநியோக விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 2581 புதிய இணைப்புகளை வழங்குவதற்காக மட்டக்களப்பில் 75.24 கிலோமீற்றரும் திருகோணமலையில் 41 கிலோமீற்றரும் அக்கரைப்பற்றில் 5.89 கிலோமீற்றரும் அம்பாறையில் 9.3 கிலோமீற்றர் உள்ளடங்கலாக மொத்தமாக 131 கிலோமீற்றர் நீளமான குழாய்கள் பதிக்கப்பட்டன.

#### நீர் தரத்தினை உயர்த்துதல்

2023 இல் மொத்தமாக 6,477 இரசாயண மற்றும் உயிரியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்ததுடன் நீர்ப்பாதுகாப்புத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பிராந்திய நிலையங்களுக்கு இலக்கு வழங்கப்பட்டது.

#### வருமானமற்ற நீர் குறைப்பு

திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை பகுதிகளில் புதிய இணைப்புகளுக்காக PE குழாய்களை பொருத்தி இணைப்புகள் நிறுவப்படுவதுடன் ஏற்கனவே மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள காணப்பட்ட PVC குழாய் பொருத்தப்பட்ட இணைப்புகள் யாவும் PE குழாயிற்கு மாற்றப்பட்டன. 2023 ம் ஆண்டிற்கான வருமானமற்ற நீரானது 18.5 வீதமாக காணப்படுகின்றது. இதனை 2024 ல் 16.63 வீதமாக குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருமானமற்ற நீர்ப்பாவனையைக் குறைப்பதற்காக சட்டவிரோதமான இணைப்புகள், மானி முறைகேடுகள் போன்றவற்றை கண்டறிவதுடன் வீட்டு மற்றும் வணிக இணைப்புகளை சரிசெய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. குறைபாடுள்ள மானிகள் மாற்றப்பட்டன. நீர்க்கசிவுள்ள மானிகள் சரிசெய்யப்பட்டதுடன் சட்ட விரோதமான இணைப்புகளுக்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

#### வினைத்திறனாற்றல் செயற்பாடுகள் மற்றும் சக்தி மேம்பாட்டு நடவடிக்கைகள்

மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் அலுவலகத்திலும் திருகோணமலை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலும் சூரிய சக்தி மின்கலம் பொருத்தப்பட்டமை, நிந்தவூர் பம்பி நிலையத்தில் பதிய பம்பி பொருத்தப்பட்டமை ஆகிய செயற்பாடுகள் வினைத்திறனுடன் கூடிய மின்சக்தி பாவனை உறுதி செய்யக்கூடிய நடவடிக்கையாகக் காணப்படுகின்றது.

#### சொத்து செயற் திறன் நடவடிக்கை

இருப்பு மேற்பார்வைக்குழு 2023 இல் ஏறத்தாழ 182.36 மில்லியன் ரூபா பெறுமதியான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை கண்டறிந்து அவற்றை தேவைப்பாடுள்ள ஏனைய பிராந்தியங்களுக்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## பிராந்திய சேவைகள் நிலையம் ஊவா

#### நிர்வாக எல்லை

ஊவா பிராந்திய சேவைகள் நிலையமானது ஊவா பிராந்திய சேவைகள் தலைமை காரியாலயம் மற்றும் முகாமையாளர் (பண்டாரவளை), முகாமையாளர் (மொனராகலை) ஆகிய 02 பிராந்திய முகாமையாளர் காரியங்களையும் உள்ளடக்கி ஊவா மாகாணம் முழுவதுமான செயற்பாட்டினை வழங்குகின்றது. அத்துடன் மகியங்கணை நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கும்புக்கணை நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆனது ISO 9001 - 2005 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழைப் பெற்றமை குறிப்பிடத்தக்க பாராட்டுக்குரியது.

#### விநியோக விரிவாக்கம்

ஒப்பந்தங்கள் ஊடாகவும் சமூகமட்ட குழுக்களின் பங்களிப்புடனும் குறிப்பிடத்தக்க குழாய் பதித்தல் ஊடாக விநியோக விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது. கிட்டத்தட்ட 30.2 கிலோமீற்றர் நீளமான குழாய் சமூக பங்களிப்புடன் பதிக்கப்பட்டமையால் 595 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன.

#### நீர் தரம் உயர்த்துதல்

ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து நீர் வழங்கல் திட்டங்களுக்கும் நீர் பாதுகாப்புத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் 21 நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர் பாதுகாப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2023 ல் மகியங்கனை நீர் வழங்கல் திட்டத்திற்கான வெளிவாரி கணக்காய்வும் 06 உள்ளக கணக்காய்வும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

#### வருமானமற்ற நீர் குறைப்பு

வருமானமற்ற நீர்ப் பாவனையை முகாமை செய்வதற்காக இரவு நேர நீர்க் கசிவு ஆய்வுகள், நீர் மானிகளை சீர் செய்தல் அல்லது மாற்றுதல் மற்றும் பூச்சிய நிலையிலுள்ள நீர்ப்பட்டியலை சரிபார்த்தல் மற்றும் இணைப்புக்களை துண்டித்தல் போன்ற நடவடிக்கைகள் இரு பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டன.

#### வினைத்திறனாற்றல் செயல்பாடுகள் மற்றும் சக்தி மேம்பாட்டு நடவடிக்கைகள்

ஊவா பிராந்திய சேவைகள் நிலையமானது 2023 இல் வருமானமற்ற நீர்க் குறைப்பிற்காக ஒதுக்கப்பட்ட 287 மில்லியன் ரூபா நிதியிலிருந்து பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 120 ஒப்பந்தங்களினூடாக அவசர நிலையில்

கோரப்பட்ட மீள்நிர்மாண செயற்பாடுகளை மேற்கொண்டது. இவ் ஒப்பந்தங்கள் பிராந்தியம் முழுவதையும் உள்ளடக்கியதான நீர் வழங்கல் திட்ட புனரமைப்பு பிரதான நீர் பரிமாற்ற குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் மாற்றுதல் மற்றும் பொறுப்பதிகாரிகளுக்கான அலுவலக மேம்பாடு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் மேம்பாடு போன்றவற்றை உள்ளடக்கியது. இவற்றில் பெரும்பாலான வேலைத்திட்டங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் சில வேலைத்திட்டங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்துடன் 2023 ம் ஆண்டில் 7532 புதிய இணைப்புக்களை வழங்கியமையூடாக ஊவா மாகாணத்தின் 2023 ம் ஆண்டிற்கான இலக்கில் 96 வீதத்தினை பூர்த்தி செய்துள்ளமை மிகப்பெரிய சாதனையாகும்.

## பிராந்திய சேவைகள் நிலையம் மத்தி

**நிர்வாக எல்லை**

பிராந்திய சேவைகள் நிலையம் (மத்தி) அலுவலகத்தையும், முகாமையாளர் (மத்தி-தெற்கு), முகாமையாளர் (மத்தி-கிழக்கு) மற்றும் முகாமையாளர் (மத்தி-வடக்கு) என மூன்று பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களையும் கொண்டுள்ளது. மத்திய மாகாணம் முழுவதற்குமாக 38 நீர் வழங்கல் திட்டங்கள் இயக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது.

**நீர் விநியோக விரிவாக்கம்**

பிராந்திய சேவைகள் நிலையம் மத்தியானது சமூக மக்களின் பங்களிப்புடன் 35.3 கிலோமீற்றர் நீளமான விநியோக குழாய்களைப் பதித்து 1100 புதிய நீரிணைப்புக்களை வழங்கியுள்ளது.

**நீர் தரம் உயர்த்துதல்**

நீர்ப்பாதுகாப்புத் திட்டமானது தற்போது நடைமுறையிலுள்ள அபிவிருத்தி திட்டங்கள், கணக்காய்வுகள், இணக்க முகாமைத்துவம் மற்றும் ஏனைய முயற்சிகள் போன்றவற்றின் மூலம் 99 வீதமான முன்னேற்ற அடைவினை அடைந்துள்ளது. பாததும்பர நீர் வழங்கல் திட்டத்திற்கான வெளியக கணக்காய்வு குறித்த திட்டத்திற்கான நீர்ப்பாதுகாப்பு திட்டத்தின் சிறந்த அமுல்படுத்தலை உறுதி செய்தது.

**வருமானமற்ற நீர் குறைப்பு**

56 கண்ணுக்கு புலப்படாத நீர்க் கசிவுகள் 41649 பிரதான மற்றும் சிறிய கசிவுகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் வருமானமற்ற நீர் குறைப்பிற்கான அலகு சோதனை ஆய்வுகள் மாத்தளை நீர் வழங்கல் திட்டத்திற்கூடாக மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மொத்த நீர் மானிகளுக்கான அளவீடுகள் மற்றும் இரவு நேர கசிவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

**வினைத்திறனாற்றல் செயற்பாடுகள் மற்றும் சக்தி மேம்பாட்டு நடவடிக்கைகள்**

வினைத்திறனான சக்தி சேமிப்பிற்காக 112.0 மில்லியன் பெறுமதியான திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. அவற்றில் 02 திட்டங்கள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்**

பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையம் ISO 9001 - 2015 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழைப் பெற்றுள்ளது. உற்பத்தித்திறனை மேம்படுத்தும் முயற்சிகளுக்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் ISO பயிற்சி நெறி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கழிவு நீர் முகாமை**

மாத்தளை, பாததும்பர, நாவலப்பிட்டி, மற்றும் நுவரெலியா கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டமிடல் மற்றும் வடிவமைத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**விநியோக பிரதேச விரிவாக்கம்**

“லக்கல” மகாவலி நீர் வழங்கல் திட்டத்தினையும் நுவரெலியா மாநகர சபை நீர் வழங்கல் திட்டத்தினையும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்குரிய சபையின் அனுமதி பெறப்பட்ட அதே நேரம் அம்பேவெல மற்றும் அங்கெலிபிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்குரிய திட்ட அனுமதியானது அனுமதிக்குழுவின் சிபாரிசிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**விசேட கவனம் பெற்ற ஏனைய செயற்பாடுகள்**

நவயலதென்ன குழாய் பாலத்தை மாற்றுதல், பொல்கொல்ல நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு புதிய தடுப்பு பலகைகளை நிறுவுதல், பொல்கொல்ல றுவீ மற்றும் ஹந்தான நீர் வழங்கல் திட்டங்களுக்கான மறுசீரமைப்புக்கான முயற்சிகள் உட்பட பல உட்கட்டமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலவாக்கலையில் நீர் அழுத்தத்தை சரிசெய்தல், நீர் உள்வாங்கு பிரதேச அபிவிருத்தி மற்றும் கூடுதல் முயற்சிகள். மேலும், ரம்புக்பிட்டிய, வெரல்ல, எரியகம, மெடதும்பர மற்றும் மாத்தளை விநியோகப் பகுதிகளில் குழாய் பதிக்கும் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும், புகார் முகாமைத்துவம், இருப்பு முகாமை, இருப்பு சரிபார்ப்பு மற்றும் கொள்முதல் செயல்முறைகளை நெறிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படடன. 7,259 இரசாயன மற்றும் 6,919 நுண்ணுயிரியல் அளவுரு சோதனைகளை உள்ளடக்கிய நீர் தர சோதனை, பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்துள்ளது. மேலும், நீர்நிலை ஆய்வுகள், கிணறு நிர்மாணங்கள், அபிவிருத்தி மற்றும் பம்மி பழுதுபார்த்தல், நிலையான நீர் வள முகாமைத்துவம் ஆகிய செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஜனசது சேவா தடகள போட்டியில் மத்திய மாகாண தடகள அணியின் சிறந்த விளையாட்டு செயற்பாடுகள் மற்றும் சமூக ஈடுபாடு ஆகிய விடயங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

## பிராந்திய சேவைகள் நிலையம் வடமேல் பிராந்தியம்

**நிர்வாக எல்லை**

வடமேல் பிராந்திய சேவைகள் நிலையமானது பிராந்திய சேவைகள் அலுவலகம் மற்றும் முகாமையாளர் (குருநாகல்) மற்றும் முகாமையாளர் (புத்தளம்) ஆகிய இரண்டு பிராந்திய முகாமையாளர் அலுவகங்களினால் வட மேல் மாகாணம் முழுவதற்கும் நீர்வழங்கல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**நீரிணைப்பு விநியோக விரிவாக்கம்**

பல்வேறுபட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மொத்தமாக 186.50 கிலோமீற்றர் விநியோகக் குழாய்கள் பதிக்கப்பட்டன. அனைவருக்கும் நீர்" திட்டத்தினூடாக 225 மிமி, 150 மிமி, 90 மிமி, 63 மிமி குழாய்கள் என 57 கிலோமீற்றர் வரை பதிக்கப்பட்டுள்ளது.

**நீர் தரத்தினை உயர்த்துதல்**

தங்கொட்டுவை நீர் வழங்கல் திட்டத்தில் காணப்பட்ட நீர்த்தரம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. புத்தளம் மாவட்டத்திலுள்ள 8 நீர் வழங்கல் திட்டங்களில் 7 திட்டங்களுக்கு நீர்ப்பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிங்கிரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வெளிவாரி கணக்காய்வினால் சிறந்த பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. குருநாகலிலுள்ள 22 நீர் வழங்கல் திட்டங்களில் 07 திட்டங்களுக்கான நீர் பாதுகாப்பு திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. அத்துடன் கிரியுள்ள நீர் வழங்கல் திட்டத்திற்கு வெளிவாரி கணக்காய்வினால் பாராட்டு வழங்கப்பட்டுள்ளது.

**வருமானமற்ற நீர் குறைப்பு**

வருமானமற்ற நீர்க் குறைபிற்கான ஒதுக்கீட்டின் கீழ் 45 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கான கேள்வி பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**வினைத்திறனாற்றல் மற்றும் சக்தி மேம்பாட்டு நடவடிக்கைகள்**

செயற்திறன் குறைந்த பம்பிகளை மாற்றி அமைப்பதற்காக சக்தி சேமிப்புத் திட்டத்தின் கீழ் 3 திட்டங்கள் (வென்னொருவேவ நீர் உள்ளெடுக்கும் பம்பி அபிவிருத்தி, ரகமத் நகர் உயர் பம்பி முறைமை அபிவிருத்தி, கல்கமுவ நீர் உள்ளெடுக்கும் பம்பி அபிவிருத்தி) ஆகியவை நிறைவேற்றப்பட்டன. வருடத்திற்கு 8.7 மில்லியன் ரூபா சக்தி சேமிப்பினை அடிப்படையாகக் கொண்டு 39.5 மில்லியன் ரூபா செலவில் முழு திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த திட்டங்களுக்கான ஒப்பந்தம்

வழங்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து வேலைகளும் 2024 ல் நிறைவு செய்வத்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**சொத்து செயற்திறன் நடவடிக்கைகள்**

பயன்படுத்த முடியாத சொத்துக்கள் யாவும் ஏலத்தில் விடப்பட்டமையால் வடமேல் பிராந்திய சேவைகள் நிலையத்தின் பயன்படுத்தாத சொத்துக்களின் மதிப்பு குறைந்துள்ளது.

**கூட்டுச் சமூகப் பொறுப்பு**

குருநாகலை மாவட்டத்தில் 5 பாடசாலைகளிற்கும் 1 சுகாதார நிலையத்திற்கும் புத்தளம் மாவட்டத்தில் 5 பாடசாலைகளிற்கும் 4 சுகாதார நிலையத்திற்கும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை மேற்கொள்வதற்காக 2 ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த ஒப்பந்தங்கள் இரண்டும் முறையே 15.00 மில்லியன் ரூபா 24.00 மில்லியன் ரூபா பெறுமதியில் காலநிலை சீரமைப்பு ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்துவ திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த திட்ட அமுலாக்கல் 2024 ம் ஆண்டுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது.

**கழிவு நீர் முகாமைத்துவ செயற்பாடுகள்**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை 67 புதிய கழிவு நீர் இணைப்புக்களை வழங்கியமையினூடாக 13.50 மில்லியன் ரூபாவினை பெற்றுள்ளது. வடமேல் பிராந்திய சேவைகள் நிலையத்தின் நீர் சீராக்கல் பிரிவு பல்வேறு வடிவமைப்புக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதுடன் குறிப்பாக இப்பாகமுவ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குரிய கழிவு சுத்திகரிப்பு ஆலை அபிவிருத்தி, மாவத்தகம முதலீட்டு சபைக்கான கழிவு சுத்திகரிப்பு ஆலை, குறைந்த வருமானம் கொண்ட வீடுகளுக்கான கழிவு நீர் முகாமைத்துவ முறைமை, கொக்கரல்ல ஆதார வைத்தியசாலைக்கான கழிவு நீர் முகாமைத்துவத்தினை நிறுவுதல், பொல்காவலையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கான கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையினை நிறுவுதல் போன்றவற்றினை மேற்கொண்டுள்ளது.

**நிலத்தடி நீர் ஆய்வு**

07 புதிய குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டதுடன் 29 குழாய் கிணறுகளுக்கான சுத்தப்படுத்தல் உள்ளடங்கலாக மொத்தமாக 28 நீர்வளவியல் ஆய்வுகள் நிறைவேற்றப்பட்டன. மேலதிகமாக 04 குழாய் கைப்பம்பிகள் பழுதுபார்த்தல் மற்றும் மீளமைத்தல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

**விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்**

கடந்த வருடத்தில் ஏற்பட்ட அதிகூடிய வெப்பம் காரணமாக கெட்டிப்பொல நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர் மூலமானது பற்றாக்குறையாகவுள்ளமையால் புதிய நீர் மூலமொன்றினை அடையாளங்காண வேண்டிய தேவையானது மிக முக்கிய ஒன்றாகக் கருதப்படுகின்றது.

**முறைமை மேம்பாட்டிற்கான திட்டமிடல்**

திறன் விருத்தி மற்றும் விநியோக விஸ்தரிப்பிற்கான திட்டத்தின் கீழ் 645.00 ரூபா மில்லியன் பெறுமதியான வடிவமைப்பு மற்றும் கேள்விப் பத்திரம் தயாரித்தல் வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.

## பிராந்திய சேவைகள் நிலையம் சப்ரகமுவ

**நிர்வாக எல்லை**

சப்ரகமுவ பிராந்திய சேவைகள் நிலையமானது சப்ரகமுவ பிராந்திய சேவைகள் அலுவலகம் மற்றும்முகாமையாளர் (இரத்தினபுரி), முகாமையாளர் (கேகாலை) ஆகிய இரண்டு முகாமையாளர் அலுவலகங்களையும் கொண்டு சபரகமுவ மாகாணத்தில் 150,000 நீரிணைப்புக்களை முகாமை செய்து வருகின்றது.

**நீர் தரம் உயர்த்துதல்**

நீர்ப்பாதுகாப்புத்திட்டத்தின் ஒரு பகுதியாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மரநடுகை செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. 08 திட்டங்களுக்கான நீர்ப்பாதுகாப்புத்திட்டஉள்ளக கணக்காய்வு நிறைவுசெய்யப்பட்டதுடன் 01 திட்டத்திற்காக முறையான வெளிவாரி கணக்காய்வு பூர்த்தியாக்கப்பட்டது.

**வருமானமற்ற நீர் குறைப்பு**

வருமானமற்ற நீர்க்குறைப்பிற்காக பிராந்திய சேவைகள் நிலையத்தில் குழாய் பதித்தல் தொடர்பான விடயங்கள் இலக்கு வைக்கப்பட்டது. பிராந்திய சேவைகள் நிலையத்தில் வருமானமற்ற நீர்க் குறைப்பானது 1 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சொத்து செயல்திறன் நடவடிக்கைகள்**

சொத்து நிலைமைகளை குறைப்பதற்கு சொத்து முகாமைத்துவ முறைமை தொகுதி அனைத்து களஞ்சியங்களிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதுடன் மெய்நிகர் திறன்களினூடாகவும் ஒருங்கமைக்கப்பட்டது. இந்த முயற்சியினால் வருடாந்த சொத்தின் மொத்த பெறுமதி 386.00 மில்லியன் ரூபாவாக மாற்றப்பட்டது.

**விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பிற செயற்பாடுகள்**

நீர் வழங்கல் திட்டத்தின் குழாய் வலையமைப்பின் வரைபடம் வேலை நிறைவடையும் நிலையிலுள்ளது. நுகர்வோர் அமைவிட வரைபடம் தயாரித்தல் அண்ணளவாக 75 வீதம் நிறைவு பெற்றுள்ளது. அதற்கு மேலதிகமாக 4 திட்டங்களுக்கான வலையமைப்பு மாதிரி பகுப்பாய்வு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற நிதியில் கேகாலை மீள்குடியேற்ற திட்டம் கிட்டத்தட்ட 30.02 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டது. பலதரப்பட்ட பகுதிகளுக்கு கள விஜயம் மேற்கொண்டு அபாயங்களை கண்டறியவும் அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கவும் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

## பிராந்திய சேவைகள் நிலையம் வடக்கு

**நிர்வாக எல்லை**

வடக்கு பிராந்திய சேவைகள் நிலையமானது யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கியத்துடன் அவற்றிற்கான நீர் வழங்கல் செயற்பாட்டு முகாமைத்துவ நடவடிக்கை மற்றும் வணிக நடவடிக்கைகளை இரண்டு பிராந்திய முகாமையாளர் பிரிவுகளிற்கூடாக நிர்வகிக்கின்றது. வடக்கு மாகாணமானது கிட்டத்தட்ட 1.27 மில்லியன் மக்கள் தொகையை கொண்டுள்ள நிலையில் 50,860 குழாய் வழி நீர் வழங்கல் இணைப்புகளையே கொண்டுள்ளது. இது வட மாகாண சனத்தொகையின் 14.73 வீதமாகும். அத்ததுடன் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களூடாக 1.73 வீதமான நீர் வழங்கலானது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

**விநியோக விரிவாக்கம்**

வருமானமற்ற நீரை நிவர்த்தி செய்ய 25.74 கிலோ மீற்றர் குழாய் வலையமைப்பு விரிவாக்கம் செய்யப்பட்டது.

**நீர் தரத்தினை உயர்த்துதல்**

இரண்டு பிராந்திய ஆய்வு கூடங்களும் இரசாயண பரிசோதனைக்காகவும் நடைமுறையிலுள்ள நுண்ணியல் பரிசோதனைக்காகவும் ISO/IEC/ 17025:2017 ற்கு தரமுயர்த்தப்பட்டு மதிப்பிடப்பட்டது. 18 நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர்ப்பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**வினைத்திறனான சக்தி நடவடிக்கைகள்**

இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் 120 ரூபா மில்லியன் செலவில் RC, RH, Energy, மற்றும் O&M நிறைவேற்றப்பட்டன. வடக்கு பிராந்திய சேவைகள் நிலையத்தில் 0.5 ஆறு வலுவுடைய சூரிய மின்கலம் பொருத்தப்பட்டமையால் வருடாந்தம் 16 மில்லியன் ரூபா சேமிக்கப்படுகின்றது.

**உற்பத்தி முன்னேற்ற ஊக்குவிப்புகள்**

2023 ம் ஆண்டிற்கான சர்வதேச நீர்த்தினத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பேராறு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நீர்ப்பாதுகாப்பு திட்டமானது தேசிய ரீதியில் 1வது இடத்தை பெற்றுள்ளது. மேலும் சமூக மக்களின் பங்களிப்புடன் குழாய் பதித்தலில் வவுனியா மாவட்ட அலுவலகம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினையும் பிராந்திய மட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

#### நிலத்தடி நீர் ஆய்வு

பிராந்தியத்திற்கான நீர் வளத்தினை மேம்படுத்த 8 உற்பத்திக் குழாய்க்கிணறுகள் 22 நீர் வளவியல் ஆய்வுகள் 18 உற்பத்திக் கிணறு அபிவிருத்திகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

#### விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பிற செயற்பாடுகள்

நெளுக்குளம் நீர் வழங்கல் திட்டம், புதுக்குடியிருப்பு நீர் வழங்கல் திட்டம், கரிகாலநாகைப்படுவான் நீர் வழங்கல் திட்டம் ஆகிய புதிய நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. திறன் விருத்தி மற்றும் விநியோக விரிவாக்க திட்டம், மீள்குடியேற்ற திட்டம், வருமானமற்ற நீர்க்குறைப்பிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 130 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்திற்கான பூர்வாங்க வடிவமைப்பு மற்றும் பாலி ஆற்றிற்கான முன் சாத்தியப்பாட்டு ஆய்வுகள் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. பாலி ஆற்று நீர் வழங்கல் திட்டத்திற்காக பாலி ஆற்றிலிருந்து நீரைப் பங்கிட்டுக் கொள்வதற்கான நீர்ப்பாசன திணைக்களத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலதிகமாக பாலி ஆற்று நீர் வழங்கல் திட்டத்திற்காக புதிதாக 10 காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

1770 கிலோமீற்றர் குழாய் வலையமைப்பினை கணனி மயப்படுத்திய செயற்பாட்டில் குறிப்பிட்டுக் சுட்டிக்காட்டக்கூடிய முன்னேற்றம் அடைந்துள்ளது. திறன் விருத்தி மற்றும் விநியோக விரிவாக்க திட்டத்தின் கீழ் 1284 மில்லியன் ரூபா பெறுமதியான வடிவமைப்பு வேலைகளும் 587 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டுமான வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள 23 நீர்வழங்கல் திட்டத்தினை Water Gems ஊடாக விருத்தி செய்யப்பட்டுள்ளது.

### பிராந்திய சேவைகள் நிலையம் வடமத்தி

#### நிர்வாக எல்லை

வட மத்திய பிராந்திய சேவைகள் நிலையமானது வட மத்திய சேவைகள் அலுவலகம் மற்றும் வட மத்திய மாகாணம் முழுவதனையும் உள்ளடக்கியதாக முகாமையாளர் (அநுராதபுரம்), முகாமையாளர் (பொலன்னறுவை) ஆகிய பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

#### விநியோக விரிவாக்கம்

காலநிலை சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் 38 கிலோமீற்றர் நீளமான குழாய்களும் திறன் விருத்தி மற்றும் விநியோக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் 35 கிலோமீற்றரும் CKDu நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 31 கிலோ மீற்றரும் ஆக குழாய் விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

#### நீர் தரத்தினை உயர்த்துதல்

35 நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர்ப்பாதுகாப்பு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள. 21 நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டன.

#### வருமானமற்ற நீர் குறைப்பு

நீர்க்கசிவினை அடையாளங் காணல், நீர் மானிகளை திருத்தியமைத்தல், சட்டவிரோத இணைப்புகளிலிருந்து இழந்த வருமானத்தினை மீட்டல் தொடர்பான நடவடிக்கைகள் மூலம் வருமானமற்ற நீர் 16 வீதத்தால் குறைக்கப்பட்டது.

#### பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

மனித வள முகாமைத்துவ அடிப்படையில் வடமத்திய பிராந்திய சேவைகள் நிலையமானது தேவைக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைத்ததுடன் 08 பயிற்சிகளை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. மேலதிகமாக அனைத்து அலுவலகர்களின் விபரங்களும் SHRM இல் பதியப்பட்டுள்ளது.

#### கூட்டுச் சமூகப் பொறுப்பு

தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக சிறு நகர கிராமிய நீர் வழங்கல் பிரிவினால் பாடசாலைகள், அரச நிறுவனங்கள், மத நிறுவனங்கள் போன்றவற்றில் நீர்க்கசிவு கண்டறியும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. 2023 ல் தொழில்நுட்பம் சார், தொழில்நுட்பம் சாரா 10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சபையின் அலுவலகர்களுக்கு வழங்கப்பட்டது.

#### நிலத்தடி நீர் ஆய்வு

நீர் வழங்கலின் கொள்ளளவினை நாளொன்றிற்கு 3000 கன மீற்றரால் அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டு வடமத்திய பிராந்திய சேவைகள் நிலையமானது 31 புதிய நிலத்தடி நீர் வளங்களை அடையாளப்படுத்தி அமுலாக்கியது. மேலதிகமாக 147 பொது கைப்பம்பிகளுடன் கூடிய குழாய்க் கிணறுகள் மீளமைக்கப்பட்டதுடன் நீர் வள ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பிற செயற்பாடுகள்

2023 ஆம் ஆண்டின் இறுதியில் அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் கட்டம் 1இன் பௌதீக மற்றும் நிதி அடைவு முறையே 98.7 வீதமும் 98.55 வீதமுமாக காணப்பட்ட அதேநேரம் தம்புத்தேகம நீர் வழங்கல் திட்டத்தின் பௌதீக அடைவு 86.10 வீதமும் நிதி அடைவு 88.93 வீதமுமாக காணப்படுகின்றது. அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் கட்டம் 2 இன் பௌதீக அடைவு 13.13 வீதமாகவும் நிதி அடைவு 1.41 வீதமுமாக காணப்படுகின்றது. சமூகமட்ட அமைப்புக்கள் கிராமிய நீர் வழங்கல் அலகின் கீழ் மாற்றப்பட்டதுடன் கெலாவ நீர் வழங்கல் திட்டம் காலநிலை சீராக்கல் மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் 667 புதிய இணைப்புக்களுடன் விரிவாக்கம் செய்யப்பட்டது. திறன் விருத்தி மற்றும் விநியோக விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் 117 மில்லியன் ரூபாவிற்கான கேள்வி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிகக்ப்பட்டுள்ளது.

### நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அவசர பொறுப்புக்கள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சகல நாளாந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) 6வது இலக்கான “அனைவருக்கும் நீர் மற்றும் துப்பரவேற்பாட்டுச் சேவை கிடைப்பனவு மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்தினை உறுதி செய்தல்” என்பதை நோக்கியே காணப்படுகிறது. அதே வேளை இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தேசிய மட்ட செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது 2030 ல் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீருக்கான வழங்குதல் என்ற நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கிற்கு ஏற்பவும் அனைவருக்கும் போதியளவானதும் நியாயமானதுமான சுகாதார மற்றும் சுத்திகரிப்பிற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல் மற்றும் திறந்த கழிப்பிடங்களை முடிவுறுத்தல், பெண்கள் சிறுமிகள் மற்றும் ஆபத்துக்குள்ளாகக் கூடியவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தல் என்னும் இலக்கு 6.2 ஆகியவற்றை கண்காணித்தல் மற்றும் அது தொடர்பான அடைவுகள் பற்றி அறிக்கையிடும் பொருட்டான தேசிய குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதிலும் இலக்குகளை அமைப்பதிலும் ஈடுபட்டது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் யாவும் நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைதல் தொடர்பில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்த விசேட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நோக்குகள் மற்றும் இலக்குகள் இறுதியாக்கப்பட்டதுடன் 2019 ஜுன் மாதத்தில் பங்குதாரர்களால் பொருத்தமானது என ஏற்கப்பட்டது.

சபையின் 2020 - 2025 ற்கான கூட்டிணைந்த திட்டம் “அனைவருக்கும் நீர்” என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்டே வரையப்பட்டுள்ளது . எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த திட்டமானது இடைநிறுத்தப்பட்டுள்ளது. பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் உறுதியற்ற ஸ்திரத்தன்மை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது “அனைவருக்கும் நீர்” என்னும் திட்டத்தினை வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கல் திட்டத்தினை முன்னுரிமைப்படுத்துவதற்காக சபையானது தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் அதன் திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கும்

அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது எதிர்கால செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி திட்டங்களையும் மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வரவு செலவுத்திட்டங்களையும் ஒழுங்கிணைக்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. சபையானது நிலைபேறான மற்றும் அவசரகால முயற்சிகளுக்கு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் வருமாறு.

1. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வுக்கான தேசிய பல்துறை பங்குதாரர் ஆலோசனைச் செயலமர்வு - 24.08.2018 இல் இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடம்.
2. நீடித்து நிலைத்தருக்கும் அபிவிருத்தி இலக்கு - 6 கண்காணிப்பு - பங்குதாரர் ஆலோசனைச் செயலமர்வு - நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சு - 26.04.2018 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.
3. தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படவுள்ள குடும்ப மதிப்பீட்டுக்காக தேவைப்பட்ட நீரத் தரப் பரிசோதனை நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு - 6.1 - 23.10.2018 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.
4. நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு - 6 - குறிகாட்டிக் குழுக் கூட்டம் - 17.08.2018 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.
5. நீடித்து நிலைத்தருக்கும் அபிவிருத்தி இலக்குகளுக்கான பிரதான பங்குதாரர்களுடனான நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத்துறை வலுப்படுத்தல் கூட்டம் - 28.03.2028 இல் முன்னால் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சு
6. நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு 6.1 மற்றும் 6.2 இலக்குகளை அடைவதற்கு பாதுகாப்பாக முகாமை செய்யப்பட்ட நீர் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறைகளில் உலகளாவிய கண்காணிப்பு முறைமை பற்றிய உலக சுகாதார திணைக்களம் மற்றும் UNICEF இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் மூலம் நடாத்தப்பட்ட இணையத்தின் ஊடாக கருத்தரங்கு - 28.05.2019 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.
7. நீடித்து நிலைத்தருக்கும அபிவிருத்தி இலக்கு - 6 - நீர் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறைகளில் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய இலக்குகளை அமைத்தல் - 26.06.2019 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்
8. நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு - 6 குறிகாட்டல் தொடர்பில் WHO / UNICEF, இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்ட உதவியுடனான செயலமர்வு - 23.07.2019 இல் வோட்டர்ஸ் எட்ஜ் விடுதி.
9. நிலைபேறான அபிவிருத்தி மீது அமைச்சுக்கள் , திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்கான பொதுசன சேவை விநியோக மூலோபாய அபிவிருத்தி இலக்குகளின் பிரதான போக்கினைத் தயாரித்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பிலான ஆலோசனை மற்றும் மூலோபாயங்கள் செயலமர்வு - 20.09.2019 இல் மூவென்பிக் ஹோட்டல்.
10. இணைந்த மேற்பார்வை நிகழ்ச்சித்திட்ட அறிக்கை 2020 - 2021 தொடர்பிலான மீளாய்வுக் கூட்டம் - 05.03.2020 இல் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்
11. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்திற்கான செல்லுபடியாக்கல் செயலமர்வு - 12.03.2020 - 14.03.2021 ஜெய்க கில்டன் ஜெட் விங் ஹோட்டல்.
12. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான வரைவு தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் தொடர்பிலான மீளாய்வு - 22.06.2020 இல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்
13. பிரதான ஓட்டத்தில் தரவு இயலளவை கட்டியெழுப்புதல் செயலமர்வு 19.03.2021 இல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.
14. 19.03.2021ல் இடம்பெற்ற செயலமர்வில் வேண்டப்பட்ட தரவுகளை சமர்ப்பித்தல்.
15. 17.08.2021ல் நீர்த்துறைக்கான மூலோபாய அபிவிருத்தி இலக்குகளுக்கான குறிகாட்டிகள் தொடர்பான தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கான தரவு சமர்ப்பித்தல்.
16. பிரதான ஓட்டத்தில் தொழில்நுட்ப அமர்வு மற்றும் தரவு திறனை கட்டியெழுப்புதல் மீதான செயலமர்வு - 05.09.2021 இல் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல்.
17. 03.03.2022 இல் கொழும்பு - 5 ஜானகி ஹோட்டல் இலங்கை 2022 மூலோபாய அபிவிருத்தி இலக்குகளின் தன்னார்வ தேசிய மீளாய்வு செயலமர்வு.
18. பொருளாதார அறிவுத்திறன் பிரிவால் ஒருங்கிணைந்த ஆராய்ச்சியால் நடாத்தப்பட்ட இலங்கை மூலோபாய அபிவிருத்தி இலக்கு முதலீட்டாளர் பரப்பின் அபிவிருத்தி மீது நடைபெற்ற கருத்தரங்குக் கூட்டம் 15.03.2022 இல் இலங்கை வர்த்தக சங்கம்.
19. 2022 சித்திரை 27 முதல் 29 வரை மூலோபாய அபிவிருத்தி இலக்கின் அமுலாக்கலில் இரண்டாவது தன்னார்வ தேசிய மீளாய்வின் தகுதி மீது நிகரான அமர்வு.
20. 07.07.2022 இல் தேசிய மூலோபாய அபிவிருத்தி இலக்கு தரவு பகுதியின் மூலோபாய அபிவிருத்தி இலக்கு தரவு முகாமைத்துவ முறைமை மீதான அறிவு பகிர்தல் அமர்வு.
21. 19.07.2022 இல் மூலோபாய அபிவிருத்தி இலக்கு - 6 குறிகாட்டிகளின் முறை ரீதியான அபிவிருத்தி மீதான மெய்நிகர் அமர்வு.
22. 22.09.2022 இல் மூலோபாய அபிவிருத்தி இலக்கு முன்னேற்ற மதீப்பீடு மீதான இலக்குப் பரீட்சை மீதான அறிவுப்பகிர்வு மெய்நிகர் அமர்வு.
23. நீர் வழங்கல் அமைச்சின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி தொடர்பில் அவற்றினை செயற்படுத்துவது பற்றிய ஆரம்ப கலந்துரையாடலானது அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2022.10.06 அன்று இடம்பெற்றது.
24. 2022.10.07 அன்று வழிமுறை மேம்பாடு மற்றும் தரவுத் சேகரித்தல் தொடர்பான (மெய்நிகர்) குவிமையக் குழு விவாதம் இடம்பெற்றது.
25. 2022.12.01 அன்று வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நிலைத்திருக்கும் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் வரைபடம் தொடர்பில் பங்குதாரர்களுக்கு பயிற்சிப் பட்டறை ஒன்று இடம்பெற்றது.

**அவசரகால / அபாய நிலை கால பொறுப்புக்கள்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையானது அவசரகால தயார்நிலை வகைகளை பட்டியலிடுவதன் மூலமும் அபாய மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலமும் அவரசரகால நிலைகளில் மேற்கொள்ளவேண்டிய பதில் நடவடிக்கைகளை இனங்காணுகின்றது. அவசரகால முகாமைத்துவ குழு, அவசர காலங்களில் நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதி செய்கிறது. அவசரகால பதிலளிப்பு அமைப்புகளைத் திட்டமிடவும், செயற்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும், ஏற்கனவே உள்ள நிறுவன அமைப்புகளை ஒருங்கிணைக்கவும் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி) அதனை மேற்பார்வையிடவும் மூன்று அடுக்காமைவில் ஒருங்கிணைப்பு அணுகுமுறையொன்றானது நிறுவப்பட்டுள்ளது.

# கணக்காய்வு குழு அறிக்கை

“கணக்காய்வு குழுவின் ஒவ்வொரு சிபாரிசுகளும் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன் சில விடயங்கள் சபைக் கூட்டங்களில் மேலும் விவாதிக்கப்பட்டன”.

**குழுவின் தொகுப்பு**

PEF/PE/3 சுற்றறிக்கையின்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சபை பணிப்பாளர்களின் சபைக் கூட்ட இல - 590 , சபைத் தீர்மான இல - 2965 (டி) ஊடாக பெறப்பட்ட அனுமதியின் அடிப்படையில் 1999 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் திகதி கணக்காய்வுக் குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவானது 16.11.2021 ம் திகதிய PED 01/2021 ம் இலக்க அறிவுறுத்தலின் படி சபையின் பணிப்பாளர் குழுவிற்கு தமது சேவைகளை வழங்க வேண்டும்.

2023ம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் அங்கத்தவர்கள் விபரம் வருமாறு

**நிறைவேற்று தரம் சாரா பணிப்பாளர்கள்**

1. திருமதி. டபிள்யூ. ஈ. கொடகம - தலைவர் - கணக்காய்வு குழுவின் தலைவர் / சபை உறுப்பினர்
2. எந்திரி. லக்ஷ்மன் ரனசிங்ஹ - சபை உறுப்பினர் (2023 செப் வரை)
3. செல்வி. கே.ஏ.எஸ். மஹேசிகா - சபை உறுப்பினர
4. கலாநிதி. ஏந்திரி. (திருமதி). ஐ.எம். டபிள்யூ.கே இலங்கசிங்கே - சபை உறுப்பினர் (2023 செப் வரை)
5. திரு. மொகமட் காதர் - சபை உறுப்பினர் (2023 ஒக்டோபர் வரை)

**அவதானிப்பாளர்**

6. செல்வி. இ.ஏ.என்.பி. எதிரிசிங்கே - அரசாங்க கணக்காய்வின் கணக்காய்வு அத்தியட்சகர்
7. செல்வி. கே.ஏ.ஜி. துசாரி - பிரதம உள்ளக கணக்காளர் , நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

**அவை கூட்டுநர்**

8. திரு. யூ.ஜே.சமரசிங்ஹ - பி.பொ.மு (உள்ளக கணக்காய்வு)

**அழைப்பின் பேரில் வழமையாக சமூகம் அளிக்கின்றவர்கள்**

9. திரு. டபிள்யூ. எம். ஏஸ். பி. விஜேயகோன் - உபதலைவர்/ சபை உறுப்பினர்
10. கலாநிதி. ஏந்திரி. (திருமதி). ஐ.எம். டபிள்யூ.கே இலங்கசிங்கே - சபை உறுப்பினர் (2023 செப் வரை)
11. எந்திரி. ஆர். ஏஸ். லியனகே - பொது முகாமையாளர் (2023 செப் லிருந்து)
12. திரு. ஆர். ஏம்.ஏ.எஸ் . வீரசேன - மேலதிக பொது முகாமையாளர் - நிதி
13. திரு. டபிள்யூ. ஜி. சி. எல். வீரசேகர - மேலதிக பொது முகாமையாளர் - கூட்டிணைந்த சேவைகள்
14. திரு. ஜே. எல் . சீக்குகே - மேலதிக பொது முகாமையாளர் - கொள்கை மற்றும் திட்டமிடல்
15. திரு. என்.எச்.டி.பி. தர்மபால - மேலதிக பொது முகாமையாளர் - நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவம்
16. திரு. டி.என்.டி.எஸ். குணதிலக - மேலதிக பொது முகாமையாளர் - நீர் வழங்கல்
17. திரு. தி. பாரதிதாசன் - மேலதிக பொது முகாமையாளர் - வடக்கு வடமேல் பிராந்திய சேவைகள் நிலையம்
18. திரு.எம் . கே.டி. மீகொட - மேலதிக பொது முகாமையாளர் - மத்தி- சபரகமுவ- வடமேல் பிராந்திய சேவைகள் நிலையம்
19. திரு. சி.சி.எச். பெர்னான்டோ - மேலதிக பொது முகாமையாளர் - மேல் மாகாண பிராந்திய சேவைகள் நிலையம்
20. திரு. என். சுதேசன் - மேலதிக பொது முகாமையாளர் - தெற்கு - ஊவா - கிழக்கு மாகாண பிராந்திய சேவைகள் நிலையம்
21. திரு. எம். ஏ.எஸ்.எஸ். சந்திரசிறி - பதில் மேலதிக பொது முகாமையாளர் - மனித வள முகாமைத்துவம்
22. திரு. பியால் பத்மநாத - பிரதிப் பொது முகாமையாளர் - வணிகம்
23. திரு. ரி.ஜி.ஆர். டிலிப் குமார - பிரதிப் பொது முகாமையாளர் - உள்ளக தொடர்பு
24. திரு. ஆர். டபிள்யூ. எம். நந்ததிலக் - பதில் பிரதிப் பொது முகாமையாளர் தகவல் தொடர்பாடல்
25. திரு. ஏ.ஆர். தகாநாயக்க - உதவிப் பொது முகதமையாளர் (நிதி)

**குழுவின் செயலாளர்**

26. திருமதி. டபிள்யூ.பி. சந்தமாலி டி சில்வா - பணிப்பாளர் சபையின் செயலாளர்

| பெயர் | பங்குபற்றுவதற்கான தகமை / பங்குபற்றியோர் |
|---|---|
| திருமதி. டபிள்யூ. ஈ. கொடகம | 07/07 |
| எந்திரி. லக்ஷ்மன் ரனசிங்ஹ | 05/05 |
| செல்வி. கே.ஏ.எஸ். மஹேசிகா | 07/07 |
| கலாநிதி. எந்திரி. (திருமதி). ஐ.எம். டபிள்யூ.கே இலங்கசிங்கே | 01/01 |
| திரு. மொகமட் காதர | 01/01 |
| திரு. டபிள்யூ. எம். ஏஸ். பி. விஜேயகோன | 07/04 |

**2023 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்**

இந்தக் கணக்காய்வுக் குழுவானது 31 டிசம்பர் 2023 அன்று முடிவடையும் நிதி ஆண்டின் கீழ் பல்வேறு முக்கிய விடயங்களை நிகழ்ச்சி நிரலின் படி விவாதிப்பதற்காக 07 கூட்டங்களை கூட்டி விவாதித்தது.

- 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி அறிக்கைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிற சட்ட ஒழுங்குமுறை தேவைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் அறிக்கை
- 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி அறிக்கைகள் சமர்ப்பித்தல்
- மேலதிக பொது முகாமையாளர் - IA ற்கான பதவி அனுமதி மற்றும் புதிய ஆட்சேர்ப்பிற்கான திட்டம்
- 2021 மற்றும் 2022ம் ஆண்டின் 3 ம் காலாண்டிற்கான கணக்காய்வு சுருக்கம்
- கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்
- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு செயற்பாட்டு கையேடு
- பொருள் நல்லிணக்கத்திற்கான தகவல் தொழில்நுட்பம்
- கழிவு நீர்ப் பிரிவிற்கான தகவல் தொழில்நுட்பம்
- லக்திய மதுர கட்டடத்திற்கான உரிமம் பெறப்பட்டது
- நிலையான சொத்து சரிபார்க்கை
- சொத்துக்கள் முதலீடுகள் தொடர்பான சரிபார்ப்பு பட்டியல் மற்றும் மதிப்பாய்வு செயல்முறை எழுதுதல்
- தொழிலாளர் ஒப்பந்தக் கொடுப்பனவுகள்

- உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு தகவல் தொழில்நுட்ப நிபுணரை பணிக்கமர்த்தலின் முக்கியத்துவம்
- 2024 ம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டம்

அரசாங்க அழைப்பின் பேரில் கணக்காய்வு பிரதிநிதிகள் வருடம் முழுவதும் நடைபெற்ற 07 கூட்டங்களிலும் ஈடுபட்டிருந்தனர். மேலதிகமாக குறித்த குழு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சிரேஸ்ட முகாமைத்துவ உறுப்பினர் ஒருவரை தேவைக்கேற்ப குறித்த கூட்டங்களுக்கு கலந்து கொள்ள கோரிக்கைவிடுத்தது.

**குறித்த குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு இருந்தன.**

- கணக்காய்வுக் குழுவினால் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் திட்டத்திற்கான சகல பிரதான மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கணக்காய்வு குழுவால் உள்ளக கணக்காய்வாளர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களுடைய வினைத்திறன்களை தொடருவதை மீளாய்வு செய்வதற்கு வேண்டப்பட்டது.
- கணக்காய்வு குழுவானது சம்பந்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொருத்தமான சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கி நிதி அறிக்கைகள் செய்யப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு மேற்பார்வையிடும் பணியில் சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது சகல விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கைகள் பின்பற்றப்படுவதை கண்காணித்து சபைக்கு சிபாரிசு செய்வதை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதும் கண்காணிப்பது என்பதனை உறுதிப்படுத்தி சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது திருத்தும் நடவடிக்கைகளை செய்வதற்கு உள்ளக / வெளியக கணக்காய்வு முகாமைத்துவ கடிதங்கள் மற்றும் COPE இன் சிபாரிசுகள் மற்றும் சபைக்கு உதவி செய்வதற்கும் மீளாய்வு செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்தி அமுலாக்குவதற்கும் கூட்டு ஆளுகை நடைமுறையின் உயர்ந்த தரத்தினை கடைப்பிடிப்பதற்கு சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது கட்டடத் தொகுதி அல்லது வழமையற்ற கொடுக்கல் வாங்கல்கள், உயர்வான தீர்ப்புப் பகுதி உள்ளடங்கலாக முக்கியமான கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் விடயங்கள் மற்றும் அண்மைய தொழில்திறன் மற்றும் பிரமாணம் பிரகடனங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் மீதான அவர்களுடைய தாக்க புரிந்துணர்வு என்பவற்றை மீளாய்வு செய்ய வேண்டும் .
- கணக்காய்வு குழுவானது சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வெளிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நேர்மையை கண்காணிப்பதற்கு வருடாந்த நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்ய வேண்டும்
- கணக்காய்வுக் குழுவானது கொள்வனவு நடைமுறை மற்றும் கொள்வனவு திட்டத்தின் அமுலாக்கலின் முன்னேற்றம் என்பவற்றை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

கணகாய்வு முகாமைத்துவ குழுவின் அனைத்து பரிந்துரைகளும் மற்றும் சில பிரச்சினைகள் எதிர்வரும் சபைக் கூட்டங்களில் விவாதிப்பதற்காக சபைக்கு அனுப்பப்பட்டது.

# நிதியியல் கூற்றுகள்


63 விரிவான வருமானக் கூற்று

65 நிதி நிலைமைக் கூற்று

66 பங்குரிமை மாற்றம் பற்றிய கூற்று

67 காசுப் பாய்ச்சல் கூற்று

68 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

93 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆணடுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை




# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள்

## 2023 மார்கழி 31

**விரிவான வருமானக் கூற்று**

2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | பாதீடு 2023 ரூபா | உள்ளபடியானது 2023 ரூபா | உள்ளபடியானது 2022 ரூபா |
|---|---|---|---|---|
| வருமானம் (வட் இன் நிகர) | 7 | 66,580,892,981 | **61,852,288,555** | 35,464,465,620 |
| விற்பனைக் கிரயம் | 8 | (34,716,858,475) | **(32,843,783,000)** | (23,144,554,365) |
| **மொத்த இலாபம்** | | 31,864,034,506 | **29,008,505,555** | 12,319,911,255 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 9 | 1,239,727,165 | **4,284,862,995** | 1,289,485,096 |
| நிர்வாகச் செலவினம் | 10 | (17,689,396,579) | **(14,841,148,486)** | (14,051,648,238) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 11 | (850,000,000) | **(1,338,398,898)** | (347,081,649) |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | 14,564,365,091 | **17,113,821,167** | (789,333,536) |
| நிதி வருமானம் | 12 | 2,015,541,000 | **3,121,158,211** | 2,006,866,677 |
| நிதிக் கிரயம் | 13 | (2,964,299,201) | **(14,948,454,251)** | (3,917,340,209) |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | | 13,615,606,891 | **5,286,525,126** | (2,699,807,068) |
| வருமான வரி (பொருளாதார சேவை கட்டணங்கள்) | 14 | - | | - |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | | 13,615,606,891 | **5,286,525,126** | (2,699,807,068) |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 7 முதல் 29 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள். மேலும் மேற்கண்ட வருமானக் கூற்றின் சுருக்கமான பதிப்பு இந்த அறிக்கைகளின் குறிப்பு எண் 38 இல் சேர்க்கப்பட்டுள்ளது.

**விரிவான வருமானக் கூற்று**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | பாதீடு 2023 ரூபா | உள்ளபடியானது 2023 ரூபா | உள்ளபடியானது 2022 ரூபா |
|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | 13,615,606,891 | 5,286,525,126 | (2,699,807,068) |
| **ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம்,** | | | |
| வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிகர உண்மையான மதிப்பீட்டின் ஆதாயம் அல்லது இழப்பு | - | 1,730,809,012 | (181,137,567) |
| | | 1,730,809,012 | (181,137,567) |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | 13,615,606,891 | 7,017,334,139 | (2,880,944,635) |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 7 முதல் 29 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**நிதி நிலைமைக் கூற்று**

2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | உள்ளபடியானது | மீண்டும் கூறப்பட்ட மீதி |
|---|---|---|---|
| | | **2023** | 2022 |
| **சொத்துக்கள்** | | **ரூபா** | ரூபா |
| **நிலையான சொத்துக்கள்** | **குறிப்புகள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | **409,227,568,841** | 279,650,028,501 |
| கற்பனைச் சொத்துக்கள் | 16 | **1,925,979,889** | 27,831,140 |
| செயற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள் | 17 | **482,561,943,621** | 584,529,397,340 |
| முதலீட்டு ஆதனம் | 18 | **319,319,640** | 322,819,561 |
| நிதிச் சொத்துக்கள் | 19 | **434,368** | 434,368 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **894,035,246,359** | **864,530,510,910** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இயக்கமற்ற சொத்துக்கள் | 20 | **149,748,448** | 149,748,448 |
| பொருளிருப்புகள் | 21 | **19,075,065,611** | 14,362,634,874 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 22 | **18,659,706,881** | 11,999,080,309 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 23 | **18,742,571,261** | 29,349,835,341 |
| முதலீடுகள் | 24 | **13,969,122,470** | 13,202,089,119 |
| எச்க்ரோ கணக்கு | 25 | **16,836,510,365** | 18,887,579,277 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | 26 | **5,559,826,600** | 4,089,500,617 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **92,992,551,636** | 92,040,467,984 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **987,027,797,995** | 956,570,978,895 |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமை மூலதனம்** | | | |
| அரசாங்க மூலதனம் (பங்கு) | 27/28 | 111,684,749,118 | 115,301,123,678 |
| உத்தியோகத்தர் நலன்புரி நிதியம் | 29 | 21,665,392 | 23,656,876 |
| நிறுத்திவைத்த இலாபங்கள் | | (7,520,971,107) | (14,530,556,088) |
| அரசாங்க மானியங்கள் | 30 | 155,526,551,042 | 123,523,371,754 |
| உரிமை மூலதனம் | 31 | 306,202,462,123 | 307,547,893,553 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | 565,914,456,567 | 531,865,489,773 |
| **நிலையான பொறுப்புகள்** | | | |
| பெறவேண்டிய கடன்கள் | 32 | 247,152,906,252 | 282,368,872,833 |
| ஏனைய பிற்போட்ட பொறுப்புகள் | 33 | 4,432,379,812 | 4,435,065,261 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | 251,585,286,064 | 286,803,938,094 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| இயக்கமற்ற பொறுப்புகள் | 20 | 51,287,805 | 51,287,805 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 34 | 65,305,058,757 | 69,519,289,028 |
| செலுத்த வேண்டிய கடன் மூலதனம் | 32 | 74,672,171,838 | 52,475,160,647 |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | | 29,499,536,965 | 15,855,813,547 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 169,528,055,365 | 137,901,551,028 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | 987,027,797,995 | 956,570,978,895 |

**ஆர். எம். ஏ. எச். வீரசேன**
**மேலதிக பொது முகாமையாளர் (நிதி)**

**ருவன் எச் லியனகே**
**பொது முகாமையாளர்**

பக்க இலக்கம் 08 முதல் 14 வரையான பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 15 முதல் 28 வரையான பக்கங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறிப்புகள் யாவும் நிதி கூற்றுக்களின் முக்கியமான பகுதிகளாகும். நிதி கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பணிப்பாளர்கள் சபை பொறுப்புக் கூறுவர். இந்த நிதிக் கூற்றுக்கான அங்கீகாரம் பணிப்பாளர்கள் சபையினால் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் பொருட்டு கையொப்பமிடப்படுகின்றது.

**நிசாந்த ரனதுங்க**

**தலைவர்**

**டப்ளியூ. எம். எஸ். பி. விஜேகோன்**

**உப தலைவர்**

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**பங்கு மாற்றங்கள் சம்பந்தமான கூற்று**

2023 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக.

| | குறிப்பு | அரசாங்க திணைக்களங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் | அரசாங்க மானியங்கள் | அரச மூலதனம் | மூலதன மானியங்கள் | நலன்புரி மற்றும் ஏனைய நிதி | திரட்டிய இலாபம் / நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2022 தை 01 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை** | | 185,480,387 | 117,548,897,076 | 100,263,323,220 | 292,054,996,873 | 33,115,808 | (13,221,886,077) | **496,863,927,288** |
| **முன்னைய ஆண்டுச் சீராக்கல் -** | | | | | | | | |
| சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல் | **36.1.1** | - | - | - | - | - | 108,720,438 | **108,720,438** |
| சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல் | **36.1.2** | - | - | - | - | - | 2,132,019,795 | **2,132,019,795** |
| நிதிச் சொத்துக்கள் | **19** | - | - | - | - | - | (1,500,083) | **(1,500,083)** |
| கையில் உள்ள காசு மீதி | **26** | - | - | - | - | - | 1,500,083 | **1,500,083** |
| முதலீடுகள் | **24** | - | - | - | - | - | (18,887,579,277) | **(18,887,579,277)** |
| எச்க்ரோ கணக்கு | **25** | - | - | - | - | - | 18,887,579,277 | **18,887,579,277** |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | **36.2** | - | - | - | - | - | (7,735,927) | **(7,735,927)** |
| இருப்புக்கள் | **36.2** | - | - | - | - | - | 7,368,976 | **7,368,976** |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள் | **36.2** | - | - | - | - | - | (659,277,280) | **(659,277,280)** |
| ஆரம்ப மூலதன மீதி | **36.2** | (185,480,387) | - | 185,480,387 | - | - | - | - |
| மூலதன மானியங்கள் | **36.2** | - | - | - | 23,129,503 | - | (23,129,503) | - |
| **202.01.01 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை** | | - | 117,548,897,076 | 100,448,803,607 | 292,078,126,376 | 33,115,808 | (11,663,919,578) | **498,445,023,290** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | - | - | - | - | - | (2,880,944,635) | **(2,880,944,635)** |
| சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல் | **36.1.1** | - | - | - | - | - | (11,641,298) | **(11,641,298)** |
| வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள் | | - | 5,974,474,678 | - | 15,469,062,254 | - | - | **21,443,536,932** |
| கடன் தொகையை மூலதனமாக மாற்றுதல் | **36.2** | - | - | 14,852,320,071 | - | - | - | **14,852,320,071** |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் | **36.2** | - | - | - | - | - | 122,170 | **122,170** |
| இருப்புக்கள் | **36.2** | - | - | - | - | - | 12,531,425 | **12,531,425** |
| மூலதன மானியங்கள் | **36.2** | - | - | - | - | - | 4,541,819 | **4,541,819** |
| நலன்புரி நிதிக்கு மாற்றுதல் | **36.2** | - | - | - | 704,924 | - | (704,924) | - |
| | | - | - | - | - | (9,458,932) | 9,458,932 | - |
| **2022.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை** | | - | 123,523,371,754 | 115,301,123,678 | 307,547,893,554 | 23,656,876 | (14,530,556,088) | **531,865,489,774** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | - | - | - | - | - | 7,017,334,139 | **7,017,334,139** |
| வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள் | | - | 8,614,531,477 | - | (1,345,431,431) | (9,740,642) | | **7,259,359,405** |
| கடன் தொகையை மூலதனமாக மாற்றம் | | - | - | 19,772,273,249 | - | - | - | **19,772,273,249** |
| மூலதன மானியங்கள் உரிமை மூலதனமாக மாற்றுதல் | | - | 23,388,647,810 | (23,388,647,810) | - | - | - | - |
| நலன்புரி நிதிக்கு மாற்றுதல் | | - | - | - | - | 7,749,157 | (7,749,157) | - |
| **2022 மார்கழி 31 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை** | | - | 155,526,551,042 | 111,684,749,118 | 306,202,462,123 | 21,665,392 | (7,520,971,107) | **565,914,456,567** |

பக்க இலக்கம் 07 முதல் 29 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் யாவும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாகும்.

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**காசுப்பாய்ச்சல் கூற்று**

2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | உள்ளபடியானது | மீண்டும் கூறப்பட்ட மீதி |
|---|---|---|---|
| | | 2023 | 2022 |
| | | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | குறிப்பு | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /(நட்டம்) | | 5,286,525,126 | (2,699,807,068) |
| ***சீராக்கலிற்கானது*** | | | |
| வட்டி வருமானம் | 12 | (3,121,158,211) | (2,006,866,677) |
| நிலையான சொத்து கைதவிர்பில் இலாபம் /(நட்டம்) | | 4,069,440 | 3,875,213 |
| பெறுமானத் தேய்வு | 10.2 | 5,064,881,306 | 4,682,308,694 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | | | 33,795,903 |
| ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு | 33.1 | 1,058,795,842 | 241,893,010 |
| வட்டிச் செலவினம் | 13 | 14,948,454,251 | 3,917,340,209 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 23,241,567,755 | 4,172,539,285 |
| பொருளிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | | (4,712,430,738) | (4,499,029,105) |
| கடன்பட்டோர், பெறவேண்டியவை மற்றும் வைப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | | 3,946,637,507 | (2,483,180,183) |
| கடன்கொடுத்தோர் மற்றும் ஏற்பாடுகளில் அதிகரிப்பு)/ குறைவு | | (4,216,915,720) | 29,428,822,174 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | 18,258,858,805 | 26,619,152,171 |
| செலுத்திய வரி | | - | - |
| செலுத்திய பணிக்கொடை | 30.1 | (1,058,795,842) | (241,893,010) |
| **செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்** | | 17,200,062,963 | 26,377,259,162 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| நிலையான சொத்துக்கள் மற்றும் நடைபெறும் வேலைகளில் முதலீடு | | (21,683,744,755) | (145,817,310,300) |
| நிதி சொத்துக்களின் | | - | (44,671) |
| அகற்றும் சொத்துகளுக்கான விற்பனை வருமானம் | | 3,442,549 | 9,138,224 |
| பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | | 3,121,158,211 | 2,006,866,677 |
| முதலீடுகளின் (முதலீடு) / பற்றுதல்கள் | 34.2 | (892,339,463) | (7,740,263,539) |
| **முதலீட்டு நடவடிக்கைகள் /(பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | (19,451,483,458) | (151,541,613,609) |
| **நிதி நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| முன்னைய ஆண்டின் போதான அரசாங்க மானியம் | | 8,614,531,478 | 5,974,474,678 |
| முன்னைய ஆண்டின் போதான மூலதன மானியம் | | 871,460,644 | 18,269,721,332 |
| புதிய கடன்கள் மற்றும் பங்கு மாற்றத்திற்கான கடன் ரசீதுகள் | | 24,678,244,985 | 119,574,514,646 |
| கடன் திருப்பிச் செலுத்தல்கள் | | 1,114,127,965 | (10,059,071,890) |
| வட்டிச் செலவினம் | | (31,556,618,593) | (8,740,614,116) |
| செலுத்திய வட்டி | | 3,721,746,479 | 125,019,024,651 |
| **நிதி நடவடிக்கைகள் /(பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | 1,470,325,984 | (145,329,798) |
| **ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்** | | 4,089,500,617 | 4,234,830,415 |
| **ஆண்டு இறுதியிலுள்ள காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்** | | 5,559,826,600 | 4,089,500,617 |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 7 முதல் 29 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**2023 மார்ர்கழி 31**

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**1. திரட்டிய தகவல்கள்**

**1.1 பொதுவானவை**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 1974 இன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரச்சட்டதின் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாக உள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ளதுடன் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் அதே இடத்தில் அமைந்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (என்டபிள்யூஎஸ்&டிபீ) நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசத்கள் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழான நிறுவனமொன்றாக உள்ளது.

**1.2 பிரதான நடவடிக்கைகள்**

சமுதாயத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை தயார்செய்து விற்பனை செய்யவதே சபையின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளது.

நாடு முழுவதும் சுத்திகரிக்ப்பபட்ட குடி தண்ணீரை விருத்தி செய்து இலங்கையை சிறந்த நாடாக கட்டியொழுப்புவதே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குறிக்கோள்களாக உள்ளது.

**1.3 சபையின் தொடர்ச்சியான இருப்பு**

தொடர்ச்சியான இருப்பை தக்கவைத்துக்கொள்வதன் நிமித்தம் சபையிடம் காணப்படும் திறமை குறித்து முகாமைத்துவத்தினால் மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்பார்க்கப்படுகின்ற வருங்காலத்திற்காக வியாபாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான வளங்கள் காணப்படுவதனால் அவ்விடயம் சம்பந்தமாக திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான தக்கவைத்துக்கொள்வதன் நிமித்தம் சபையிடம் காணப்படும் திறமை தொடர்பாக குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய போதியளவான நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் அறிந்திருக்காததுடன், அவர்களிடம் சபை நடவடிக்கைகளை கலைப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான எண்ணம் கிடையாது. ஆகவே, நிதிக் கூற்றானது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதன் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**2. தயாரிப்பு அடிப்படை**

**2.1 இணக்க பிரகடனம் நிதிக்கூற்றுக்களின் இணக்கம்**

இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் (CA Sri Lanka) வெளியிடப்பட்டுள்ள கணக்கு தரநிலைகளுக்கு (SLFRS/ LKAS) அமைவாக வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக்கூற்று, உரித்து மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று போன்றவை தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.2 அளவீட்டு அடிப்படை**

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்கள் ரூபா வில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்ப்பிடப்பட்டவற்றைத் தவிர சகல பெறுமதிகளும் அண்ணளவாக ஆயிரத்திற்கு (ரூபா 000) குறிப்பிடப்பட்டது.

**2.3 சமர்ப்பிக்கப்படும் நிதி அலகு**

நிதிக் கூற்றானது இலங்கை ரூபாவினால் (LKR) முன்வைக்கப்பட்டுள்ளது. அது சபையின் செயற்படுத்துதல் மற்றும் சமர்ப்பித்தலுக்குரிய நிதி அலகாகும்.

**3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

**3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களானது கிரயம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய பெறுமதிகுறைப்பு நட்டங்கள் என்வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏதாவது பிரமாணம் அங்கீகாரம் செய்கின்ற போது ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மீளளிப்பு கிரயத்திலும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களிற்கான கடன்பெறல் கிரயங்களிலும் என்பவற்றை அத்தகைய கிரயங்கள் உள்ளடக்குகிறது. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதிகள் ஒரேயளவு இடைவெளிகளில் மீள்நிரப்பப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவற்றினை இதன்படி குறிப்பாக பாவணைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றுடன் தனித்தனியான

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

சொத்துக்களாக அத்தகைய பகுதிகளாக அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே, பிரதான பரிசோதனைகளை செயற்படுத்தும் போது அதன் கிரயம் பிரமாண அங்கீகாரங்களை திருப்திசெய்கையில் மாற்றீடாக பொறி மற்றும் உபகரணங்களின் தொகையை மேற்கொள்கையில் அங்கீகரிக்கின்றது. ஏனைய சகல திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

நிதியேற்பாடுகளிற்கான பிரமாண அங்கிகாரங்களை செய்கையில் உரிய சொத்துக்களின் கிரயத்தில் அதன் காலத்தின் பின்னர் சொத்தொன்றின் தரகு குறைப்பதற்காக எதிபார்க்கப்பட்ட கிரயத்தின் தற்போதைய பெறுமதியை உள்ளடக்குகிறது.

**3.1.1 பெறுமானத்தேய்வு**

பின்வருமாறு சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது.

**ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

| | |
|---|---|
| கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு | 1.67% - 2% |
| சுத்திகரிப்பு பொறி மற்றும் உபகரணங்கள் | 5 % |
| சேவைகள் மற்றும் மொத்த தண்ணீர் அளவைமானி | 10% |
| பரிமாற்ற பொறி மற்றும் விநியோகக் குழாய்கள் | 1.67% |
| உபகரணங்கள் | 10% |
| தளபாம் மற்றும் பொருத்திகள் | 10% |
| கணனிகள் உபபாகம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் | 20%- 33.3% |
| மோட்டார் வாகனங்கள் | 10%- 20% |
| முதலீட்டு ஆதனம் | 2% |
| குத்தகையுடமை வாகனங்கள் | 14.3 % |

**3.1.2 செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி**

மூலதனமாக்கப்படாத மற்றும் ஆண்டினுள் செலவிடப்பட்ட மூலதனச் செலவு ஆகியவை செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி எனக் குறித்துக்காட்டப்படுவதுடன், ஆண்டினுள் மூலுதனமாக்கப்பட்ட மற்றும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடைமைகள் யாவும் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக மாற்றியமைக்கப்படும்.

**3.1.3 முதலீட்டு ஆதனம்**

உடமையாளருக்கு சொந்தமான வதிவிடத்தை இன்னொருவருக்கு மாற்றுகின்ற ஆதனத்தை பயன்படுத்தும் போது முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலீட்டு ஆதனமானது திரண்ட பெறுமானத்தேய்வு கழித்த கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

**3.1.4 குத்தகை**

ஒழுங்கமைப்புள்ளதா அல்லது அதனைக் கொண்டுள்ளதா எனவும், பரிசோதனை திகதியில் பொருள்களை அடிப்படையாக ஒழுங்கமைப்புகள் கொண்டுள்ளதா எனவும், குறித்த சொத்தொன்றோ அல்லது சொத்துக்களோ பயன்படுத்துவதில் ஒழுங்கமைப்புக்களை நிறைவேற்றலில் தங்கியுள்ளதா அல்லது சொத்துப் பயன்பாட்டு உரிமை ஒழுங்கமைப்புக்களையோ ஒப்படைக்கின்றதா எனவும் நிர்ணயித்தல், அவ்வாறே, குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புக்களில் அவ்வுரிமை வெளிப்படையாக இருக்கவில்லை.

**3.1.5 கற்பனைச் சொத்துக்கள்**

கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பு கிரயத்தில் தனித்தனியாக அளவிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆரம்ப அங்கீகாரம் கற்பனைச் சொத்துக்களின் கிரயத்தை பணமதிப்பு நீக்கத்தினுடாக கழிதிதல் மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் தவிர்ந்தவை மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் செலவினங்கள் ஆண்டில் ஏற்பட்டிருந்த செலவினத்தில் வருமானக் கூற்றில் தாக்கமேற்படுத்தியது. கையகப்படுக்கும் கணனி மென்பொருள் கற்பனைச் சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுவதுடன் மேலும் அவை 7 வருட காலத்திற்குள் பணமதிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**3.1.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிரயங்கள்**

ஆராய்ச்சிக் கிரயங்கள் ஏற்பட்டதாக செலவழிக்கப்பட்டன. தனிப்பட்ட செயற்திட்டங்கள் மீது அபிவிருத்திச் செலவினங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்முறைப் பயிற்சியளிக்க முடிந்த போது கற்பனைச் சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

- சொத்துக்கள் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கொ கிடைக்கும் என்று கற்பனைச் சொத்துக்களை முழுமையாக்குகின்ற தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கை.
- முழுமையாக்குவதற்கான அதன் செயல்திட்டமும் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அதன் இயலுமை.
- சொத்துக்கள் எதிர்காலத்தில் எப்படி பொருளாதார நலன்களை ஏற்படுத்தும்.
- சொத்துக்களை முழுமையாக்குவதற்கு வளங்களின் கிடைப்பனவு
- அபிவிருத்தியின் போது உண்மைத்தன்மையான செலவினத்தை அளவிடுவதற்கான இயலுமை.

சொத்தாக பின்வரும் ஆரம்ப பெறுதி குறைப்பு அபிவிருத்திச் செலவினம், சொத்துக்களை கிரயக் கழிவின் திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி முழுமையாக்கும் போது சொத்துக்களின் தீர்ப்பனவு ஆரம்பிக்கின்றதுடன் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நன்மைகளின் காலத்திற்கு மேலாக தீர்க்கப்பட்டிருந்தது. கடன் தீர்ப்பனவு விற்பனைக் கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. அபிவிருத்திக் காலத்தின் போது சொத்துக்கள் வருடாந்த பெறுமதிக் குறைப்பிற்காக பரீட்சிக்கப்பட்டது.

**3.1.7 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் சொத்துக்கள் கட்டாயமாக பெறுமதி குறைக்கப்பட வேண்டுமெ‍ன குறிப்பிடப்படடுள்ளதா எனவும், குறிப்பாக அவ்வாறு இருக்கையில், அல்லது கையேற்கப்பட்ட சொத்துக்களிற்காக வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பின் போது, சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிடுகின்றது. சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை சொத்துடமையாளருடைய அல்லது விற்றுக் காசு உருவாக்குகின்ற பிரிவினுடைய (சிஜீயூ) சந்தைப் பெறுமதி கழித்த பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் அதன் பெறுமதி உயர்வாகவுள்ளமையால் தனிப்பட்ட சொத்தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இல்லையேல், ஏனைய சொத்துக்களிலிருந்து தனித்துவப்படுபவையா அல்லது சொத்துக்களின் தொகுதி பெருமளவு தனித்துவமாக உள்ளதா என காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சொத்துக்கள் உருவாக்கியிருக்கவில்லை. சொத்துக்கள் அல்லது சீஜீயூ இன் முற்கொண்டுவரும் தொகை அதன் அறவிட வேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. சொத்துக்கள் மெறுமதி குறைத்து மதிப்பிட கருத்திற்கொள்ளப்பட்டதுடன் அதன் அறவிட வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பணப்பெறுமதி மதிப்பிடுகையில் தற்போதைய சந்தைப் பெறுமதி தாக்கம் மற்றும் சொத்துக்களிற்கான குறிப்பிடத்தக்க ஆபத்துக்களென வரிக்கு முன்னரான கழிப்பனவை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய தற்போதைய பெறுமதிக்கு கழிவுவழங்கப்படுகின்றன. விற்பனை செய்வதற்கு நியாயபெறுமதி குறைவு கிரயங்களை நிர்ணயிக்கையில், அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. அதேவேளையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இனங்காண முடியாதுள்ளது. முறையான பெறுமதியிடல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**3.2.1 பொருளிருப்புக்கள்**

பொருளிருப்புக்களின் மதிப்பு கிரயத்தில் பதியப்படுவதுடன் தேறிய உண்மையான பெறுமதி ஏதாயினும், பழுதடைந்தவற்றிற்கான நிலுவை படிகளை செய்த பின்னர் குறைவாக உள்ளவற்றுடன் மெதுவாக அசையும் விடயங்கள் முதல் வந்து முதல் செல்லல் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தது. தேறிய உண்மையான பெறுமதி சாதாரண வியாபாரத்தின் போது, முழுமையாக்கலின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கழிப்பனவு மற்றும் அவசியமான விற்பனைகளைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் என்பவற்றின் விற்பனை விலையை மதிப்பிடப்பட்டுள்ளது.

**பொருளிருப்பின் அளவீடு**

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**3.2.2 பொருளிருப்பின் கிரயங்கள்**

**மூலப் பொருட்கள்**
ஏதாவது இடைநேர் செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுக் கிரயம்

**ஏனைய இருப்புக்கள்**
கிரயம் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் அமைந்துள்ளது.

**3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்**

காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, இடைப்போக்கிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் நிலுவையாகவிருக்கின்ற தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது.

**4 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் உரிமை மூலதனம்**

**4.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்பு**

**4.1.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்புக்கள் (எல்கேஏஎஸ் 19)**

**(அ) பிற்போட்ட நலத் திட்டம்- பணிக்கொடை**

இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 எல்கேஏஎஸ் 19) உடன் இணங்கி சகல ஊழியர்களும் சேவையாற்றிய முதலாவது ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் விலை மற்றும் அவற்றின் கடமைகளின் விளக்கக்காட்சி மதிப்பு ஆகியவை உண்மையான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. தள்ளுபடி விகிதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள், இறப்பு விகிதங்கள் பற்றிய அனுமானங்களைச் செய்வதை உண்மையான மதிப்பீடு உள்ளடக்குகிறது. இந்தத் திட்டங்களின் நீண்ட கால இயல்பு காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளது. ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் அனைத்து அனுமானங்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. பொருத்தமான தள்ளுபடி விகிதத்தை நிறுத்துவதில், வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமையின் எதிர்பார்க்கப்படும் காலப்பகுதியுடன் தொடர்புடைய முதிர்வுகளுடன் கூடிய இலங்கை அரசாங்கப் பத்திரங்களின் வட்டி விகிதங்களாகக் கருதப்படுகிறது. இறப்பு விகிதம் பொதுவில் கிடைக்கும் அறநெறி அட்டவணைகளை அடிப்படையாகக் கொண்டது. ஏதிர்கால சம்பள உயர்வுகள் சபையின் எதிர்பார்க்கப்படும் சம்பள உயர்வு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது.

**(ஆ) ஓய்வூதிய நலக் கிரயம்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டமொன்று செயற்படுகின்றதுவரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கிரயங்கள் செயற்படுத்தப்பட்ட கடன் முறை பிரிவு பயன்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்திற்கான உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில்

அவை ஏற்பட்டிருந்த காலத்தில் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகை உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் நிறுத்திவைத்த இலாபங்களிலும் உடனடியாக அனுமதிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டங்ளிற்கு மீள வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் நன்மைகளாக வரையறுக்கப்பட்டிருந்த இதுவரையான சராசரி காலத்தினை விட நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. கடந்த சேவைக் கிரயங்கள் பின்வரும் உள்ளடக்கங்களின் அல்லது மாற்றங்களிற்கு அல்லது ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே நன்மைகளை வைத்திருந்தால் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்தன.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

வரையறுக்கப்பட்ட நலச் சொத்து அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட நல கடமைப் பொறுப்புக்களின் (பெறுமதி உயர்ந்த தர ஒன்றிணைந்த பிணைகளின் அடிப்படையில் கழிவு வீதம் பயன்படுத்துகின்றது) தற்போதைய பெறுமதியைக் கொண்டுள்ளது. கடமைப்பொறுப்புக்களில் திட்டச் சொத்துக்களின் கழிவு அனுமதிக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் மற்றும் கடமைப்பொறுப்புக்களிலுள்ள சொத்துக்களின் நியாயப் பெறுமதி தீர்ப்பனவு செய்யவேண்டியுள்ளது. திட்டச் சொத்துக்கள் நீண்ட கால ஊழியர் நலன்புரி நிதியம் அல்லது தரமதிப்பீட்டு காப்புறுதி கொள்கைகள் என்பவற்றின் மூலம் இடம் பெற்றிருந்த சொத்துக்கள்

உள்ளன. திட்டச் சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன்கொடுத்தோருக்கு கிடைத்திருக்கவில்லை அல்லது அவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நேரடியாக செலுத்த முடிந்திருக்கும். ஏதாவது அங்கீகரித்த நிர்ணயித்த நலன்புரிச் சொத்துக்கள் ஏதாவது அங்கீகரிக்கப்பட்டிருக்காத கடந்த சேவைக் கிரயங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் திட்டத்திலிருந்தான மீளளிப்பிலிருந்து கிடைத்த ஏதாவது பொருளாதார நன்மைகளின் தற்போதைய தொகை அல்லது திட்டத்திற்கு எதிர்காலத்தில் பங்களிப்பை குறைத்தல் என்பன மூலம் மீளமைக்கப்பட்டிருந்தது.

**நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்- ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி**

ஊழியர்கள் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பஙகளிப்புகளிற்கு தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்களாக முறையே 12 % மற்றும் 3 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

**4.2 ஏற்பாடுகள்**

**பொதுவானது**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நடந்துமுடிந்த நிகழ்வின் விளைவாக சட்ட அல்லது நிர்ணயிப்புகளை மீறியிருந்த போது (சட்டம் அல்லது கட்டளைச்சட்டம்) ஏற்பாடுகளை அனுமதித்திருந்தது. ஐந்தொகையில் ஏற்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் பொருளாதார நலன்களின் வெளியீடு அதன் இலாபத் தன்மை மீறல்களை சரிசெய்வதற்கு வேண்டுகை செய்ய வேண்டிதுடன் உண்மையான மதிப்பீடொன்றினை மீறிய தொயினையும் செய்ய முடியும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சில அல்லது சகல ஏற்பாடுகளையும் எதிர்பார்க்கப்படுகின்ற போது மீள்நிதியிடப்பட வேண்டியிருந்தது. உதாரணமாக, காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் மீள்நிதியிடல் சொத்துக்களை புறம்பாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், குறித்த சில மீளளிப்புகள் நிலைக்குத்தாக மாத்திரமுள்ளது. நிதிநேற்பாடுகளுடன் தொடர்புபட்ட செலவினம் ஏதாவது தேறிய மீளளிப்பினை வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4.3 அரசாங்க மானியங்கள்**

மானியங்கள் பெறப்பட வேண்டியதுடன் சகல நிபந்தனைகளுடன் இணங்கியிருக்க வேண்டுமென பொருத்தமான காப்பீடு உள்ள அரசாங்க மானியங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் செலவினங்களுடன் தொடர்புபடுகின்ற போது, இழப்பீடு வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கிரயங்களே செலவழிக்கப்பட்டுள்ளதென குறித்த காலத்திற்கு மேலாக முறையான அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது. மானியங்கள் சொத்துக்களுடன் தொடர்புபடுகின்ற போது தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலாக சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பணமல்லாத மானியங்கள் பெறப்படுகின்ற போது, சொத்துக்கள் மற்றும் மானியங்கள் நியமத்தொகையில் பதியப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைப் பணங்கள் மூலம் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் நலனின் இழப்பீட்டு மாதிரியில் எதரிபார்க்கப்பட்ட பயன்பாட்டு காலத்திற்கு மேலானவை இலாபம் அல்லது நட்டங்ளிற்கு விடுவிக்கப்பட்டது. கடன்கள் அல்லது சிற்சில உதவிகள் தற்போதைய பொருத்தமான சந்தை வீதத்திற்கு கீழான வட்டி வீதத்துடன் அரசாங்களால் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டன. இச் சாதகமான வட்டியின் தாக்கம் அரசாங்க மானியமாக தொடர்புபடுத்தப்பட்டது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

இலக்கம் 20/0974/204/029 – VI இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக பொது திறைசேரியின் மூலம் 15 வருட காலத்தின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள வசதிகளை கடன் தொகைகளினால் ஏற்படத்தக்க வட்டி மற்றும் ஏனைய செலவுகளை ஈடு செய்வதற்காக றேளுனுடீ இன் நிமித்தம் பங்குசார் பங்களிப்பாக தேவைப்படுகின்ற வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறான கடன் தொகைகளின் மூலதன பகுதிகள் பங்கு அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளதுடன், LKAS ற்கு பொருத்தமாக வட்டி ஆக்கக் கூறுகளானது வருமான வழங்கீடாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**5. வருமான கூற்று**

வருமானக்கூற்று சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, செலவின முறையின் செயற்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயலாற்றலின் நிகழ்வுகள் நியாயமாக சமர்ப்பிக்கின்றது.

**5.1.1 வருமான அங்கீகரிப்பு**

சபைக்கு பொருளாதார நலன்கள் பாய வேண்டுமென அதன் இலாபத்தன்மையை விரிவாக்குவதற்கு வருமானம் அங்கீகரிக்கப்பட்டதுடன் கொடுப்பனவுகள் செய்கின்ற போது பொருத்தப்படுத்தப்படும் வருமானம் நம்பகமாக அளவிடப்பட்டது. வருமானம் கணக்கிற்குள் எடுக்கப்படுகின்ற கொடுப்பனவுகளின் ஒப்பந்தரீதியாக வரையறுத்த நிபந்தனைகளிற்குள் பெறப்பட்டவை அல்லது பெறவேண்டியவையை கருத்திற்கொள்ள வேண்டிய நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது.

**பொருள் விற்பனைகள்**
பொருட்களின் உரித்து சார்ந்த தீமைகள் மற்றும் நன்மைகளில் குறிப்பிடத்தக்க அளவு கொள்வனவு செய்வபருக்கு குறித்தொதுக்கியுள்ள விடத்தும் மற்றும் பொதுவாக பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ள போதும் பொருள் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்படும்

**தண்ணீர் விற்பனை வருமானங்கள்**
குறிப்பிடத்தக்க ஆபத்துக்களின் போது பொருள் விற்பனைகளலிருந்தான வருமானங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன் பொருட்களின் உரிமையாண்மை வழங்கல் வழமையாக பொருட்களின் விநியோகத்தில் வாங்குவோருக்கு ஒப்படைக்கப்பட்டது.

**ஏனைய வருமானங்கள்**
ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது.

**வட்டி வருமானங்கள்**

திரட்டிய கிரயத்தில் அளவிடப்பட்ட சகல நிதிக் கருவிகள் மற்றும் விற்பனைக்காக கிடைக்கக்கூடியவாறு வட்டி வருமானம் அல்லது செலவினம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு கொடுப்பனவுகளை உண்மையான வட்டிக் கழிவிலுள்ள ஆக்கபூர்வமான வட்டியை (ஈஐஆர்) பயன்படுத்தி அல்லது நிதிக் கருவிகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலம் அல்லது குறுகிய காலம் ஊடாக பெறுவனவுகள் பதியப்பட்டது. உரியவாறு நிதிச் சொத்தின் தேறிய முற்கொண்டுவரப்படுவதற்கு, வட்டி வருமானம் வருமானக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**மீளஅறவிடு செய்ய வேண்டிய வேலைகள்**

நிர்ணயிக்கப்பட்ட விலை குறிப்பிடப்பட்ட நிர்மாண ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானமானது ஒப்பந்தம் முழுமையாக நிறைவடைந்ததன் பின்னரே கண்டறியப்படும்.

**5.1.2 செலவினங்கள்**

வியாபார செயற்பாட்டில் ஏற்பட்ட சகல வருமானங்களும் ஆண்டிற்கான இலாபத்தில் எழுகின்ற வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்கள் செலவினம் ஏற்பட்டுள்ள ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**5.2 பிற்போட்ட வரி**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமான வரியை செலுத்துவது நிச்சயமற்றதாவதுடன், அதன் விளைவாக கணக்குகளில் பிற்போட்ட வரி சொத்துக்கள்/பொறுப்புக்கள் கண்டறியப்படவில்லை.

**6. நிதிக் கருவிகள்- ஆரம்ப அங்கீகாரம் மற்றும் பிற்போட்ட அளவீடு**
**6.1 நிதிச் சொத்துக்கள்**
**6.1.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

எல்கேஏஎஸ் 39 இன் நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டங்கள், பெறவேண்டியவை, முதிர்ச்சியடைகக்கூடிய முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக கிடைத்த நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஒதுக்கிய மற்றும் நிர்ணயித்தலை என்பவற்றின் வாயிலான சந்தைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

சகல நிதிச் சொத்துக்களும் இலபங்கள் அல்லது நட்டங்கள், நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் என்பவற்றின் ஊடாக சந்தைப் பொறுமதியில் சொத்தல்லாதவையின் சந்தைப் பெறுமதியை கூட்டி அரம்பத்தில் அனுமதிக்கப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிச் சொத்துக்கள் காசு, மற்றும் குறுகியகால முதலீடுகள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பதவியணியினர் கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை உள்ளடக்குகின்றது.

**6.1.2 தொடர்ந்துவருகின்ற அளவீடு**

நிதிச் சொத்துக்களின் பின்தொடர்ந்துவருகின்ற அளவீடுகள் பினவருமாறு அவற்றினுடைய வகைப்படுத்லில் தங்கியுள்ளது.

**6.1.2.1 நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டங்கள் ஊடாக நியாயப் பெறுமதியில்**

நிலையான சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் வியபாரத்திற்காக இடம்பெற்ற நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குவதுடன் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் அரம்ப அங்கீகாரத்தின் மீது நிதிச் சொத்துக்கள் வடிவமைக்கப்பட்டது. நிதிச் சொத்துக்கள் குறுகிய காலத்தில் அவை விற்றல் அல்லது மீள்கொள்வனவு நோக்கத்திற்காக கையேற்கப்பட்டிருக்கையில் வியாபாரத்திற்காக இடம்பெற்றவையாக வகைப்படுத்தப்பட்டன. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முந்தய ஆண்டுகளில் இலாபம் அல்லது நட்டங்களின் ஊடாக சந்தைப் பெறுமதியில் எந்தவொரு நிதிச் சொத்துக்களையும் வைத்திருக்கவில்லை.

**6.1.2.2 நிதி சொத்துக்கள் பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட கிரயம்**

ஒப்பந்த நிதிச் சுழற்சியை சேகரிப்பதற்காக தக்க வைத்துக்கொண்டுள்ள சொத்துக்கள், குறித்த ஒவ்வோரு நிதிச் சுழற்சிகளும் அசல் மற்றும் வட்டியினை மாத்திரம் செலுத்தும் வகையில் பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட கிரயமாக அளவிடப்பட்டுள்ளது. கீழ் காணப்படும் நிபந்தனைகள் இரண்டையும் பூர்த்தி செய்துள்ளவிடத்து தே.நீ.வ.ம.வ. சபையின் நிதி சொத்துக்கள் பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட கிரயமொன்றின் ஊடாக அளவிடப்படுகின்றது. (i) ஒப்பந்த நிதிச் சுழற்சியை சேகரிப்பதற்காக நிதிச் சொத்துக்களை தக்க வைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் நிதி சொத்துக்கள் அனைத்தும் வியாபார மாதிரியொன்றினுள் தக்க வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், (ii) நிதி சொத்துக்களின் ஒப்பந்த விதிமுறைகளின் மூலம நிதிச் சுழற்சிக்கான குறிப்பிடப்பட்ட திகதிகள் தோற்றம் பெற்றுள்ளதுடன் அவை முற்றிலும் கொடுப்பனவுகளாகும். பிரதானமான மற்றும் மீதமாயுள்ள பிரதான நிதிக்கான வட்டி. பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட செலவினங்ளுக்காக நிதி சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டி முறையை பயன்படுத்தி அளவிடப்படுவதுடன், அவை குறைபாடுகளுடன் கூடியதாகும். சொத்துக்களை கண்டறியாதவிடத்து, மாற்றங்களை மேற்கொள்ளுமிடத்து அல்லது வலுக்குறைவடையுமிடத்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்படும். தே.நீ.வ.ம.வ. சபையின் நிதி சொத்துக்களை பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட கிரயத்திற்கு வணிக ரீதியிலான வரவுகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் போன்றவை உள்ளவாங்கப்பட்டுள்ளது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**6.1.2.3 பிற விரிவான வருமானத்தின் ஊடாக நியாயமான மதிப்புடன்கூடிய நிதி சொத்துக்கள்**

ஒப்பந்த நிதிச் சுழற்சியை சேகரித்தல் மற்றும் நிதி சொத்துக்களை விற்பனை செய்வதற்காக வைத்துக்கொண்டுள்ள சொத்துக்கள், சொத்துக்களின் நிதிச் சுழற்சிகள் அசல் கொடுப்பனவுகள் மற்றும் வட்டி கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், FVOCI இன் மூலம் அளவிடப்படுகின்றது. கீழ் காணப்படும் நிபந்தனைகள் இரண்டையும் பூர்த்தி செய்துள்ளவிடத்து தே.நீ.வ.ம.வ. சபை OIC இன் மூலம் நியாயமான மதிப்புடன் கடன் ஆவணங்கள் அளவிடப்படும். (i)ஒப்பந்த நிதிச் சுழற்சியை சேகரித்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய இரண்டினையும் நோக்கமாக கொண்டு நிதி சொத்துக்களை வணிக மாதிரியொன்றினுள் வைக்கப்பட்டுள்ளது; (ii) நிதி சொத்துக்களின் ஒப்பந்த விதிமுறைகள் குறிப்பிடப்பட்ட திகதிகளில் நிதிச் சுழற்சியை அதிகரிக்கின்றது. இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறிந்துகொண்ட குறைபாடுகள் இலாபம் அல்லது நட்டம், வட்டிசார் வருமானம் மற்றும் வெளிநாட்டு செலாவணி இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிவது தவிர்ந்த, அசையும் நிதியின் அசைவுகள் OIC இன் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும். நிதி சொத்துக்களை கண்டறியாதவிடத்து OIC இனால் முன்னர் கண்டறிந்த திரளான இலாபம் அல்லது நட்ட பங்குகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீண்டும் வகைப்படுத்தப்பட்டு ஏனைய இலாபம் அல்லது /(நட்டம்) அதனுள் கண்டறியப்படும். இந்த நிதி சொத்துக்களின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டிசார் வருமானத்தை பயனுள்ள வட்டி வீத முறையை பயன்படுத்துவதன் ஊடாக அவற்றை நிதிசார் வருமானத்திற்குள் உள்வாங்கப்படும். வெளிநாட்டு செலாவணியின் ஊடாக கிடைக்கப்பெறும் ஆதாயம் மற்றும் நட்டம் ஏனைய இலாபம் /(நட்டம்) இல் முன்வைக்கப்பட்டுள்ளது. வருமானக் கூற்றில் வலுக்குறைவான செலவினங்கள் தனியானதொரு நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடன் தொகை வழங்கும் நடவடிக்கையானது அமைச்சரவை தீர்மான இலக்கம்: 16/0158/719/005 இன் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதில் நகர நீர் வழங்கல் திட்டங்களுக்காக மூலதனத்திலிருந்து 50% மற்றும் வட்டி, கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் 75% மற்றும் கழிவுநீரமைப்பு மற்றும் கழிவுநீர் திட்டங்களில் 100% வீதம் திறைசேரியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**6.1.2.4 அங்கீகார மறுப்பு**

ஒரு நிதிச் சொத்து (அல்லது ஒரு நிதிச் சொத்துக்களின் பொருத்தமான ஒரு பகுதி அல்லது அதே நிதிச் சொத்துக்களின் தொகுதியின் ஒரு பகுதி) அனுமதி மறுக்கப்பட்டுள்ளது போது,

i) சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகியிருந்தது.
ii) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமைகள் மாற்றப்பட்டிருந்தது அல்லது ஒழுங்கமைப்புகளுடாக தேர்ச்சியின் கீழ் மூன்றாவது பகுதியல்லாத விடயங்களின் தாமத்தில் காசுப் பாய்ச்சலை பெற்று செலுத்துவதற்கு கடப்பாடு போலியாகவிருந்தது. மற்றும்,

(அ) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களின் சகல ஆபத்து மற்றும் விமோசனங்களின் பின்னர் மாற்றப்பட்டிருந்தது.
(ஆ) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களின் சகல ஆபத்து மற்றும் விமோசனங்களின் பின்னர் மாற்றப்படடோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்டோ இருந்தது, ஆனால், சொத்துக்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டிருந்தது.

**6.1.2.5. நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு**

நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி பெறுமதிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதென்பதற்கு ஏதாவது நோக்கச் சான்றுகள் உள்ளதா என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடுகிறது. நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி குறைத்து மதிப்பிடப்பட வேண்டுமென மதிப்பிட்டுள்ளது மற்றும் இவ்வாறிருக்கையில், ஒன்று அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக பெறுமதிக் குறைப்புக்கான நோக்கச் சான்றுகள் உள்ளது அது சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரத்திற்கு பின்னர் ஏற்பட்டிருந்ததுடன் நட்ட நிகழ்வுகள் உண்மையாக மதிப்பிட முடியுமன்று நிதிச் சொத்து அல்லது நிதிச் கொத்துக்கள் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்சல் மீது தாக்கமிருந்தது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**
2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது



பெறுமதிக் குறைப்புச் சான்று குறிகாட்டிகளை கட்டயமாக உள்ளடக்க வேண்டும் அதாவது கடன்பட்டோர் அல்லது கடன்பட்டோரின் ஒரு தொகுதி போதிய நிதிக் கஸ்ரங்கள், புறைபாடு அல்லது வழுக்கள், இலாபத்தன்மை என்பவற்றை அனுபவித்துள்ளது, அதாவது கடனைத் தீர்க்க வகையற்ற நிலை அல்லது ஏனைய நிதி அங்கீகாரங்கள் மற்றும் குறைபாடுகளை ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிலுவைகள் அல்லது பொருளாதார நிலை மாற்றங்கள் போன்ற அத்தகைய, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய வீழ்ச்சியாகவுள்ள அவதானிக்கக் கூடிய தரவு குறிகாட்டிகள் நுழையும்.

**6.2 நிதிப் பொறுப்புக்கள்**

**ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்**

எல்கேஏஎஸ் 39 இன் நோக்கெல்லைக்குள் நிதிப் பொறுப்புக்கள் தாக்க எல்லையில் பதிவேடு வரையறுப்பவையாக இலாபம் அல்லது நட்டத்தில், நிலையான கிரயத்தில் அல்லது ஆரம்பத்திலிருந்து வடிவமைக்கப்பட்டவற்றின் ஊடாக சந்தைப் பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டன. உரியவாறு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை நிர்ணயிக்கிறது.

சகல நிதிப் பொறுப்புக்களும் சந்தைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கடன்கள் சூழுகின்ற போதும் கடன் பெறுகின்ற போது நிலையான கிரயத்தில் ஏற்பட்டன. இது உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை நேரடியாக உள்ளடக்குகிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிப் பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளை உள்ளடக்கியது.

**பிற்போட்ட அளவீடு**
நிதிப் பொறுப்புக்களின் பிற்போட்ட அளவீடு நிலையான கிரத்தில் உள்ளன.

**செயலற்ற அங்கீகாரம்**

நிதிப் பொறுப்பொன்று சுமத்தப்பட்ட அல்லது இரத்து செய்யப்பட்ட அல்லது காலாவதியான பொறுப்புக்களின் கீழ் நழுவும் போது செயலற்ற அங்கீகாரத்தில் உள்ளன.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

2023 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | உள்ளபடியானது | மீண்டும் கூறப்பட்ட மீதி |
|---|---|---|---|
| | | 2023 | 2022 |
| | | ரூபா | ரூபா |
| **7 வருமானம்** | | | |
(இ) சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிகளிற்கும் உரிய ஏழு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 17,333 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் மூலதன பங்களிப்பு தொடர்பில் பொது திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 10,770 மில்லியனான வித்தியாசம் இனங்காணப்பட்டது.

(உ) இருப்பு விடயங்களின் வகைப்படுத்தல் தொடர்பில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலுள்ள மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 153 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா மில்லியன் | கிடைக்கப்பெற்றிராத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய கடன்பட்டோர் | 79 | தலைமை அலுவலகத்தில் ஏனைய கடன்பட்டோருக்காக வாடிக்கையாளர் வாரியான விரிவான பட்டியல், வாடிக்கையாளர் சொத்து முகாமைத்துவம், பிராந்திய ஆதார நிலையங்கள்- கொழும்பு- வடக்கு, முகாமையாளர் அலுவலகம்- திருகொணமலை மற்றும் தெகிவளை |
| (ஆ) | நகராத மற்றும் மெதுவாக நகராத இருப்புகள் | 1,655 | காலப்பகுப்பாய்வு |
| (இ) | ஏனைய நிறுவனங்களிலுள்ள குறுகிய கால வைப்புகள் | 5 | விரிவான பட்டியல்கள் மற்றும் உள்ள தன்மைக்கான காரணங்கள் |
| (ஈ) | பிடித்துவைத்தல் வரி | 112 | விரிவான பட்டியல்கள் மற்றும் சான்றிதழ்கள் |
| (உ) | புனரமைப்பு வரி | 2 | விரிவான வரிக் கணிப்பீடு, பட்டியல் |
| (ஊ) | திறைசேரி மானியங்கள் | 137 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் |
| (எ) | மூலதன மானியங்கள்- உள்ளூராட்சி அதிகாரசபை | 544 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் |
| (ஏ) | வெளிநாட்டு மானியங்கள் | 7,232 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

ஏனைய தகவல்கள் சபையின் 2023 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் (வரைவு வருடாந்த அறிகை) அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது. பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்காக கூட்டிணைந்த ஆளுகைகள் மீதான வழிகாட்டல்களின் பிரகாரம் பின்வரும் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) பொருளாதார பெறுமதி சேர்க்கப்பட்ட ஆளுகை மீதான கூற்று

(ஆ) ஆண்டறிக்கை பிரகாரம், சபையானது சுதந்திரமான நிறைவேற்றல்லா பணிப்பாளர்களை மாத்திரம் கொண்டுள்ள போதிலும் இங்கு நிறைவேற்று மற்றும் நிறைவேற்றல்லா பணிப்பாளர்கள் உள்ளனர்.

(இ) முன்னைய பத்து ஆண்டுகளிற்கு பதிலாக ஒன்பது ஆண்டுகளின் நிதிச் சுட்டிக்காட்டல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன்

காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி

வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் சபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 1.2.1(அ), 1.2.1(ஆ), 1.2.1(இ), 1.2.1(ஈ), 1.2.1(உ), 1.2.1(ஊ), 1.2.1(எ), 1.2.2(ஆ), 1.2.2(இ), 1.2.2(ஈ), 1.2.2(உ), 1.2.2(ஊ), 1.2.2(எ), 1.2.2(ஐ), 1.2.2(ஒ), 1.2.3(அ), 1.2.3(ஆ), 1.2.3(இ), 1.2.3(ஈ) ஆம் பந்தியினை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு இறுதி அறிக்கைகளில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

  (i) 1974 இன் 02 ஆம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 05 (04) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு சபையின் தலைவர் இந்த ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அக்கறையை வெளிப்படுத்தியிருக்காத போதிலும் ரூபா 73 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் சூரியமின்சக்தி முறைமை கொள்வனவிற்காக சபையின் தலைவருடன் நேரடியாக தொடர்புபட்டிருந்த கம்பனிக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் கொள்வனவு குழுவை சபையின் தலைவர் வகித்திருந்தார்.

  (ii) பணிப்பாளர்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டிய போதிலும் சபையின் முன்னாள் பொது முகாமையாளர் 2023 ஒக்தோபரிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் ஆளுகைச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின போது அவருக்கு ரூபா 6.25 மில்லியன் ஓய்வூதிய நலன்கள் வழங்கப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| சட்டங்கள் / நெறிப்படுத்தல்களிற்கான தொடர்பு | விபரங்கள் |
| --- | --- |
| (அ) 2017 இன் உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம். | |
| பிரிவு 03 | ஒவ்வொரு வளங்களிலிருந்து மதிப்பிடக் கூடிய வருமானம் புறம்பாக கணப்பீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | பிரிவு 91 | 2023/2024 வரிமதிப்பீட்டு ஆண்டின் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமான வரி அறிக்கை 2023 ஆகஸ்ட் 15 இல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு அதிகாரச் சட்டத்தின் 83(1ஏ) ஆம் பிரிவு மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் (திருத்தம்) மற்றும் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் (திருத்தம்) மற்றும் 2022 திசெம்பர் 28 ஆந்திகதிய 2312/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தல் | 2023 ஆம் ஆண்டில் APIT வரி மீதான வரி பொறுப்பு ஊழிய வருமானம் கணப்பீடு செய்யும் போது சபையானது மருத்துவ காப்பீட்டு படி, தொலைபேசி படி, பிரயாணபடி மற்றும் சுற்றுலா விடுதி செலவு என்பவற்றினை கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களின் 571 ஆம் பிரிவு | ரூபா 219 மில்லியன் தொகையான மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புகள் உரிய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டோ அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டோ இருக்காமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. |
| (ஈ) | 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகளின் அரச உமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூல் | |
| | (i) பந்தி 3.5 | மீளாய்வாண்டின் போது சபையானது உரிய அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட பதினைந்து ஊழியர்களிற்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக 2023 திசெம்பர் 31 அளவில் ரூபா 24.34 மில்லியன் செலுத்தியிருந்தது. இதன்படி, 2015 திசெம்பர் மாதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக |

சபைக்கு ரூபா 263.33 மில்லியன் மீளளிக்க வேண்டியிருந்தது. அமைச்சு அலுவலகத்தில் அனுமதிக்கப்பட்ட பதவியணியை நிரப்பபட்டிருந்த போதிலும் அமைச்சு அலுவலகத்திற்கு உரிய அமைச்சால் பதினைந்து ஊழியர்களில் நான்கு ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

2020 இலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை தலைவர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக சம்பளங்களாக அறவிடப்படாமல் ரூபா 5 மில்லியன் தொகை செலுத்தப் பட்டிருந்தது. மேலும், 2022 யூலை 22 இலிருந்து சம்பளங்கள் செலுத்தப்படாமல் பிரதம மந்திரி அலுவலகத்திற்கு ஒரு ஊழியர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

மேலும், உரிய அமைச்சிற்கு ரூபா 66.47 பெறுமதியான ஆறு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 39.26 மில்லியன் பெறுமதியான ஒரு வாகனம் 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் இறக்குமதி செய்த நேரத்தில் உரிய அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த வாகனங்கள் 2023 சனவரி 20 இல் சபையின் அனுமதியோ அல்லது அனுசரனையோ இல்லாமல் உரிய அமைச்சால் சுகாதார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) பந்தி 5.1

இந்த ஏற்பாட்டிற்கு முரணாக, திரண்ட நிதியத்திற்கு இலாபம் பகிரப்படாமல் சபையின் அனுமதியின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்திற்கு

| | | |
|---|---|---|
| | | பதிலாக உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 287.85 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேல், மீளாய்வாண்டின் போது சம்பளங்களுடன் மாதாந்த உற்பத்திப் படியாக ஊழியர்களிற்கு ரூபா 471.39 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | (iii) பந்தி 6.2 | கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆண்டொன்றிற்கான வருமானம் ரூபா 30 பில்லியனை விஞ்சியிருந்த போதிலும், முதலீட்டுக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2021 நவம்பர் 16 இன் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகையின் 2.1 ஆம் பந்தி | சபை பணிப்பாளர்களை அறிமுகப் படுத்துவதற்கும் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு நோக்கங்கள் போதிய கவனத்தடன் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கட்டுப்பாடுகளை பேணுவதற்கு வேண்டப்பட்ட போதிலும் சபை பணிப்பாளர்களிற்கு அறிவிக்காமல் பொது முகாமையாளரால் சபையின் தலைவருக்கு கூட்டு தொடர்புக் கிளையை கையளித்திருந்தார். |
| (ஊ) | 2006 செப்தெம்பர் 22 ஆந்திகதி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டு கைநூலின் 3.2(i) ஆம் பிரிவு மற்றும் DMS பணிப்பாளர் நாயகத்தின் 2011 மே 23 ஆந் திகதிய DMS/E2/19/4/064 ஆம் இலக்க கடிதம் | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக 2024 மார்ச் இறுதிவரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் 2012 சனவரி 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம். | சபையானது ஊழியர்களுடன் சேகரிப்பு உடன்படிக்கைக்குள் நுழையாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அமைச்சரவை அனுமதியுடன் மாத்திரம் ஊழியர்களிற்காக வேதனங்கள் மற்றும் மிகையூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை | பொது முகாமையாளருக்காக ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு 2023 ஏப்ரல் 12 இல் விபத்து நிகழ்ந்திருந்த போதிலும் சபையானது 2023 திசெம்பர் 31 இல் பொது திறைசேரியில் அரச நிதி திணைக்கள பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு அந்த வாகன விபத்து மீது ரூபா 13 மில்லியனான மதிப்பிடப்பட்ட நட்டம் அறிக்கையிடப் பட்டிருந்தது. மேலும், விபத்தானது நீதி மன்ற வழக்கு தீர்ப்பு இல. 59629/23 படி வாகனம் ஓட்டுவதில் கவனயீனம் காரணமாக நிகழ்ந்திருந்தாக இருந்த போதிலும் ஆரம்ப அறிக்கையோ அல்லது முழு அறிக்கையோ சபையால் நி.பி 104(3,4) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | |
| | (i) 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | பொது திறைசேரி செயலாளரிடமிருந்து விசேட அனுமதி பெற்றுக்கொள்ளாமல் சபை தீர்மான இல. 5/15/2022-898 இன் பிரகாரம் சபையின் வாகனக் கொள்கையின் கீழ் ஒருவருக்கு ஒரு வாகனம் ஒதுக்குவதற்கு பதிலாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தலைவர் மற்றும் உப தலைவருக்கு இரண்டு வாகனங்கள் வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 01/2021 இன் 3.2.2 | பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக் கொள்ளமல் சபையானது 2022 சனவரி |

முதல் 2023 யூலை வரையான காலத்தின் போது மேலதிக பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்போரின் பாவனைக்கு 23,313 லீற்றரை விஞ்சி ரூபா 7.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

சபையானது பொது திறைசேரியின் விசேட அனுமதி பெற்றுக்கொள்ளாமல் 1990 ஆம் ஆண்டிலிருந்து 15 கிலோ மீற்றறிற்கு ரூபா 2 வீதத்தில் சலுகை அடிப்படையில் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அலுவலக நேரத்தின் பின்னர் மற்றும் விடுமுறை நாட்களில் மேலதிக பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் முகாமையாளர்கள் என்போருக்கு சபை வாகனங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, சபையானது 2022 சனவரியிலிருந்து 2023 யூலை வரை 13 ஊழியர்களின் தன்பட்ட பயன்பாட்டிற்காக 12,010 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 4 மில்லியன் சபையினுடைய நிதிகளை தவறாக பயன்படுத்தப்பட்டிருந்ததென கணக்காய்வு மாதிரி செவ்வையில் வெளிப்பட்டது.

(iii) 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015(ii)

சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் சுற்றறிக்கைக்கு முரணாகவும் 2021 சனவரியிலிருந்து பொது திறைசேரி செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமலும் மாதம் ஒன்றிற்கு 145 லீற்றரிற்கு பதிலாக அசைச்சரின் அனுமதியுடன் வரையறையற்ற எரிபொருள்களை பயன்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், 01/2015 ஆம் இலக்க PED சுற்றறிக்கையின் 3.2.1 ஆம் பந்திக்கு முரணாக. 2022 சனவரி முதல்

2023 யூலை வரையான காலத்தின் போது தலைவரால் மிகையாக பயன்படுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான 5,806 லீற்றரிற்கும் உப தலைவரால் பயன்படுத்தப்பட்ட ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான 6,393 லீற்றரிக்கும் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், உப தலைவருக்கு ஒதுக்கப்பட்ட PK 3575 ஆம் இலக்க வாகனம் பொது முகாமையாளர் மற்றும் ஆளுகை சபைக்கு அறிவிக்காமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெளித் தரப்பினாரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதியில் வாகனம் 13,698 கிலோ மீற்றர் ஓடியிருந்தது.

(ஒ) பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்

(i) 2015 ஆகஸ்ட் 12 இன் Admin/12/2015

சுற்றறிக்கை பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியல் பெறுமதி ரூபா 50,000 இற்கு மேல் மொத்த பட்டியலுள்ள 4,448 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் ரூபா 695.48 மில்லியன் கூட்டுத் தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 யூன் 06 இன் FD/72

சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு ஒரு ஆண்டிற்கு முன்னர் வழங்கல் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 1.3 மில்லியன் தொகை வழங்கப்பட்ட முற்பணங்கள் அத்திகதியிலிருந்து 14 நாட்களை விஞ்சியிருந்த போதிலும் உரிய ஊழியர்களால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கொள்வனவு வழிகாட்டல்

8.11.4/5

ரூபா 75 மில்லியன் பெறுமதியனான ஒப்பந்தம் செயற்படாமைக்கான

காரணங்கள் பற்றி ஒப்பந்தகாரரால் விளக்கப்பட்டோ அல்லது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு Sup & MM1Chem1HL-01/2021/22 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தகாரரிடமிருந்து எவ்வித எழுத்துமூல அறிவித்தலோ பெறப்பட்டிருக்கவோ இருக்கவில்லை. மேலும், சபையானது ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தவிர்த்ததினால் ஒப்பந்தத்தை மீறியமை பற்றி உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல். தவிர

(அ) பதின்நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் ஐந்து உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் 02 முதல் 08 சந்தர்ப்பங்கள் வரை கால நீடிப்பு வழங்கிய பின்னரும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், காணி பெறுவதில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், கோவிட் -19 தொற்று நோய், பொருளாதார சீர்கேடு போன்றன காரணமாக 498 முதல் 2,510 நாட்கள் வீச்சிலான கருத்திகொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் நீர் வழங்கல் செயற்திட்ட பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களை கருத்திற்கொள்கையில், செயற்திட்ட காலப்பகுதி நீடித்தல்களின் எண்ணிக்கை போன்றன ஒரே செயற்திட்டத்திற்காக நடைமுறை ஆண்டிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிற்கு இடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தவறுகள் காரணமாக, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை மற்றும் அரசாங்கம் எதிர்பாராத விதமாக

விலைவேறுபாடாக ரூபா 19,868 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. அதற்கு மேல், செயற்திட்டங்கள் கடப்பாட்டுக் கட்டணங்கள், தாமத கட்டணங்கள் மற்றும் நாணய தளம்பல்கள் மீதான நட்டங்கள் போன்ற சிக்கனமற்ற செலவுகள் ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு நீர் வழங்கல் மீட்டர்களை கொள்வனவு செய்வதற்கு நிதிப்பு முகவரின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு செயற்திட்ட நிதிகள் மூலம் கடப்பட்டுக் கட்டணமாக சபை ரூபா 67 மில்லியன் மேலதிகமாக செலுத்தியிருந்தது. ஆகவே, அந்த ஒப்பந்தங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நீர் மீட்டர்களின் கிரயம் ரூபா 720.98 அல்லது 12.93 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 44,701 மற்றும் 253,009 ஆன தொகை முறையே 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு இறுதியில் இருப்பில் இருந்தது.

(இ) கட்டுவ இறைக்கும் நிலையத்திற்காக ரூபா 45.93 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு இறைக்கும் இல்லம் தொடக்கத்திலிருந்து முறையாக வேலை செய்யவில்லை. சபையானது குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியின் போது அந்த குறைகளை திருத்துவதற்கு ஒப்பந்தகாரர் கவனம் செலுத்தியிருக்காமையால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு சபையினுடைய நிதிகளை பயன்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், குறைபாட்டு காலப்பகுதி 2022 ஏப்ரல் 22 இல் கடந்திருந்த போதிலும் 19 குறைபாடுகளை திருத்துவதற்காகவும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறியதற்காகவும் சபையால் ஏற்பட்ட கிரயத்தை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பஹா, அதனாகல மற்றும் மினுவாங்கொடை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக சீனா அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட கடனிற்கான கடன் தள்ளுபடி காலத்தின் பின்னர், ஐ.அ.டொலர் 45 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணங்கள் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட்டிருந்தது. சீனா அபிவிருத்தி வங்கியால் கைதவிர்க்கப்பட்ட கடனில் ரூபா 16,836.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52 மில்லியன் தொகை அல்லது 29 சதவீதம் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் எஸ்றோ கணக்கிற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 33 மில்லியன் கிரயத்தில் நான்கு நீர் வழங்கல் திட்டங்களால் நிர்மாணிக்கப்பட்ட பதின்மூன்று அலுவலக விடுதிகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஊ) ரூபா 5.5 மில்லியன் மற்றும் ரூபா 9 மில்லியன் பெறுமதியான முறையே இங்கிரிய, வதினகல மற்றும் தமன்ன நீர் வழங்கல் திட்டம் தொடர்பிலான சகல நிர்மாணங்களும் மீளாய்வாண்டு இறுதியில் பயனற்றிருந்ததுடன் அந்த சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கொள்வனவு வழிகாட்டலின் 7.12 ஆம் பந்தியின் பிரகாரம் வினைத்திறனான போட்டியின்மையால் கேள்வி இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும், ஒரே ஒரு கோள்வியாளருக்காக 2019 ஆம் ஆண்டில் ருவான்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முறையே முதலாவது மற்றும் இரண்டாவது கோள்வியாளருக்காக ரூபா 57 மில்லியன் மற்றும் ரூபா 654 மில்லியன் தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட தொகை 2024 மார்ச் 30 வரை கோரப்பட்ட தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், பட்டியல் கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாக FIDIC வழிகாட்டலின் 14.7 மற்றும் 14.8 ஆம் பந்திகளின் கீழ் ஐ.அ.டொலர் 127,851 கோரிக்கை செய்திருந்தார் மேலும், கணக்காய்வாளர்களுடைய கணிப்பீட்டின் பிரகாரம், செயற்திட்ட மீள் கட்டமைப்பிற்காக 20.4 கிமீ முதல் 5.9 கிமீ வரை நீளமான பரிமாற்ற வழி குழாயிடலிற்காக நீளம் குறைத்தமை காரணமாக செயற்திட்டத்தால் ரூபா 55 மில்லியன் (ஐ.அ.டொலர் 171,653.82) மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) குடிநீரில் உப்புநீர் கலப்பதை தடுப்பதற்காக நில்வல உப்புநீர் தடையின் நிர்மாணத்தின் கீழ் ரூபா 5 மில்லியனில் பொருத்தப்பட்ட தடைக்கோவை தொழில்நுட்ப நிபுணர்களின் சிபார்சுகள் மற்றும் இந்த நிர்மாண நோக்கத்தை அடைவதற்கு தடைக்கோவை புதுப்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்ட நில்வல உப்புநீர் தடையின் அபிவிருத்தியின் தாக்கத்தை லங்கா நீரியல் நிறுவகத்தால் வழங்கப்பட்ட அறிக்கைகள் என்பவற்றினை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 8 மில்லியன் கிரயத்தில் விவசாயிகளின் எதிர்ப்பு காரணமாக மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலில் அகற்றப்பட்டிருந்தது. மேலும், உப்புநீர் தடை நிர்மாணம் மற்றும் மாத்தறை மாவட்ட சுற்றாடல் தாக்கத்தில் ஏனைய காரணங்களை சுட்டிக்காட்டி சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் குழுவால் அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. தடைக்கோவைகள் அகற்றப்பட்ட பின்னர்,

சபையின் தரப் பரிசோதனை அறிக்கைகள் நீரில் உப்பு கலந்திருந்ததென காட்டியிருந்தது. ஆகவே, அகற்றப்பட்ட தடை கோவைகளின் கிரயம் வினைத்திறனற்றதாக இருக்கும்.

(ஐ) சபையானது பரஸ்பர ஒப்பந்த இடை நிறுத்தலிற்காக அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மீள் கட்டமைப்பு குழு சிபார்சுகள் மற்றும் பாரிய செயற்திட்டங்களின் ஒப்பிடல் என்பவற்றின் பிரகாரம் பிரதம மந்திரியின் செயலாளரால் வழங்கப்பட்ட 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதிய PMO/DFV 11/2/2/1 ஆம் இலக்க கடிதத்தின் 4.10 ஆம் பந்தியில் வழங்கப்பட்ட நெறிபடுத்தல் படி செயற்திட்டத்தை பூர்த்தியாக்காமல் மாத்தறை கட்டம் IV ஐ பரஸ்பரம் நிறுத்தியிருந்தது. 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு மீதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறிய ஒப்பந்தகாரருக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2024 மார்ச் 31 வரை பரஸ்பர நிறுத்தலிற்கு உடன்பட்டனர். சபையானது காணச் சுவீகரிப்பு தாமதம் காரணமாக பிரதான சுத்திகரிப்பு பொறியின் தொடங்குவதிலுள்ள தாமதத்தால் ஒப்பந்தகாரிற்காக தாமதக் கட்டணமாக ரூபா 72.7 மில்லியன் செலுத்தியிருந்தது. கொள்வனவு வழிகாட்டலின் 2.3.1(ஆ) இல் வேண்டப்பட்வாறு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சபை கட்டாயப்படுத்தப்பட்டதுடன் தாமதக் கட்டணம் செலுத்துவதில் தாக்கம் இருந்தது. மேலும், எடுக்கப்பட்ட தீர்மானம், முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதிலுள்ள பிரச்சனைகள் மற்றும் திட்டங்களை பின்பற்றாமை என்பவற்றின் விளைவால் செயற்திட்ட தாமதங்களில் வித்தியாசமான நாணயமாற்று வீதங்களால் ரூபா 1,715 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்ட ஒப்பந்தத்தை நிறுத்திய பின்னர் ஒப்பந்த ஊழியர்களிற்காக ஒரு வருட காலத்திற்காக ரூபா 30 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3. ஏனைய கணக்காய்வு விடயங்கள்**

(அ) ரூபா 2,344.78 மில்லியன் கூட்டுதொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேற்குறித்த வியாபார கடன்பட்டோரில் மேல் மத்தி, தொற்கு, மேல் வடக்கு மற்றும் மேல் தெற்கு பிராந்தியங்களில் 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. புதிய இணைப்பு கடன்பட்டோர் மூன்று மாதங்களிற்குள் 3 தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 32.5 மில்லியன் தொகை 3 ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்தது.

(ஆ) பாராளுமன்ற உறுப்பினர்களுடைய அரசாங்க விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 23 நீர் இணைப்புகள் தொடர்பில் ரூபா 3.5 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியில் நீண்ட காலம் அறவிடப்படாது இருந்தது.

(இ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,886.7 மில்லியனாகும். அதில், 69 சதவீதத்திற்கு சமமாகவிருந்த ரூபா 1,293 மில்லியன் தொகை அறவிடப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஈ) 20 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்த காலி நகர சபையின் இரண்டு சட்ட விரோத இணைப்புகள் தொடர்பில் ரூபா 1.76 மில்லியன் மற்றும் 6 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்த கொழும்பு மாநகர சபையின் இரண்டு சட்ட விரோத இணைப்புகள் தொடர்பில் ரூபா 28 மில்லியன் நிலுவையாகவிருக்கின்ற மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சபை வாடிக்கையாளர் பட்டயத்தின் பிரகாரம், புதிய இணைப்புகள் திகதியின் 30 நாட்களிற்குள் வாடிக்கையாளருக்கு முதலாவது பட்டியல் வழங்க வேண்டும். எவ்வாறாயினும், 2024 மார்ச் 30 இல் உள்ளவாறு 129 சந்தர்ப்பங்களில் கேட்டை- கொலன்னாவ, கொழும்பு தெற்கு, கவுதார- மொரந்துடுவ மற்றும் மகரகம- கேஸ்வேவ பிராந்தியத்தில் முதலாவது பட்டியல் வழங்குகையில் 89 நாட்கள் மதல் 160 நாட்கள் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய தாமதம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) முன்னாள் செயற்பாடற்ற ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 17 மில்லியன் தொகைான கடன்கள் மற்றும் முற்பணங்ள் 2023 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், கடன்களை பெற்றிருந்த மேற்குறித்த ஊழியர்கள் கடன்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை பெறவேண்டிய தொகைகளை அறவிடாமல் ஓய்வில் சென்றிருந்தனர்.

(எ) பேரேட்டு தலைப்பு இல. 246/0 இன் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்த முற்பணங்களின் ரூபா 1,652 மில்லியனில் ரூபா 608 மில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. அந்த முற்பணங்களின் அறவீட்டுத் தன்மை அடையாளம் காணப்பட்ட ரூபா 10 மில்லியன் பெறுமதிக்காக தொடரப்பட்ட சட்ட வழக்குகள் பற்றி கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளையும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், நான்கு ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 3.1 மில்லியன் தொகை செயலாற்றல் பிணைமுறியின்மையால் அறவிட

முடியாதிருந்ததுடன் அந்த நிலுவைகளை தீர்ப்பதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 60 மில்லியன் கூட்டுத் தொகையான மீளளிக்க வேண்டிய குறுகியகால வைப்புகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்ததுடன் அவற்றில் ரூபா 12 மில்லியன் தொகை உரிய ஆவணங்கள் இன்மையால் அறவிட முடியாதிருந்தது. றைகம்புற கிறீன் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வலய செயற்திட்டத்தின் கீழ் சேதமடைந்த வீதியை புதுப்பிப்பதற்கு வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகை செயற்திட்டம் பூர்த்தியாக்கபபட்ட போதிலும் அறவிடப்படாதிருந்தது. மேலும், உரிய அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4 மில்லியன் தொகையான முற்பணம் பத்து ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் நிலுவையாகவிருந்தன. எவ்வாறாயினும், தேசிய பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு உரிய அமைச்சு எடுக்கப்பட்டிருக்காததிலிருந்து முற்பணங்களின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(ஐ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கொள்வனவுகளில் இடைப்போக்கிலள்ள இருப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இடைப்போக்கிலுள்ள இருப்புகள் முறையே ரூபா 1,246 மில்லியன் மற்றும் ரூபா 4,827 மில்லியனாக இருந்தது. அந்த இருப்புகளில் ரூபா 642 மில்லியன் தொகையான உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டவை தெளிவாக்கப்படாமல் மூன்று மாதங்களிற்கு மேல் இருந்ததுடன் ரூபா 3,070 மில்லியன் தொகையான இறக்குமதி செய்யப்பட்ட இடைப்போக்கிலுள்ள இருப்புகள் தெளிவாக்கப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேல் இருந்தது.

(ஒ) கிரய நிலையங்களிற்கு இடையில் மாற்றப்பட்டிருந்த ரூபா 41 மில்லியன் தொகையான சொத்துக்கள் ஆரம்ப கிரய நிலைய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த சொத்துக்களின் பொறுப்புரிமை அந்த சொத்துக்களை பயன்படுத்தியிருக்காத கிரய நிலையங்களுடன் எடுக்கப்பட்டது.

(ஓ) மூன்று களஞ்சியங்களில் ரூபா 41 மில்லியன் தொகை இருப்பு பெறுமதிகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருளிருப்பு முகாமைத்துவ முறைமைக்கு பதியப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பழுதடைந்த, பயன்படுத்த முடியாத மற்றும் நகராதவையான முறையே ரூபா 2.6 மில்லியன், ரூபா 173 மில்லியன் மற்றும் ரூபா 552 மில்லியன் கூட்டுத்தொகை 2023 திசெம்பர் 31 வரை கைதவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள்

எடுக்கப்படாமல் இருந்ததுடன் இருப்பு தேக்கிவைத்த காலப்பகுதியை இனங்காண்பதற்கு சபையால் காலப்பகுப்பாய்வ வழங்கப்பட்டிருக்கவில்லை.

(க) சபையால் கைதவிர்க்கப்பட்ட 196 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் சபையின் பெயரின் கீழ் இன்னமும் பதியப்பட்டிருக்காததுடன் பதிவுசெய்யப்பட்ட 23 வாகனங்கள் அடையாளம் காணமுடியாதிருந்தது.

(கா) கடன்பட்டோருக்கு அனுப்பபட்ட உறுதிப்படுத்தல்களை பகுப்பாயும் போது, ரூபா 347 மில்லியன் கூட்டுத் தொகையுடைய 160 கணக்குகளில் ரூபா 58 மில்லியன் பெறுமதியுடைய 36 கணக்குகள் மாத்திரம் 2023 ஏப்ரல் 30 இல் உறுதிப்படுத்தியிருந்தனர். ரூபா 2 மில்லியன் பெறுமதியுடைய ஒரு கணக்கு அமைவிடத்தை கண்டுபிடிக்க முடியாமையால் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் ரூபா 288 மில்லியன் பெறுமதியுடைய 123 கணக்குகள் அல்லது 76.87 சதவீதமானவை பதிலளித்திருக்கவில்லை. ஆகவே, பெரும்பாண்மையான கடன்பட்டோரின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(கி) 2023 ஆம் ஆண்டின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை பிரகாரம், எட்டு கிரய நிலையங்கள் ரூபா 106 மில்லியன் பெறுமதியுடைய இறையிலாதன கட்டிடங்கள், கட்டமைப்பு, உட்கட்டமைப்பு, கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள், அளவை உபகரணங்கள், நடமாடும் உபகரணங்கள் போன்றன சேதமடைந்திருந்தமை, பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டமை மற்றும் அழிவடைந்திருந்தமையென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரையும் அந்த விடயங்கள் கைதவிர்ப்பதற்கும் கணக்கேடுகளிலிருந்து அகற்றப்டுவதற்கும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) சபையானது மூன்று அண்டுகளிற்கு மேலாக இருந்த ரூபா 30 மில்லியன் தொகையான இருப்பு குறைவை தெளிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) இருப்பு மெய்மையாய்வின் போது பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காத பதின்மூன்று பிராந்திய நிலையங்களிலுள்ள ரூபா 70 மில்லியன் பெறுமதியான ஏனைய இருப்பு விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பொருளிப்பாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகவே, அந்த இருப்புக்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(கூ) உள்ளக கணக்காய்வு பிரிவால் வழங்கப்பட்ட எழுபது கணக்காய்வு வினாக்கள் மற்றும் வெளிவாரி கணக்காய்வு பிரிவால் வழங்கப்பட்ட ஐந்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதிலளித்தல்கள் வழங்கிய திகதியிலிருந்து மூன்று

மாதங்களிற்கு மேலாக தாமதப்பட்டிருந்தது. ஆகவே, சபையின் உள்ளக கட்டுப்பாட்டை முன்னேற்றுவதற்கான இயலுமை குறைவாக இருந்தது.

(கெ) சபையின் உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு சபையில் மனித வளம், வழங்கல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிற்காக அனுமதிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூல் இருக்கவில்லை. மேலும், கணக்காய்வு, செயற்திட்டங்கள், நிலக்கீழ் நீர் கையாளல், கழிவகற்றல், வடிவமைப்பு மற்றும் RSC, OIC அலுவலகம் மற்றும் முகாமையாளர் அலுவலகம் போன்ற துறைகளிற்காக கிடைத்த செயற்பாட்டு கைநூல் 1989 இலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(கே) அக்கரைபற்று முகாமையாளர் அலுவலகத்தில் இருந்த ரூபா 10 மில்லியன் பெறுமதியான வோக்கோளிலுள்ள கமரா 2017 இலிருந்து பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த பயன்படுத்த முடியாத கமராவிற்கான பெறுமானத்தேய்வு கைதவிர்க்கப்படாமல் வருமான கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கமராவின் பதிவழிப்பு பெறுமதி ரூபா 6,159,000 ஆக உள்ளது.

(கை) சபையானது பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட 2011 பெப்ரவரி 18 ஆந் திகதிய PO 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் தாபிக்கப்பட்ட இடமாற்ற கொள்கையின் வேண்டுகைகளும் இணங்கியிருக்கவில்லை. மாதிரி கணக்காய்வு செவ்வையின் போது, மேல் தெற்கு பிராந்தியத்தின் 591 ஊழியர்களில் 273 ஊழியர்கள் வேண்டப்பட்ட 05 ஆண்டுகளிற்கு முரணாக ஒரே இடத்தில் 07 ஆண்டுகள் மற்றும் 38 ஆண்டுகளிற்கு இடையில் வேலை செய்கின்றனர். மேலும், மனிதவளப் பிரிவு தீர்மானம் எடுக்கின்ற நோக்கங்களிற்காக உரிய பிரிவுகளிற்கு இமாற்றப்பட்ட திகதி, பதவியுயர்வு திகதி போன்றன ஒவ்வொரு ஊழியர்களிற்காகவுமான தரவு அடிப்படை பேணியிருக்கவில்லை.

(கொ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,625 ஊழியர் குறைவும் 104 ஊழியர் மிகையும் உள்ளதுடன் மொத்தமாக 21 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. எவ்வாறாயினும், சபையானது சபையின் மனிதவள வேண்டுகைகளை மேற்கொள்வதற்கு வேண்டப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்திருக்கவில்லை.

(கோ) சபையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.7 மற்றும் 07 ஆம் பந்தி மற்றும் 2023 சனவரியிலிருந்தான அதன் திருத்தங்கள் என்பவற்றிற்கு முரணாக மாத்தறை கட்டம் IV

செயற்திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட பதினொரு ஊழியர்களை சபையின் கடமைகளிற்காக ஒதுக்கப்பட்டு வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# சுருக்க வடிவங்கள்

| | |
|---|---|
| AC | - அஸ்பெஸ்டர் சீமெந்து ∴ கணக்காய்வு குழு |
| ACMA | - இணைந்த பட்டய முகாமைத்துவ கணக்காளர் |
| ACS | - அவுஸ்திரேலியா கணினி சபை |
| ADB | - ஆசிய அபிவிருத்தி வங்கி |
| ADRA | - அட்வன்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண முகவராண்மை |
| AE | - பிரதேச பொறியியலாளர் |
| AFD | - பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை |
| AGM | - உதவி பொது முகாமையாளர் |
| AIWSP | - ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் |
| AWSSIP | - அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்திசேமிப்பு செயற்திட்டம் |
| BMICH | - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |
| BOC | - இலங்கை வங்கி |
| BOQ | - அளவீட்டு பட்டியல் |
| BOI | - முதலீட்டுச் சபை |
| CBO | - சமுதாய அடிப்படையிலான அமைப்பு |
| CCN | - கொழும்பு நகரம் வடக்கு |
| CCS | - கொழும்பு நகரம் தெற்கு |
| CCTV | - மூடப்பட்ட சுற்றுலா தொலைக்காட்சி. |
| CE | - பிரதம பொறியியலாளர் |
| CEE | - பிரதான பொறியியலாளர்கள் |
| CEA | - மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| CEB | - இலங்கை மின்சார சபை |
| CEDE | - இயலளவு மேம்பாட்டு மற்றும் விநியோக விரிவாக்கம் |
| CEO | - பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் |
| CETRAC | - நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் |
| CIA | - பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| CIMA | - பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் |
| CHPB | - வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிடத்திற்கான நிலையம் |
| CI | - உருக்கு இரும்பு |
| CIPM | - ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனம் |
| CKDU | - நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் |
| CMC | - கொழும்பு மாநகர சபை |
| CP | - கூட்டிணைந்த திட்டம் |
| CRIP | - காலநிலை மாற்ற முன்னேற்ற செயற்திட்டம் |
| CRIWMP | - காலநிலை எழுச்சி ஒருங்கிணைந்த முகாமைத்துவ செயற்திட்டம |
| CS | - கூட்டிணைந்த சேவைகள் |
| cu.m | - கன மீற்றர் |
| DAB | - பிணக்கு தீர்ப்புச் சபை |
| DC | - நன்கொடை ஒருங்கிணைப்பு |
| DEWATS | - பன்முகப்படுத்திய கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை |
| DGM | - பிரதி பொது முகாமையாளர் |
| DI | - முலாம் பூசப்பட்ட இரும்பு |
| DMA | - மாவட்ட மானியிடல் பிரதேசம் |
| DONCWS | - தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் |
| DS | - மாவட்ட செயலகம் |
| DSC | - வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு ஆலோசனை |
| DSD | - பிரதேச செயலக பிரிவு |
| DZUWS | - உலர் வலய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுச் செயற்திட்டம் |
| EIA | - சுற்றாடல் தாக்க மதிப்பீடு |
| EPZ | - ஏற்றுமதி செயற்படுத்தல் வலயம் |
| EWSP | - எட்டம்பிட்டிய நீர் வழங்கல் செயற்திட்டம் |
| GCWWMII | - கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் |
| GIS | - புவியியல் தகவல் முறைமை |
| GKWRC | - குருநாகல் பெரும்பாக நீர் மீட்டெடுப்பு நிலையம் |
| GM | - பொது முகாமையாளர் |
| GMWSP | - மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் |
| GN | - கிராம சேவகர் |
| GND | - கிராம சேவகர் பிரிவு |
| GOSL | - இலங்கை அரசாங்கம் |
| GPOBA | - வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர் |
| GR | - நிலக்கீழ் நீர்த் தேக்கம் |
| HDPE | - உயர்ந்த அடர்த்தியான பொலி எத்திலீன் |
| HRM | - மனித வள முகாமைத்துவம் |
| IA | - உள்ளக கணக்காய்வு |
| IEC | - சர்வதேச மின்னியல் தொழல்நுட்ப ஆணைக்குழு |
| IR | - கைத்தொழில் உறவுகள் |
| ICT | - தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பம் |
| ICTAD | - நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் |
| IWA | - சர்வதேச நீர் மன்றம் |
| IWSP | - ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் |
| IEE | - ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை |
| IESL | - இலங்கை பொறியியல் நிறுவகம் |
| IMS | - பொருட் பட்டியல் முகாமைத்துவ முறைமை |
| IoT | - இணையதள சாதனம் |
| ISO | - நியமப்படுத்தலிற்கான சர்வதேச அமைப்பு |
| IT | - தகவல் தொழில்நுட்பம் |
| ITEC | - இந்தியன் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டமைப்பு |
| IPVPN | - இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு |
| JICA | - ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் |
| JP | - சமாதான நீதவான் |
| JPY | - ஜப்பான் யென் |
| KCWMP | - கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் |
| Km | - கிலோ மீட்டர் |
| KRB | - களனி வலது கரை |
| LBF | - உள்நாட்டு வங்கி நிதி |
| LKR | - இலங்கை ரூபா |
| M&E | - இயந்திரவியல் மற்றும் மின்னியல் |
| MBA | - வியாபார நிர்வாக முதுகலைமாணி |
| MD&T | - மனித வலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி |
| MIS | - முகாமைத்துவ தகவல் முறைமை |
| MOU | - புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MSC | - விஞ்ஞான முதுகலைமானி |
| MMDC | - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |
| MG | - மெகா வாட்ஸ் |
| NAITA | - தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை |
| NBRO | - தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனம் |
| NC | - வடக்கு மத்திய |
| NCP | - வட மத்திய மாகாணம் |
| NDB | - தேசிய அபிவிருத்தி வங்கி |
| NDT | - தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா |
| NGOS | - அரச சார்பற்ற அமைப்புகள் |
| NHDA | - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை |
| NIBM | - தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் |
| NPD | - தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| NRW | - வருமானமற்ற நீர் |
| NWSDB | - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை |
| O&M | - செயற்பாடு மற்றும் பராமரிப்பு |
| OIC | - நிலையப் பொறுப்பதிகாரி |
| PAM | - பொலியக்கிரமிட்ஸ் |
| PE | - பொலி எத்தீன் |
| PVC | -ீழடலனைலைட உாடழசனைந |
| (PVT)Ltd | - வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் |
| P&D | - திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு |
| P&P | - கொள்கை மற்றும் திட்டமிடல் |
| PAC | - செயற்திட்ட நெறிப்படுத்தல் குழு |
| PDMRC | - திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு |
| PMU | - செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு |
| PRDA | - மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| PTB | - பிசிக்காலிச் உத்தி பவுண்டேசன்டல் |
| PWD | - பொது வேலைகள் திணைக்களம் |
| R&D | - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |

RAC - ஆராய்ச்சி அனுமதி குழு
RC - ஆபத்துக் குழு
RDA - வீதி அபிவிருத்தி அதிகாரசபை
RDB - கிராமிய அபிவிருத்தி வங்கி
RFP - முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RIDEP - கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்
RM - பிராந்திய முகாமையாளர்
RO - உவர்ப்பு பிரித்தெடுப்பு
RSC - பிராந்திய ஆதார நிலையம்
WN - பிராந்திய ஆதார நிலையம் (மேல் வடக்கு)
WS - பிராந்திய ஆதார நிலையம் (மேல் தெற்கு)
N - பிராந்திய ஆதார நிலையம் (வடக்கு)
NW - பிராந்திய ஆதார நிலையம் (வட மேல்)
RWS - கிராமிய நீர் வழங்கல்
SBD - நியம கேள்வி ஆவணங்கள்
SCADA - மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு சேகரிப்பு
SCAPC - நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள பெருமைக் குழு
SDG - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
SEP - துப்பரவேற்பாட்டு மேம்பாட்டு செயற்திட்டம்
SHIFT - நகரங்களிற்கான துப்பரவேற்பாடு மற்றும் தூய்மை கட்டுப்பாடு
SIDA - சுவீடன் சர்வதேச அபிவிருத்தி
SL - இலங்கை
SLAS - இலங்கை நிர்வாக சேவை
SLIDA - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்
SLSI - இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SOES - அரச உடமை தொழில் முயற்சிகள்
SMS - குறுகிய செய்தி சேவை
ST - சிறிய நகரம்
STP - கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதி
TA - தொழில்நுட்ப உதவி
TCE - மொத்த மதிப்பீட்டுச் செலவு
THM - வுாையடழஅநவாயநெ
TOR - நிபந்தனை குறிப்புரைகள்
TOT - பயற்சியாளர்களின் பயிற்சி
UDA - நகர அபிவிருத்தி அதிகாரசபை
UK - ஐக்கிய இராச்சியம்
UNDP - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
UNICEF - ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்களின் அவசர நிதியம்
UPVC - பிளாஸ்ரிக் இடப்படாத பொலிவினல் குளோரைட்டு
USD - ஐக்கிய அமெரிக்க டொலர்
VPN - விரைவான தனியார் வலையமைப்பு
VPP - வவுனியா பங்குபற்றல் திட்டமிடல்
VAT - பெறுமதிசேர் வரி
WaSSIP - நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுச் செயற்திட்டம்
WDCE - நீர் மற்றும் அபிவிருத்தி கருத்தரங்கு மற்றும் கண்காட்சி
WHO - உலக சுகாதார அமைப்பு
WSP - நீர் வழங்கல் செயற்திட்டம் ∴நீர் பாதுகாப்பு திட்டம்
WSS - நீர் வழங்கல் திட்டம்
WTP - நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி
WWDS - கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP - கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி

## ප්‍රධාන කාර්යාලය

ජා.ජ.හා.ජ. මණ්ඩලය
ගාලු පාර,
රත්මලාන
ශ්‍රී ලංකාව

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com

## தலைமை அலுவலகம்

தே,நீ.வ.வ.ச
காலி  வீதி,
இரத்மலானை,
இலங்கை.

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com

## Head Office

NWSDB,
Galle Road,
Ratmalana,
Sri Lanka.

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com